உ

## முகவுரை

### “திருச்சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி”

வரலாற்றுப் புகழ் பெற்றதும், தெய்வீகக் கலைகளுக்கு பிறப்பிடமாகவும், ஆன்மீகத்தின் உறைவிடமாகவும் விளங்குகின்ற அழகின் திருநகரம் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மாநகரம் ஆகும்.

இந்நகரின் நடுவில் வற்றாத ஜீவநதியான காவிரியின் தென்கரையில் உயர்ந்து நிற்கும் மலைப்பாறையின்மீது கம்பீரமாக அமைந்து காண்போர் கருத்தை கவரும் வண்ணம் உள்ளது அருள்மிகு மட்டுவார்குழலி உடனுறை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில். இங்கு இறைவன் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார்.

“ஒருதலம் இறந்தவர்க்கு உறுதி நல்கும்
ஒருதலம் பிறந்தவர்க்கு உதவும் நற்கதி
இருதலம் தம்மினும் எய்தும் யாவையும் தருதலம்”

-செவ்வந்தி புராணம் 220 பாடல்

இறப்பவர்க்கு முக்திதரும் காசியைவிடவும், பிறப்பவர்க்கு முக்திநல்கும் திருவாரூரை விடவும் பெருமை மிகுந்த சிராமலைபோல அருமை வாய்ந்த திருத்தலம் அவனியில் வேறு எங்கும் இல்லை என்னும் சிறப்பினைக் கொண்டது இத்திருத்தலம். இதனை பூலோகக் கைலாயம் என்றும் சைவசமயம் போற்றுகின்றது.

திருக்கையிலை மலையில் சிவபெருமானும் உமையம்மையும் வீற்றிருப்பதைப்போல அருள்மிகு தாயுமானசுவாமி மட்டுவார்குழலம்மையும் இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பதுடன், முழுமுதலாகிய விநாயகப்பெருமான் மலை அடிவாரத்தில் மாணிக்கவிநாயகராகவும், மலை உச்சியில் உச்சிவிநாயகராகவும், அருள்பாலித்து வருகின்றனர்.

பழமையான சிவாலயம் ஆன இத்திருத்தலம் 274-சைவத்தலங்களுள் ஈடு இணையற்ற தலம். “தென்கையிலாயம் என்றும” தட்சிணகையிலாயம் என்றும்” அழைக்கப்படும் பெருமையை கொண்டது. கி.பி.7-ம் நூற்றாண்டைச்சேர்ந்த மகேந்திரவர்மனால் மலையின் மேலும், கீழும் குடையப்பெற்ற இரு குகைக்கோயில்களும் மேல்குகையில் உள்ள கங்காதரரின் சிற்பமும் மற்றும் தமிழிலும், கிரந்தத்திலும் உள்ள பல கல்வெட்டுகளும் இந்த “கற்கோயிலுக்கு பெருமைசேர்க்கும் சொற்கோயில்களாக”

உள்ளன. இத்திருக்கோயில்களின் சித்திரமண்டபம் திருக்குற்றாலத்தில் உள்ள சித்திரைசபை போல கூரைச்சுவர்கள் உட்பட எங்குபார்த்தாலும், அரிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சிவபெருமானது 25 வடிவங்கள் தாயுமானவர் உறையூரை அழித்த வரலாறு அழகிய ஓவியமாகவும், தாயாக வந்த காட்சி ஒரு தூணில் அழகிய சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளன.

மேலும் மேற்கூரையில் இருந்து தொங்கக்கூடிய ஒரே கல்லாலான கற்சங்கிலி, சிங்கத்தின் வாய்க்குள் கீழே விழாமல் உருளக்கூடிய பந்து, தொங்கும் தாமரைப்பூவில் தேன் உண்ணும் கிளிகள் முதலியவை சிறந்த கருங்கல் வேலைப்பாடாகும்.

திருமுறைகளால் சிறப்பிக்கப்பெற்ற பல அற்புதங்களும் அதிசயங்களும் நிகழ்ந்த ஆன்மீக சிறப்புமிக்க தலமாகவும், பாடல்பெற்ற ஒப்பற்ற பிரார்த்தனைத் தலமாகவும் விளங்கும் அருள்மிகு தாயுமானசுவாமி திருத்தலவரலாறு என்னும் இந்நூல் இத்தலத்தின் பல பெருமைகளையும், சிறப்புகளையும் உள்ளடக்கிய ஒரு ஆன்மீக கருவூலமாக உள்ளது.

"சிராப்பள்ளி மேவிய நாயனார் என நம்வினை நாசமே" என திருநாவுக்கரசு நாயனார் வாக்கிற்கிணங்க இந்நூலை படிக்கும் மெய்யன்பர்கள் வினைகள் நீங்குவதுடன் இம்மை மறுமை பேர்களை பெறுவர்.

**திருக்கோயில் அமைவிடம்:-**

காவிரி நதியின் தென்கரையில் திருச்சியின் மையப்பகுதியில் உயர்ந்து நின்று எத்திசையிலும் காண்போரைக் கவரும் வண்ணம் கம்பீரமாக இருப்பது மலைக்கோட்டைக் கோயில் என வழங்கப்படும் அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலாகும்.

மார்க்கம் (வழித்தடம்):-

**விமானதடம்:-**

திருக்கோயிலில் இருந்து 10-கி.மீ தொலைவில் உள்ளது செம்பட்டு என்ற விமான நிலையம். இவ்விடத்தில் இருந்து திருக்கோயிலுக்கு வர பேருந்து மற்றும் எண்ணற்ற ஊர்தி வசதிகள் உண்டு.

**புகைவண்டி தடம்:-**

1. திருச்சிராப்பள்ளி சந்திப்பு (ஜங்ஷன்) திருக்கோயிலில் இருந்து 5 கி.மீ தொலைவு.
2. திருச்சி டவுன்ஸ்டேஷன் (திருக்கோயிலில் இருந்து (1 கி.மீ) தொலைவு).
3. திருச்சிகோட்டை ஸ்டேஷன் (திருக்கோயிலில் இருந்து (1. கி.மீ) தொலைவு).

மேற்கண்ட இவ்விடங்களில் இருந்து திருக்கோயிலுக்கு வர பேருந்து மற்றும் பிற ஊர்தி வசதிகளும் உண்டு.

**பேருந்து நிலையம்:-**

1. மத்திய பேருந்து நிலையம் (திருக்கோயிலில் இருந்து 5. கி.மீ தொலைவு)
2. சத்திரம் பேருந்து நிலையம் (திருக்கோயிலில் இருந்து (1. கி.மீ தொலைவு).
3. மெயின்காட்கேட் (தெப்பகுளம்) இவ்விடத்தில் இருந்து ½ கி.மீ தொலைவு)

## திருக்கோயில் திருத்தலக் குறிப்புகள்

1. இறைவன் : அருள்மிகு தாயுமான ஈசர் (சுயம்பு) என்ற மாத்ருபூதேஸ்வரர்.
2. இறைவி : அருள்மிகு மட்டுவார் குழலம்மை என்ற சுகந்த குந்தளாம்பிகை.
3. நுழைவு வாயில் விநாயகர்: அருள்மிகு மாணிக்க விநாயகர்.
4. மலைமேல் விநாயகர்: அருள்மிகு உச்சிவிநாயகர்.
5. தலமரம் : வில்வமரம்.
6. தல ஆகமம் : காமிகம் (ஆறுகால பூஜைகள் நாள்தோறும் நடைபெறுகிறது).
7. தலதீர்த்தம் : பிரம்மதீர்த்தம் (சோமரோகணி), சிவகங்கை, காவிரி, நன்றுடையான், தீயதில்லான்.
8. தென்கயிலாயம் எனப் போற்றப்படும் இத்திருத்தலத்தில் இறைவன் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார்.
9. மிகப்பெரிய லிங்கமாக (தமிழகத்தின் நான்காவது பெரிய லிங்கம்) மேற்கு பார்த்த நிலையில் எழுந்தருளி உள்ளார்.
10. சைவ சமய குரவர்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் மூவரால் பாடல் பெற்றது. ஐயடிகள் காடவர்கோன், அருணகிரிநாதர், தாயுமானஅடிகள், ஆகியோராலும் பாடல்பெற்ற சிறப்பைக் கொண்டது.
11. புவியியல் ஆய்வுப்படி இம்மலை 3500-பில்லியன் ஆண்டுகள் பழமையானது. இம்மலைமேல் உள்ள பாறைகள் மீது மூன்று தள கட்டிட அமைப்பைக் கொண்டு உலகில் வேறு எங்கும் இல்லாத அதிசயமாக, தொன்மையான கட்டிடக்கலைக்கு சான்றாக உள்ளது.
12. நவகிரகங்கள் சூரிய பகவானை பார்த்தவாறும், சூரிய பகவான் நடுவில் தன்தேவியரான உஷா, பிரத்யுஷா உடன் எழுந்தருளி உள்ளதால் இங்குள்ள நவகிரகங்களை வழிபட்டால் நவகிரக தோஷம் நிவர்த்தியாகும்.
13. இத்தலத்தில் ஜுரகரேஸ்வரரை மூன்றுதலை, மூன்றுகால்கள், மூன்றுகைகளை உடைய அபூர்வ மூர்த்தியை வழிபட்டால் வெம்மை, நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் குளிர்ஜுரம் நீங்கும்.
14. கி.பி. 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த மகேந்திரவர்மனால் குடையப் பெற்ற இரண்டு குடைவரைக் கோயில்கள் இங்கு உள்ளது.
15. சோழர், பல்லவர், பாண்டியர், பிற்காலச்சோழர், நாயக்கர், மராட்டியர் காலக்கட்டிடக்

கலைப்பாணிகளைக் கொண்டுள்ளது.

16. இத்திருக்கோயில் சித்திரமண்டபத்தில் கற்சிலைகள், கற்தூண்கள், கற்சங்கிலிகள், கல்பந்துகள், பல யாளிகள் மற்றும் இறைவனின் நுண்ணிய பருப்பொருள் வடிவங்கள் பல வடிவங்களாக வரையப்பட்டுள்ளன.

17. <u>ஏழு வகையான எழில் மண்டபங்கள்:-</u>
ஆயிரங்கால் மண்டபம், வாகன மண்டபம், மீனாட்சிசுந்தரேஸ்வரா், நூற்றுக்கால் மண்டபம், சகஸ்ரலிங்கமண்டபம், சித்திரமண்டபம், மணிமண்டபம், பதினாறுகால் மண்டபம்.

18. இத்தலத்தில் மகாலெஷ்மிக்கு என்று தனி சன்னதி உள்ளது. நின்ற திருக்கோலத்தில் உள்ள இம்மகாலெஷ்மியை வழிபாடு செய்தால் அா்ச்சனை செய்து வழிபட்டால் கடன்தீர்ந்து செல்வம் சேரும்.

19. ஆண்டுதோறும் பங்குனித் திங்கள் 23,24,25 நாட்களில் தாயுமான ஈசா் திருமேனி மீது மாலையில் கதிரவனின் கதிர்கள் பட்டு பொன்வண்ணமாக பெருமான் ஒளிரும் சூரிய பூஜை கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

20. திருமூலா் மரபில் வந்த சாரமாமுனிவா் இறைவனை செவ்வந்தி மலா்களால் வழிபட்ட திருத்தலம்.

21. மாணிக்க விநாயகா் சன்னதி முதல் தாயுமானவா் சன்னதி வரை, படிக்கட்டுகள் கருங்கல்லால் மூடப்பட்ட தள அமைப்பைக் கொண்டது.

22. இம்மலைக்கோயிலை நான்கு திசையில் இருந்து பார்க்கும் பொழுது நான்குவித தோற்றச் சிறப்பைத் தரும்.

23. உச்சிவிநாயகரின் சன்னதி வாயிலில் இருந்த படிக்கட்டுகளும், மலையின் தோற்றமும், விநாயகரின் துதிக்கைப் போல் இயற்கையிலேயே அமைந்துள்ளது.

24. சங்க இலக்கியமான அகநானூற்றில் குறுங்குடி மருதனாா் என்னும் சங்கப் புலவா் ‘கரங்கிசை விழவின் உறந்தைக் குணாது நெடும் பெரும் குன்றம்’ பல்வேறு இசைக்கருவிகள் ஒலிக்க பலவிழாக்கள் நடைபெறும் உறையூரின் கிழக்குதிசையில் செம்மாந்து நிற்கும் நீண்ட பெரிய குன்று என சிறப்பித்துப் பாடியுள்ளாா்.

25. தெப்ப உற்சவம் நடக்கும் சோமரோகணி என்ற ‘பிரம்மதீர்த்தம்’ கரிகால் பெருவளத்தானால் வெட்டப்பட்டது. திருக்கோயில் திருக்குள நீளம் 611-அடி அகலம் 330-அடி.

26. ஸ்ரீ ஆதிசங்கரா் அருளிச்செய்த “சௌந்தரியலகரி” பாடல்கள் அம்பிகை சன்னதியின் சுவரில் கல்வெட்டுக்களாக பொறிக்கப்பட்டுள்ளன.

27. ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்திவிழா, பங்குனி தெப்பத்திருவிழா, சித்திரை மாதம் தேர்த்திருவிழா முதலியவை இத்தலத்தில் சிறப்பான பெருந்திருவிழா ஆகும். ஆடி மாதத்தில் ஆடிப்பூரவிழா, புரட்டாசி மாதத்தில் நவராத்திரிவிழா, ஐப்பசியில் கந்தசஷ்டி விழாவும், கார்த்திகையில் சோமவார சங்காபிஷேக விழாவும், கோடைவிழா ஆகிய விழாக்கள் சிறப்பான விழாக்கள் ஆகும்.

ஒவ்வொரு மாதம் பௌர்ணமி நாள் மற்றும் தமிழ் மாதப்பிறப்பு நாட்களில், இம்மலையை வலம் வருபவர்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாகும். மாதந்தோறும் வரும் பௌர்ணமி தினத்தன்று அருள்மிகு மாணிக்க விநாயகர் சன்னதியில் ஓதுவார் தேவாரம் பாடி பௌர்ணமி கிரிவலம் தொடங்கப் பெற்று சேவார்த்திகள் ஆயிரக்கணக்கில் நடந்து மலையினை கிரிவலமாக என்.எஸ்.பிரோடு, தெப்பக்குளம், நந்திகோயில் தெரு, வடக்கு ஆண்டார் தெரு, கிழக்கு ஆண்டார் தெரு, சின்னகடைவீதி மற்றும் திருக்கோயில் அருள்மிகு கல்யாணவிநாயகர் சன்னதியில் நிறைவு பெறுகிறது. இவ்வாறு கிரிவலம் வருவதால், மேலும் மனநலமும் ஆன்மநலமும் உண்டாகும்.

28. இங்குள்ள முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் “சிராப்பள்ளி திருப்புகழ்” பாடியுள்ளார். தாயுமானஅடிகள் தட்சிணாமூர்த்தியை சிறப்பித்து பாடியுள்ளார். வேம்பையர் கோன் நாராயணன் இயற்றிய ‘சிராமலை அந்தாதியும்’ சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய ‘செவ்வந்திபுராணம்’ மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய ‘யமக அந்தாதி’ இத்தலத்தின் சிறப்பை விளக்கும்.

29. இராமபிரான் தனது நினைவாக கொடுத்த விமானத்துடன் கூடிய அரங்கநாதரின் கிடந்த கோலசிலையை, விபீஷணர் இலங்கைக்கு கொண்டு செல்லும் வழியில் இத்தல உச்சிவிநாயகரால் தடுக்கப் பெற்று காவிரியின் வடகரையில், உள்ள திருவரங்கத்தில் நிலைபெற்றார்.

30. மலை அடிவாரத்தில் மாணிக்கவிநாயகர் சன்னதி, மலையின் நடுவில் தாயுமானவர் சன்னதி மற்றும் அம்மன் சன்னதி, மலையின் உச்சியில் உச்சிவிநாயகர் சன்னதி என மூன்று சிகரங்களைக் கொண்டுள்ளது.

31. நவீனகருவிகள் இல்லாத அன்றைய காலத்திலேயே குன்றின் மேல் கலையழகு மிக்க சிற்பங்களுடன் 273-அடி உயரத்தில் 417-படிகளுடன் இக்கோட்டைக் கோயில் அமைந்துள்ளது.

32. பாதாள அய்யனார் தனி சன்னதி கொண்டு விளங்குகிறார். இவரை வழிபட பஞ்சம் நீங்கும், பயிர்வளம் செழிக்கும்.

33. இம்மலைக்கோயிலுக்கு கொடும்பாளூரிலிருந்து கற்களும், பிற பொருட்களும் கொண்டுவரப்பட்டு, இம்மலைக்கோயில் கட்டப்பட்டது என அறியமுடிகிறது.

சிவப்பரம் பொருள் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் மனித வாழ்க்கையின் மிக உயர்ந்த தத்துவங்களை உட்பொருளாகக் கொண்டவை. வழிபடும் மக்களுக்கும், மற்றைய உயிர்களுக்கும் அருள்புரியும் பொருட்டு தம் கடந்த நிலையான அருவ நிலையிலிருந்து இறங்கி அருவுருவத்திருமேனி அல்லது உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள இடமே திருக்கோயிலாகும்.

அருவுருவத்திருமேனி என்பது சிவலிங்க வடிவத்தையும், உருவத்திருமேனி என்பது சந்திரசேகரர், நடராஜர், சோமாஸ்கந்தர், இடபாரூடர் முதலிய 25-மகேஸ்வர மூர்த்தங்களைக் குறிக்கின்றது.

பாடல் பெற்ற எல்லா தலங்களுக்கும் தனித்தனியே ஒவ்வொரு சிறப்பு உண்டு. சிவபெருமான் ஏதேனும் ஒரு காரணம் பற்றி ஒவ்வொரு தலத்திலும் சிறப்பாக எழுந்தருளியிருப்பார். அந்த பெருமானை அங்குச் சென்று நியதிப்படி வழிபடுவதன் மூலம் அந்தச் சிறப்பை நாம் அடையலாம். திருமுறைகள் பெற்ற தலங்கள் 274-ல்

“வான்பொய்ப்பினும் தான் பொய்யா
கங்கையினும் புனிதமாகிய காவிரியாறு பாயும்”

சோழத் திருநாட்டின் காவிரியின் தென்கரையில், திருச்சிராப்பள்ளி நகரின் மத்தியில் நகரின் இதயமாக அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில் விளங்குகிறது.

இத்திருத்தலத்தில் எல்லா உயிர்களுக்கும் தந்தையான இறைவன் “பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து” என்ற மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசக மொழிக்கேற்ப சிவபக்தியில் சிறந்த செட்டிப்பெண்ணுக்கு தாயாக இருந்து சுகப்பிரசவம் அருள்செய்தமையாலும், கேடிலியப்பர் குழந்தை வரம் வேண்டி தாயுமானஅடிகளை மகவாக பெற்ற காரணத்தாலும், இத்தலம் சிறந்த குழந்தைப்பேறு மற்றும் சுகப்பிரசவத் தலமாக விளங்குகிறது.

இத்தலத்தை தரிசித்தவர்கள் சிறந்த குழந்தைப்பேறு மற்றும் சுகப்பிரசவம் அடைவது கண்கூடு.

## மலைக்கோயிலின் சரித்திர வரலாறு

நவீனக் கருவிகள் இல்லா அன்றைய காலத்திலேயே இப்பெருங் கோட்டைக் கோயில் 417-படிகளுடன் 273-அடி உயரத்தில் உலகக் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாகவும், வரலாற்று முக்கிய தத்துவம் பெற்றதாகவும், ஒரு புராதான சின்னமாகவும், இம்மலைக்கோயில் விளங்கி இருக்கிறது. புவியியல் ஆய்வுப்படி இம்மலை 3500-பில்லியன் ஆண்டுகள் பழமையானது என்பது தெரிகிறது. சோழர், பல்லவர், பாண்டியர், பிற்காலச் சோழர், நாயக்கர், மராட்டியர் காலகட்டடக் கலைப்பாணிகளைக் கொண்டு விளங்குகிறது. மன்னர்கள் மற்றும் குருநில மன்னர்கள் பாதுகாப்பில் இருந்த இத்திருக்கோயில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் துறவியர் பராமரிப்பிலும் இருந்திருக்கின்றது.

இம்மலை புராணச் சிறப்புடையது “கொடும்பாளூர்” என்ற இடத்திலிருந்து கற்களும் பிற பொருட்களும் கொண்டு கட்டப்பட்டன என்று தெரிகிறது. இம்மலையின்மேல் உள்ள சிவலிங்கம் தானாக வளர்ந்தது என்பர். இராமாயணம் காலத்திலேயே இம்மலை இருந்ததாக தெரிகிறது. “திரிசிரன்” என்ற அசுரன் இத்திருத்தலத்தில் உள்ள சிவலிங்கத்தை பூஜித்து வந்தான் என்பது புராண வரலாறு. மேலும் தாயுமானவர் திருக்கோயில் கருவறை திருப்பணி திரிசிரன் செய்ததாகும். அதனால்தான் பிற்காலத்தில் இம்மலையைச் சூழ்ந்து அமைந்த நகரத்திற்கு திரிசிரபுரம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. சோழர் ஆட்சியியில் உறையூர் தலைநகராக இருந்தபொழுது சாரமாமுனிவர் என்பவர் சிவலிங்கத்தை செவ்வந்தி மலர்க்கொண்டு பூஜித்து வந்தார். அதனால் இறைவன் செவ்வந்திநாதர் என்று அழைக்கப்பட்டார். இறைனை பூஜை செய்வதற்கு அமைக்கப்பட்ட நந்தவனத்தில் உள்ள செவ்வந்திமலர்களை களவாடிய கள்வனைப்பற்றி உறையூரை ஆட்சிசெய்த பராந்தக சோழனிடம் முறையிட அவன் கள்வனை அழைத்து தண்டிக்காத காரணத்தால், முனிவர் **இறைவனிடமே முறையிட கிழக்கு முகமாக இருந்த சிவன் மேற்குமுகமாக திரும்பி உறையூரை மண்மாரி பொழிந்து உறையூர் அழிந்தது. அன்றிருந்த கிழக்கு வாசல் பகுதி தெரியும் வண்ணம் நிலை மட்டும் உள்ளது. இக்கிழக்கு வாசலை கடந்து, மேற்கு முகமாக உள்ள மூலவர் இறைவனை தரிசிக்கலாம்.** அக்காலத்தில் மலையைச் சுற்றி சோலைகளும், சிறு காடுகளும் அருகாமையில் பல சிற்றூர்களும் இருந்திருக்கின்றன. சுமார்1300-ஆண்டுகளுக்கு முன் பல்லவராஜ்ஜியம் தெற்கே திரிசிரபுரம் வரையில் பரவியிருந்திருக்கின்றன. பல்லவர் ஆட்சியில்தான் தென்னிந்தியாவில் கருங்கல் கோயில்கள் கட்டப்பட்டன என்பது சரித்திரக்கூற்று. சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம் முதலிய இடங்களில் மலைகளை வெட்டி, குடைந்து கோயில்களை அமைத்தவற்றில் சிறப்பிடம்பெறுவது இம்மலைக்கோயிலில் உள்ள

குடைவரைகள் பல்லவர்காலத்தில் மலைமேல் கருங்கல் கோயிலைக் கட்டியதுடன், கருங்கல் பாறையைக் குடைந்து மலைமீது ஏறிச் செல்வதற்கு நல்ல வழியையும் அமைத்திருக்கிறார்கள்.

பல்லவர் காலகட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ள இம்மலைக்கோயிலில் உள்ள குடைவரைகளை அமைத்தவர் சிம்மவிஷ்ணுவின் மகனான மகேந்திரவர்மன் கி.பி.7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். திருநாவுக்கரசு சுவாமிகள் காலத்தவர். சமணனாக இருந்த மகேந்திரவர்மன் சைவமானதை, இம்மலைக்கோயிலில் உள்ள கல்வெட்டு கூறுகிறது. அது **“லிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் அரசன் இந்த லிங்கத்தினால் புறச்சமயத்திலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்ட நாள் நிலை நிற்பதாக எனக் கூறுகிறது.** பின்பு நாயக்க மன்னர்கள் ஆட்சியில் திருச்சிராப்பள்ளி நகரம் உருவாக்கப்பட்டது. மலையைச் சுற்றி நாற்புற வீதிகளும், கடைத்தெரு அடங்கிய வெளிவீதிகளும் ஏற்பட்டன.

உச்சிமலைக்கு அருகே வலப்பக்கத்தில் உள்ள 16-கால் மண்டபம் அன்றைய ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சுப் படையினர் எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் பகுதியாக பயன்படுத்தி உள்ளனர் என்பது தெரிகிறது.

18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த போர்க்காலங்களில் இம்மலைக்கோயில் வெடிமருந்துக் கூடமாக இருந்திருக்கிறது. இதற்கு அடையாளமாக மலைமேல் உள்ள குகைக்கோயில் தரையில் சில குழிகள் உள்ளன.

உச்சிமலைக்குச் செல்லும் பாதையில் மேல்புறம் பாறையில் மீன்வடிவம் உள்ளது. இது பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்கு அடையாளமாக இருக்கலாமெனக் கூறப்படுகிறது.

16-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விஸ்வநாத நாயக்கர் என்பவரால் கொத்தளங்கள் அமைக்கப்பட்ட மலைக்கோட்டை சுமார் 200-ஆண்டுகாலம் பல போர்கள் ஏற்பட காரணமாக இருந்திருக்கிறது.

இத்திருக்கோயில் மேல்குடைவரைக் கோயில் சுவரில் 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **“வேம்பையர் கோன்”** நாராயணன் என்னும் பெரும் வணிகர் இயற்றிய **“சிராமலை அந்தாதி”** என்னும் நூல் முழுவதும் கல்வெட்டாக உள்ளது. எனவே இத்திருத்தலத்தை முதல் **“தமிழ் கோயில்”** என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

முற்காலச் சோழர், பல்லவர், பாண்டியர், நாயக்கர்கள், முதலியோர், **கல்லிலே கனல் எழுப்பி தங்கள் அழியாத எண்ணத்தை அழியாத வண்ணத்தில்** படைத்திருக்கின்றனர்.

## <u>புராணங்கள் விளக்கும் பூர்வ வரலாறு</u>

மிகப்பழங்காலத்தில், இயற்கையின் திருக்கோயிலாக விளங்கும் திருக்கயிலை மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கும் பொருட்டுத் தேவர்களும் முனிவர்களும் வந்தனர்.

**கயிலைமலை:**

அப்பொழுது அங்கு வந்த ஆதிசேடனை, அமரர்கள் புகழந்து பேசினர். அதைக்கேட்ட வாயுதேவன் பொறாமையால் ஆதிசேடனை இகழ்ந்து பேசினான். செவியில்லாதவன், கால்கள் இல்லாதவன், இரட்டைநாக்குகள் உடையவன் என்று இகழ்ந்துரைக்கக் கேட்ட, சேடன், வாயுதேவனுடன் போட்டியிட்டான். ஆதிசேடன் தன் உடலால் கயிலைமலையை இறுகப்பிணித்துக் கொண்டான், வாயுதேவன், தன் ஆற்றல் வெளிப்படப்பெருங்காற்றை வீசினான். உலகங்கள் அதிர்ந்தன.

அப்பொழுது, கயிலாயமலையிலிருந்து மூனறு பகுதிகள் பிரிந்து, பறந்தன. அவைகளில் ஒன்று, திருக்காளத்தியிலும், மற்றொன்று திரிசிராமலையிலும், வேறொன்று திரிகோணமலையிலும் விழுந்தன.

**தென்கயிலாயங்கள்:**

திருக்கயிலையின் துண்டுகள் விழப்பெற்றமையால், இவை மூன்றும் தென்கயிலாயங்கள் என்று அழைக்கப்பெறுகின்றன.

இவற்றுள், திருக்காளத்தி, திரிகோணமலை இவைகளுக்கு நடுவே, நடுநாயகமாகத் திரிசிராமலை இருப்பதால், இது மலைகளுள் நாயகமலையாகும்.

### இறைவன் இறைவி பெயர்க்காரணம்

1. மூலன் மரபில் வந்த சாரமாமுனிவர் செவ்வந்தி மலர்க்கொண்டு வழிபட்ட காரணத்தால் செவ்வந்திநாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

2. எளிய பெண்ணின் பேரன்பிற்காக தாயாக இருந்து மருத்துவம் பார்த்த காரணத்தால் **"தாயுமானவர்"** என அழைக்கப்படுகிறார்.

3. கொழுந்து என்பது இளமைப்பெயர். இறைவன் மலைக்கொழுந்தாக இருந்தமையால் **"திருமலைக்கொழுந்தர்"** என்று போற்றப்படுகிறார்.

4. தாயுமானசுவாமி வடமொழியில் **"மாத்ருபூதேஸ்வரா'** என்றும், மட்டுவார் குழலம்மை வடமொழியில் **"சுகந்தகுந்தளாம்பிகை"** என்றும் அழைக்கப்படுகிறார்.

## <u>தலப் பெயர்க்காரணம்</u>

1. **தென்கயிலாயம் பெயர்க்காரணம்:-**
   ஆதிசேஷன், வாயுபகவானால் பெயர்க்கப்பட்ட திருக்கையிலையின் பகுதிகள் சிதறி விழுந்த பகுதிகள் ஒன்று சிராமலையும், மற்றவை திருக்காளத்தியும், திரிகோணமலையும் (இலங்கை) ஆகும். அதனால் சிராமலைக்கு தென்கயிலாயம் என்ற பெயர் ஏற்பட்டது.

2. **திரிசிரபுரம், திரிசிராமலை பெயர்க்காரணம்:-**
   இராவணன் தம்பியான திரிசிரன் என்ற அரக்கன் அரசு செலுத்தி இத்தல இறைவனை வழிபட்டு பெரும் பேறுகளை அடைந்ததால் '**திரிசிரபுரம்**' '**திரிசிராமலை**' என வழங்கி மறுவி '**திருச்சிராப்பள்ளி**' ஆனது.

3. **முத்தலைமலை பெயர்க்காரணம்:-**

அருள்மிகு தாயுமானசுவாமி மேல் தனி கட்டிட அமைப்பு முதல் சிகரமாகவும், அதன் கீழ் பகுதியில் அருள்மிகு மட்டுவார்குழலம்மை சந்நதி இரண்டாவது சிகரமாகவும், அருள்மிகு உச்சிவிநாயகர் சன்னதி 3-வது சிகரமாகவும் இருப்பதால் முத்தலை மலை என்று அழைக்கப்படுகிறது.

4. பிரம்மனால் வழிபடப் பெற்றமையால் "**பிரம்மகிரி**" என்று அழைக்கப்படுகிறது.

5. சிலையில், கல்லில் குடைந்து அமைத்தமையால் "**சிலைப்பள்ளி, சிலாப்பள்ளி**" என்ற பெயர்களும், சிரா முனிவர் வாழ்ந்தமையால் "**சிராப்பள்ளி**" என்ற பெயரும் அமைந்துள்ளது.

6. தொலைவில் இருந்து பார்க்கும் போது ரிஷபம் (இடபம்) போல் தோன்றுவதால் ரிஷபாசலம் என்றும் அழைக்கப்படுகிறது.

7. பழந்தமிழ் கல்வெட்டுகளை ஆராய்ந்தால், சிராப்பள்ளிமலை திருமலை என்னும் பெயரால் அழைக்கப்பெற்றது அறியவருகிறது. மலையில் உறையும் பெருமானைத் திருமலைப்பெருமான் அடிகள் என்று கல்வெட்டுத் தொடர்கள் போற்றுகின்றன. மலையைச் சார்ந்த நகருக்கு சிற்றம்பர் என்னும் பெயர் வழங்கி இருக்கிறது.

8. சமணத்தில் இருந்து அப்பரால் சைவத்திற்கு மாறிய மகேந்திரவர்மன் பட்டப்பெயர்களுள் ஒன்றான "**லலிதாங்குரன் நினைவாக லலிதாங்குர பல்லவேச்சர கிருகம்**" எனப்பட்டது.

9. சிராமலை அந்தாதி இயற்றிட "**வேம்பையர் கோன் நாராயணன் சிராமலை**" என்று கூறுகிறார்.

10. இராஜராஜனின் கல்வெட்டு "**சிற்றம்பர்**" என்கிறது.

11. அருணகிரிநாதரும், தாயுமானஅடிகளும் தம் பாடல்களில் **“சிரகிரி”** என்று குறிப்பிடுகின்றனர்.

12. சுமார் 16-முதல் 18-ம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுக்கள் திரிசிரபுரம் என்றும் அதன்பிறகு ஆங்கிலேயர்கள் காலத்தில் டிரிச்சினாப்பள்ளி என்றும் வழங்கப்பட்டு இருக்கலாம் என தெரிகிறது.

## தலச்சிறப்பு

தென்னாட்டுத் தலங்களுள் இத்தலம் “தென்கயிலாயம், ஆகும். நில எல்லையில் இருந்து பார்த்தால், மூன்று அடுக்குகளை (நிலைகளை) உடையதாகத்தோற்றம் அளிக்கும்.

மட்டுவார் குழலம்மைத் திருக்கோயில், தாயுமானசுவாமி திருக்கோயில், உச்சிவிநாயகர் திருக்கோயில் என்பன அந்த மூன்று நிலைகள் ஆகும்.

**கட்டடக்கலைப்பாணி சிறப்பு:-**

நில எல்லையிலிருந்து, கருங்கல் படிகள் அமைந்த, கல் கட்டடங்களை உடையது. பல்வேறு காலங்களில் செய்யப்பெற்ற திருப்பணிகளால் பெருமையுடன் தோன்றுவது.

திருக்கோயில் முன் யானை மண்டபம் முதல் தாயுமானவர் சன்னதி வரை மூடப்பட்ட தள அமைப்பைக் கொண்டது. தமிழகத்தில் உள்ள மேற்குப்பார்த்த சிவாலயங்களுள் இவ்வாலயமும் ஒன்று.

கனம் மிகுந்த கற்தூண்களும் மலைமீது ஏற்றி, நூற்றுக்கால் மண்டபம், சித்திரமண்டபம் முதலிய மண்டபங்களும், அம்மன் சன்னதி, அதன் மீது மேற்கட்டமாக சுவாமி சன்னதி ஆகியவற்றை அமைத்திருப்பதும், மேல்தளம் மூடப்பட்ட கற்படி வழியை அதன்மீது மலைக்கோயில் அமைந்திருப்பது ஒரு வியக்கத்தகு கட்டிடக் கலை சாதனை ஆகும்.

தமிழகத்தில் நான்காவது பெரிய லிங்கமாக மூலவர் உள்ளார். உருவில் தஞ்சை பெரியகோயிலில் உள்ள மூலவர் லிங்கத்திற்கு அடுத்தபடியாக உள்ளார்.

இயற்கையிலேயே மலை நந்திபோன்ற அமைப்பை உடையது. இவரை வழிபட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் **“பெரியவன் சிராப்பள்ளி”** என்று பாராட்டி உள்ளார்.

அனுமன் வழிபட்டதற்கு அடையாளமாக இன்றும் திருக்கோயில் முத்திரைகளில், அனுமன் உருவம் பொறித்த முத்திரை பயன்படுத்தப்படுகிறது.

**குடைவரைக்கோயில் சிறப்பு:-**

மலைப்பாறையாகத் தோற்றமளிக்கும் இத்தலத்தில், மலையைக் குடைந்து, கீழ் நிலையில் ஒரு குடைவரைக்கோயிலும், மேல்நிலையில் ஒரு குடைவரைக்கோயிலும், பழம்பெருமையுடன் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் காணப்பெறும் கல்லெழுத்துக்கள், தமிழக வரலாற்றிற்கு உதவுகின்றன.

இத்தலத்தைக் குறித்த இலக்கியப் படைப்புகள் பலவாகும். சங்ககாலப் புலவர்கள் தொடங்கி, அண்மைக்காலத்து ஆன்றோர்கள்வரை, பல புலத்துறை முற்றிய புலவோர்களின் சொற்கோயில்களாம் இலக்கியச்செல்வங்களைப் பெற்றுள்ளது.

**எழில்காட்சி சிறப்பு:-**

எட்டுத்திசைகளிலிருந்தும், மலைக்கோயிலைக் காணலாம். கம்பீரமாக எழுந்து நிற்கும் எழிற்காட்சி, உலகமக்கள் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

சிராப்பள்ளிநகரின் மையத்தில், இருதயம் போல் விளங்குகிறது. மலைமேலிருந்து, கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை, பரந்து விரிந்துகிடக்கும் நகரின் அழகைக் காணலாம்.

**நான்முகத்தோற்றம் சிறப்பு:-**

இம்மலைக்கோயிலை திருச்சிராப்பள்ளியின் கிழக்கு திசையில் இருந்து பார்த்தால், அருளே வடிவமான விநாயகர்போல் தோற்றம் தரும், வடக்கு திசையில் இருந்து பார்த்தால், பெரிய தோகைகளுடன் கூடிய மயில் போலத் தோன்றும், மேற்கு திசையில் இருந்து பார்த்தால், (நங்கூரம் பாய்ச்சிய கப்பல் போல) சிவலிங்க மூர்த்தி போல் காட்சியளிக்கும், தெற்கு திசையில் இருந்து பார்த்தால், இடபம் தலையுயர்த்தி அமர்ந்திருப்பது போலவும், யானைமேல் அம்பாரி போலவும் இருப்பது காணப்பெறும்.

**தலத்தைச் சுற்றியுள்ள ஐந்துநாதர்கள் :-**

மலைக்கோயிலைச் சுற்றி ஐந்துநாதர்கள் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. அவை வெளிகண்டநாதர் திருக்கோயில், நாகநாதர் திருக்கோயில், காசிவிசுவநாதர் திருக்கோயில், பைரவநாதர் திருக்கோயில், பூலோக நாதர் திருக்கோயில் என்பன.

**தலத்தைச் சுற்றியுள்ள பிற தலச் சிறப்பு:-**

**திருக்கோயில் கிழக்கு திசையில் உள்ள தலம்**

1. **திரு எறும்பியூர்:-**

   பாடல் பெற்ற தலம். இந்திரனும் தேவர்களும் எறும்பு வடிவம் கொண்டு வழிபட்ட தலம். (14-கி.மீ தொலைவு)

**திருக்கோயில் மேற்குதிசையில் உள்ள தலங்கள்:-**

2. **பஞ்சவர்ண சுவாமி திருக்கோயில் :-**

   உதங்க முனிவருக்கு இறைவன் 5-வகைவழிபாட்டு காலங்களில், 5-வகை வண்ணலிங்கங்களாக காட்சியளித்தமை. புகழ்ச்சோழர்நாயனார் அவதரித்ததலம் (4 கி.மீ)

3) **உறையூர் நாச்சியார் அம்மன்:-**

   12-ஆழ்வார்களில் ஒருவராகி திருப்பாணாழ்வார் (வைணவதலம்) அவதரித்த தலம் கமலவல்லி தாயார் அரங்கநாதரை மணந்துகொண்ட இடமாதலால் கல்யாண அவசரமாய் சேவைகொடுக்கிறார். (5கி.மீ)

4) **உறையூர் வெக்காளி அம்மன்:-**

   வானத்தை கூறையாக கொண்ட வெட்டவெளியில் இருக்கும் வெக்காளி அம்மன் (5கி.மீ)

5) **அ.மி உஜ்ஜீவநாதசுவாமி:-**

பாடல்பெற்ற தலம் இறைவன் கல்லில் (உய்யக்கொண்டான் திருமலை) திருக்கோயில் மலையில் குடியிருப்பதால் கற்குடி என்னும் பெயர் பெற்றது. மார்கண்டேயரைக் காப்பாற்றுவதாக உறுதியளித்து இறைவன் அருள்புரிந்த தலம். (6.கி.மீ) தொலைவு

6) **வயலூர் அ.மி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்:-**

அருணகிரிநாதருக்கு முருகப்பெருமான் காட்சியளித்து “திருப்புகழ் பாடல்பாட அடி எடுத்து கொடுத்த தலம்.

**திருக்கோயில் வடக்கு திசையில் உள்ள தலங்கள்**

1. **அரங்கநாயகி சமேத அரங்கநாத பெருமாள் :-**

108-வைணவ தலங்களுள் முதன்மையானது (வைணவ தலம்) வைகுண்டம் என்ற பெருமையைக் கொண்டது. (3-கி.மீ தொலைவு)

**2. அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் :-**

பஞ்சபூத தலங்களில் (அப்பு) நீர்த்தலம் (2-கி.மீ தொலைவு)

3. **சமயபுரத்து மாரியம்மன்:-**

சக்தி தலங்களிலே சிறப்பு வாய்ந்த சக்தி உள்ள தலம் (15-கி.மீ தொலைவு)

4. **திருக்கோயில் தெற்கு திசையில் உள்ள தலம் :-**

விராலிமலை (முருகன் தலம்) முருகப் பெருமான் அருணகிரி நாதருக்கு அஷ்டமா சித்தி வழங்கிய இடம். (23-கி.மீ தொலைவு)

**தீவினை நீங்கும்:-**

மூர்த்தி தல, தீர்த்தப் பெருமைகளையுடைய இத்தலத்தில் பிறந்தவர் முக்திப்பேறு அடைவர். தெரிந்தும் தெரியாமலும் செய்த தீவினைகள் நீங்கும் திருச்சிராப்பள்ளி என்றலும் தீவினை நரிச்சிராது நீங்கும் என்று நாவுக்கரசர் அருளியுள்ளார்.

**வழிபாட்டின் பயன்கள்:-**

சித்திரைத் திங்கள் முதல் நாளிலும், இறுதி நாளிலும் பூரநட்சத்திரம் நவமி திதியுடன் கூடிய நற்பொழுதினும் இம்மலையை வலம் வருபவர் எண்ணிய பேறு அடைவர். சோமவாரம் ரோகிணி நட்சத்திரம் கூடிய நற்பொழுதிலும், பங்குனி மாதங்களிலும், இத்தலத்துப் பிரம்ம தீர்த்தத்தில் நீராடுபவர்கள் அனைத்துப் பேறுகளையும் அடைவர். புரட்டாசி திங்கள் பௌர்ணமி நாளில் சிவகங்கையில் நீராடித் தும்பை மலர் அர்ச்சிப்பவர்கள் உடல்நோய்கள் நீங்கப்பெறுவர். காவிரியில் நீராடி, மலைவலம் வருபவர்கள் மனநலமும் ஆன்மநலமும் அடைவார்கள்.

**தீர்த்தச்சிறப்பு:-**

"ஒருதுளி பருகினால் உடலில் நோய் அறும்
இருதுளி பருகினார்க்கு இன்மை இன்மையாம்
அருளுடன் துளிகள் மூன்று அருந்தினால் அவர்
கருதிய பொருள் எலாம் கரத்தில் கூடுமே"

-செவ்வந்திபுராணம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் புகழ்பெற்று விளங்கக்கூடிய மலைக்கோட்டை, தாயுமானசுவாமி திருக்கோயில் மூன்று சிவகங்கை தீர்த்தங்களை பெற்றிருக்கிறது.

1. சிவகங்கை, 2). நன்றுடையான், 3). தீயதில்லான் தீர்த்தம் இம்மூன்று தீர்த்தமும் சிவபெருமானுக்கு சூரியன், சந்திரன், அக்கினி மூன்று கண்களாக அமைந்திருப்பது போன்று உள்ளது தலத்தின் சிறப்பாகும்.

**மலையை வலம் வருவதைப்போல உள்ள காவிரி தீர்த்தத்தின் சிறப்பு:-**

மலைக்கோயிலுக்கு வடக்கில் மலையைவலம் வருவதுபோல ஓடுகிறது. என்றும் வற்றாத நீர்வளம் உடையது. மலைத்தலையை கடற்காவிரி 'சங்கப்பாடல்' என்னும் பெருமையுடையது. 'குடகு காவிரி நீளலை சூடிய திரிசிராமலை மேலுறை வீர 'என்ற அருணகிரிநாதர் திருப்புகழை ஊன்றிக் கவனித்தால், காவிரி முற்காலத்தில் மலை அருகே ஒடியதை உணரலாம்.

**சிவகங்கை:-**

மலைக்கோயிலுக்கு வடமேற்கே நாகநாதர் திருக்கோயில் அருகில் உள்ளது. இத்தீர்த்த இடத்தில், மட்டுவார்குழலம்மை, தாயுமானஈசரை மணக்கத் தவம் இயற்றியதாக அறிய வருகிறது.

சிவகங்கை தீர்த்தத்தின் மற்றொரு பகுதி திருச்சி தெப்பக்குளம் என்று அழைக்கப்படுகிறது. இந்த தெப்பக்குளம் 1) முத்தாழக்குளம், 2). பிரம்மன் தீர்த்தம் 3). சோமரோகணி என்று அழைக்கப்பட்டதாக புராண வரலாறு கூறப்படுகிறது.

**தெப்பக்குளத்தின் வரலாறு:-**

மலைக்கோயிலுக்கு மேற்கில் அமைந்துள்ள இத்தீர்த்தம் கரிகால் பெருவளத்தான் வெட்டியதாகும். தெப்பக்குளம் என்று அழைக்கப்பெறுவது 16-ஆம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளியை ஆட்டிபுரிந்த விசுவநாதநாயக்கர், குளத்தின் நடுவே அழகிய நீராழி மண்டபம் அமைத்துள்ளார். ஆண்டுதோறும் பங்குனித் திங்கள் உத்திரத்திற்கு முதல்நாள் **'தெப்பத்திருவிழா'** மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இது 23-06-1949-ஆம் ஆண்டு முதல் ஓர் ஒப்பந்தப்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பராமரிப்பில் இருந்து வருகின்றது. திருக்குள நீளம் 611-அடி அகலம் 330-அடி.

**பிரம்மன் தீர்த்தத்தின் பெயர்க்காரணம்:-**

இத்திருத்தலத்தின் 18-தல அடியார்களில் ஒருவராக போற்றப்படும் பிரம்மன் இத்தெப்பக்குளத்தில் 1000-வருடங்களாக தவம் செய்தக் காரணத்தினால் பிரம்மதீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இந்த சிறப்பு வாய்ந்த தெப்பக்குளத்தில் பிரம்மன் தவம் செய்தக் காரணத்தினால் சிவபெருமான் இவருக்கு திரும்பவும் படைப்பாற்றலை வழங்கினான்.

**தீயதில்லான்:-**

இது மலைக்கோயிலுக்குத் தெற்கில் தற்பொழுது உட்குளம் என்னும் திருப்பெயருடன் விளங்குகிறது. இக்குளத்தின் கரையில், மட்டுவார் குழலம்மை தவம் செய்யும் விழா, சித்திரைத்திங்கள் பெருவிழாக்காலத்தில் ஆறாம்நாள் விழாவாக நடைபெற்று வருகிறது.

இந்த நன்றுடையான், தீயதில்லான் தீர்த்தங்கள் திருஞான சம்பந்தர் பெருமானால் பெருமைசெய்து போற்றப் பெற்றுள்ளன.

சோமவார உரோகிணி நட்சத்திரம் கூடிய நன்னாளிலும், பங்குனி மாதத்திலும் பிரமதீர்த்தத்தில் மூழ்கி வழிபடுவோர் தேடிய மாடு, நீடு செல்வம் யாவும் அடைவர்.

புரட்டாசிப் பௌர்ணமியில் சிவகங்கை, காவிரியில் நீராடி, தும்பை மலர்
சூடி வந்து வழிபட்டால், நல்வாழ்வு எய்துவர்.

**மூர்த்திகளின் சிறப்புகளும் வழிபடுவதால் அடையும் பயன்களும்:-**

(திருக்கோயில் அமைப்பு முறை வழியாக)

திருக்கோயில் முகப்பில் உள்ள துவாரபாலகரை வணங்கிவிட்டு உள்ளே சென்றால் மலைக்கோட்டை அடிவாரத்தில் வீற்றிருக்கும் அருள்மிகு மாணிக்கவிநாயகரை தரிசிக்கலாம்.

**அருள்மிகு மாணிக்க விநாயகர் என்னும் சித்திவிநாயகர்:-**

மிகப்பழங்காலத்தில், தெற்கு வெளிவீதியில் இருந்து, மலைக்கோயிலுக்குள் வரும் பாதையில், சித்திவிநாயகர் என்னும் திருப்பெயருடன் பிரதிஷ்டை செய்யப்பெற்றவர் இவர். இந்தத் திருக்கோயிலை ஓர்அன்பர், நாள்தோறும் வழிபட்டதுடன், வழிபாடுகள் நடக்க வேண்டிய யாவும்செய்து, கவனித்து வந்துள்ளார். அவர் பெயர் மாணிக்கம்பிள்ளை என்பது. அவர் தொண்டுகாரணமாகச் சித்திவிநாயகர் அருள்மிகு மாணிக்கவிநாயகர் என்னும் திருப்பெயர் அமையப்பெற்றார்.

**திருப்பணிகள்:-**

தொடக்ககாலத்தில் கருவறைமட்டுமே இருந்தது. பூசை முறையில்லை. பக்தர்கள் தூய்மை செய்வர். திருவிளக்கு ஏற்றுவர். வணங்குவர். பிற்காலத்தில் பூசை முறைகள் வந்தன. முன்மண்டபம், கோபுரம், கண்ணாடி அறை, அலங்கார விளக்குகள், நித்திய, நைமித்திய வழிபாடுகள் ஏற்படுத்தப்பட்டன. மூவர் தம் நிலப்பகுதியைத் தந்ததால், திருச்சுற்று (பிரகாரம்) ஏற்படுத்தப்பெற்றது. மலைக்கோயில் நிருவாகத்திற்குள் வந்தது. அதன் பின்னர் பல்வேறு காலங்களில் உபயதாரர் சாரதாஸ் திரு.தே.மணவாளன் மூலம் அருள்மிகு மாணிக்க விநாயகர் மூலவர் சன்னதி திருத்தி அமைத்து புதியதாக கட்டப்பட்டும், பிரகாரங்கள் முன், பின் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டும் மண்டபம் கட்டப்பட்டும் தங்கவிமானம் அமைக்கபட்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**மாணிக்க விநாயகர் சிறப்புக்கள்:-**

இவர் சன்னதியில் எப்பொழுதும் மக்கள் கூட்டம் இருக்கும். இவரை வணங்கி தொடங்கும் எச்செயலும் சிறப்பாக முடியும். இப்பகுதியில் உள்ள வியாபாரிகள், இவரை வணங்கி விட்டே எச்செயலையும் தொடங்குவர். ஆதனால் இவர் **‘காரிய சித்தி விநாயகர்’** என அழைக்கப்படுகிறார். சதுர்த்தி சங்கடஹரசதுர்த்தி, வெள்ளி முதலிய நாட்களில் நடக்கும் அபிஷேகங்களை பார்ப்பவர்க்கு கடன்தீரும், நோய்தீரும், தோற்றப்பொழிவு ஏற்படும், நன்மக்கட்பேறு கிட்டும், எமபயம் நீங்கும், மலையின் மீது ஏறும்போதும், கீழே இறங்கும்போதும் இவரை வணங்கிவிட்டே செல்லவேண்டும்.

“என்னருள் முன்னே பெருகுக’ என்று வரம்மருளுபவராய் இன்னல் தீர்க்கும் எழிலுறு மூர்த்தியாக, இங்கு காட்சியளிக்கிறார். மேலும் கிரிவலத்தை தொடங்குபவர்கள், இவர் சன்னதியில் இருந்து கிரிவலத்தை தொடங்குகின்றனர்.

ஓங்கார பிரணவ சொரூபியான விநாயகருக்கு ஆவணி மாதம் விநாயக சதுர்த்தி விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி உற்சவத்தில் 13ம் நாள் தினத்தன்று உற்சவ மூர்த்திக்கு 1.பால், 2.தயிர், 3.தேன், 4.பன்னீர், 5.இளநீர், 6.பஞ்சாமிர்தம், 7.பழங்கள், 8.சந்தனம், 9.அரிசி, 10.விபூதி, 11.குங்குமம், 12.விழாம்பழம், போன்ற 27 வகையான அபிஷேகங்கள் நடைபெற்று அன்று இரவு அருள்மிகு மாணிக்க விநாயகர் உற்சவர் வெள்ளி மூஞ்சூறு வாகனத்தில் வீதி உலா வருவார். மூலவருக்கு தங்ககவசம், வெள்ளிக்கவசம், கட்டண சாத்துப்படி உண்டு. சந்தனக்காப்பு அலங்காரமும் செய்யப்படுகிறது.

ஸ்ரீமாணிக்க விநாயகர் மீது “ஸ்ரீமாணிக்க விநாயகர் மாலை” 33-பாடல்கள் இயற்றப்பட்டுள்ளது.

**அருள்மிகு கல்யாண விநாயகர்:-**

யானை மண்டபம், வாகன மண்டபம் என்று அழைக்கப்படும் இம்மண்டபத்தில் யானை நிற்கும் இடத்திற்கு எதிரே இருப்பவர் அருள்மிகு கல்யாண விநாயகர் இவரை வணங்கி அர்ச்சனை செய்தால் கன்னிப்பெண்களுக்கு வெகு விரைவில் திருமணம் நடக்கும்.

**மௌன மடம்:-**

மலை படிகளின் யானை மண்டபத்தை அடுத்து வலப்புறத்தில் இருப்பது மௌனமடம் இவ்விடத்தில் முருகர் சன்னதியும் தாயுமான அடிகளுக்கு உபதேசம் செய்த திருமூலர் மரபில் வந்த **‘மௌனகுரு’** ஜீவ சமாதியும் இருக்கிறது. இவருடைய உபதேசத்தால் இத்தல இறைவனால் அவதரித்த **“தாயுமானஅடிகள்”** தன்னிகரில்லா அருளாளராக உயர்ந்தார்.

அடுத்து மௌனமடத்தை கடந்து சென்றால், மீனாட்சி சுந்தரேஸ்வரர் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், சகஸ்ரலிங்கேஸ்வரர் மண்டபம், மலைப்பாதையின் இடையே உள்ளன. இவற்றின் சிறப்புக்கள் எழில் மண்டபத் தலைப்பில் உள்ளன.

அடுத்து சகலநலன்களையும் அளிக்கும் கோணவாசல் என்ற பகுதியைக் கடந்துசென்றால் பாராவாசல் என்று அழைக்கப்படும் இடம் இப்பகுதியில் இருந்து தெற்கு நோக்கிச் சென்றால் வருவது தாயுமானவர் மட்டுவார்குழலம்மை சன்னதி ஆகும். **இப்பகுதி ‘மலைமீது இரண்டு தள அமைப்பைக் கொண்டது. முதல் தளம் அருள்மிகு மட்டுவார்குழலம்மை சன்னதி, இரண்டாம் தளம் அருள்மிகு தாயுமானவர் சன்னதி’** இப்பகுதி உலக கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மலைமேல் உறையும் உலக உயர்களின் தந்தையான இறைவன் இத்தலத்தின் தாயானவரலாறு.

**இறைவன் தாயும் ஆன வரலாறு**

சோழநாட்டின் பழைய தலைநகரங்களுள் ஒன்று, காவிரிபூம்பட்டினம், அது காவிரி கடலுடன் சேரும் இடத்தில் இருப்பது. (பட்டினப்பாலை என்னும் சங்க நூல் அதன் பெருமைகளை உரைக்கும்.)

அந்நகரில், அறுபத்து மூன்று அடியார்களில் ஒருவராகிய இயற்பகைநாயனாரும், துறவுவேந்தராகிய பட்டினத்து அடிகளும் பண்டுவாழ்ந்துள்ளனர். தாயுமானசுவாமிகோயில் கற்பாறைகளின் மீது கற்சுவர்களைக் கோட்டை மதில் போன்று எழுப்பி கீழ் மேல் என இருமாடல்களுடன் எழுப்பப்பட்டு உள்ளன. சுவாமி கருவறையில் பெரிய லிங்கத் திருவுருவில் ஆடை அலங்காரத்துடன் எழிலுறு காட்சி தருகிறார்.

**காவிரிப்பூம்பட்டினம்**

சோழநாட்டின் பழைய தலைநகரங்களுள் ஒன்று காவிரிப்பூம்பட்டினம், சிறந்த துறைமுகப் பட்டினமும் ஆகும். சோழநாட்டின் கிழக்கு எல்லையாகிய வங்கக்கடல் பகுதியை அடுத்து இருப்பது. காவிரி கடலில் சென்று புகும் பட்டினம் ஆதலின், காவிரிப் பூம்பட்டினம் எனப் பெயர்பெற்றது. இதைப் புகார் என்றும், பூம்புகார் என்றும் அழைப்பர். சிறந்த கடற்கரை நகரமும் ஆகும்.

**இரத்தினகுப்தன்:-**

பூம்புகார் பகுதியில் உள்ள பட்டினப்பாக்கத்தில் வாழ்ந்த உள்நாட்டு பெரும் வணிகர்களில் ஒருவன் இரத்தினகுப்தன். இவன் தன் கற்புக்கரசியான மனைவியுடன் வாழ்ந்து வந்தான், அந்தணர்களுக்கும், துறவிகளுக்கும், உறவினர்களுக்கும், எளியவர்களுக்கும் எண்ணற்ற உதவிகளைச் செய்து வந்தான். விருந்தினர்களை சிறப்பாக உபசரித்து, திருக்கோயிலுக்குச் சென்று இறைவழிபாடுகளும் செய்து வந்தான். இதனால் மற்ற வணிகர்கள் அனைவராலும் சிறப்பாக போற்றப்பட்டான்.

**மக்கட்பேறு:-**

மனைக்கு விளக்காகிய மனைவியுடன் நடத்திய குடும்ப வாழ்வு, மற்றோர் வியக்கும் வண்ணம் சிறப்பாக இருந்தது. நெடுங்காலம் மகப்பேறு இல்லாமையால் நாளும் திருக்கோயில் சென்று வழிபட்டு வந்தக் காரணத்தால் இறைவன் அருளால் ஒரு பெண் மகவு பெற்று அப்பெண்ணிற்கு "இரத்தினாவதி" எனப் பெயர் வைத்து சிறப்பாக வளர்த்து வந்தனர்.

**திருமணம்:-**

இரத்தினாவதி தந்தையாலும், தாயாலும் தங்கள் குலமரபிற்குரிய பண்புநலங்கள் எல்லாம் அறிவுறுத்தப்பட்டு கலைகள் பல கற்று, ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கினாள். அழகும், அறிவும், ஆற்றலும் உடையவளாக திருமண பருவம் அடைந்தாள். இரத்தினகுப்தன் தன் மகளை திருமணம் முடிக்க விரும்பி, திருச்சிராப்பள்ளியின் மலைக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதியில் வாழ்ந்து வந்த "தனகுப்தன்" என்னும் வணிகர்குல திலகனுக்குத் திருமணம் செய்துகொடுத்து தக்க சீர்வரிசைகளுடன் பூம்புகார் நகர மக்கள் வியக்கும் வண்ணம் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி வைத்தார்.

**மகப்பேறு அடைதல்:-**

தனகுப்தனுடன் திரிசிராமலைக்கு வந்த இரத்தினாவதி சிறப்பாக இல்லறம் செய்துவந்தாள். ஒவ்வொரு நாளும் திரிசிராமலைமேல் உறையும் "செவ்வந்திநாதரை" வழிபட்டுவந்தாள். செவ்வந்திநாதரின் அருளால், இரத்தினாவதி தாயாகும் பேறு அடைந்தாள். பேறுகாலம் முதிரவே, அச்செய்தியைக் காவிரி பூம்பட்டினத்தில் வாழும் தன்தாய்க்கு தெரிவித்தாள். தாயும் மகளைக் காணவும், பேறுகாலத்தில் உதவிகள் செய்யவும் மகளுக்கு வேண்டிய மருந்து, எண்ணெய் போன்ற பொருட்களுடன் காவிரிபூம்பட்டினத்தை விட்டு திருசிராப்பள்ளியை நோக்கி வரும்போது காவிரியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக காவிரியை கடக்க இயலவில்லை. இதனால் தாயின் வரவு தடைப்பட்டது. ஆனால் மகள்

இரத்தினாவதியோ தாய் பிரசவத்திற்குரிய மருந்து பொருள்களுடன் இன்று வருவாள் நாளை வருவாள் என எதிர்பார்த்து காத்து இருந்தாள்.

**செவ்வந்திநாதரை போற்றி வேண்டுதல்:-**

கருவுயிர்க்கும் நேரம் நெருங்கியும் தாய் வரவில்லை. இதனால் இரத்தினாவதி மலைமேல் இருக்கும் செவ்வந்திநாதரை நினைத்து சிவபரம்பொருளே! நீ சங்கரன், சதாசிவன், ஈசானன், புங்கவன், திரிபுராந்தகன், புராதனை, புராணன், புண்ணியன், என்று போற்றி, கங்கையைத் தலையில் வைத்திருப்பவர். நஞ்சு உண்ட கழுத்தை உடையவர், நெற்றிக் கண்ணை உடையவர், மிகவும் பெரியவர், மிகவும் நுண்ணியர், எங்கும் பரிபூரணமாக இருப்பவர், பரத்துவம் உடையவர், பராபரமாக இருப்பவர் வெள்ளிமலையில் வாழ்பவர், மன்மதனை எரித்தவர், எமனை உதைத்தவர், யானையை உரித்து அதன் தோலைப் போர்த்தியவர், வேதங்களின் பொருளாக இருப்பவர். திருமால், பிரம்மனாலும் காணமுடியாதவர். என்றெல்லாம் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியான இறைவனின் சிறப்பைக் கூறி உருகி வழிபட்டாள்.

**இறைவன் தாய்வேடம் தரித்து மருத்துவம் பார்த்தல்:-**

**“கல்லினுள்** இருக்கும் தேரைக்கும் கருணை செய்யும்” இறைவன் இரத்தினாவதிக்கு உதவ அவள் தாய்போலவே வேடம் பூண்டார். தலையில் இருக்கும் பிறைச்சந்திரனை மறைத்து, கழுத்தில் சிவமணிமாலையுடன், செங்கோல் பிடித்த கையில் மூங்கில் தடியைப் பிடித்துக் கொண்டு, நரைத்த முடியுடன், தளர்ந்த நடையுடன் எருது, மான், மழு போன்றவைகளை மறைத்துக் கொண்டும், முதிர்ந்த இரத்தினாவதி தாய்போலவே, மருந்து பொருட்களும், எண்ணெயும் கொண்டு இரண்டு சேடிப்பெண்கள் உடன்வர வந்தார். நிறைபேற்றுடன் தவித்துக் கொண்டு இருந்த இரத்தினாவதியும் வந்தவரைத் தாய் என்றே எண்ணி எதிர் சென்று தாய் பாதங்களில் பணிந்தாள். அன்னையும் ஆன இறைவன் அன்போடு தழுவிக் கொண்டார்.

தக்கவாறு மருத்துவம் பார்த்தார். இரத்தினாவதியும் ஆண் மகவை பெற்றெடுத்தாள். குழந்தையை ஈன்ற அப்பெண்ணிற்கு மருந்து எண்ணெய் கொடுத்து நாள்தோறும் செய்ய வேண்டிய செயல்களை எல்லாம் செய்து குழந்தையையும், தாயையும் ஏழு நாட்கள் பேணி வந்தார்.

*“குழவி ஈன்றவட்கு அருமருந்து எண்ணெயும் கொடுத்தே*
*எழு தினத்து அளவு இழைத்திடும் செயல் எலாம் இயற்றி*
*அழகு தொட்டிலுள் துயிற்றி அங்கு ஒரு மதி அளவாம்*
*மழ களிற்றினை முருகவேள் எனும்படி வளர்த்தாள்”*

செவ்வந்திபுராணம் *(524)*

இறைவனே தாயாகி வந்து தன் பக்தைக்கு மகப்பேறு மருத்துவத் தொழில்புரிந்த அற்புதத்தை இப்பாடல் கூறுகிறது.

**உண்மைத்தாய் வருதல்:-**

காவிரியில் பெருகிய வெள்ளம் வடிந்தது. காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து வந்து காவிரியின் வடகரையில் பல நாள் காத்துக் கிடந்த இரத்தினாவதியின் உண்மைத்தாய் காவிரியைக் கடந்து சிராமலைநகரை அடைந்து, இரத்தினாவதி இல்லத்தை அடைந்தாள். வந்த தாயை இரத்தினாவதி கண்டாள். திகைத்தாள்! இருதாயாருள் எவர் உண்மை தாய் என கவனித்தாள். அப்போது தாயாக சுகப்பிரசவ மருத்துவம் பார்த்த செவ்வந்திநாதர் மறைந்தார். வானில் மட்டுவார் குழலம்மையுடன் இடபவாகனராக தோன்றினார்.

**செவ்வந்திநாதர் தாயுமானவர் ஆதல்:-**

இரத்தினாவதி என்ற எளிய பெண்ணின் பேரன்பிற்காக செவ்வந்திநாதர் தாயும் ஆனதால், இத்தலத்தில் இறைவன் **"தாயுமானசுவாமி"** என்று போற்றப்படுகிறார். இரத்தினாவதி இத்தல இறைவனை நாளும் வழிபட்டு இப்பேறு பெற்றமையால் இத்தலத்தில் தல அடியவர்களுள் ஒருவராக விளங்குகிறார்.

**செட்டிப்பெண் மருத்துவம்:- (சித்திரைத் தேர்த்திருவிழா ஐந்தாம் நாள் விழா)**

அ.மி தாயுமானசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் நடக்கும் சித்திரைத் தேர்த்திருவிழாவின்போது ஐந்தாம் நாள் திருவிழாவாக செட்டிப்பெண் மருத்துவம் நிகழ்கிறது. இவ்விழாவின்போது உபயத்தார் மூலம் பிரசவலேகியம் செய்து அனைத்து அடியார்களுக்கும் வழங்கப்படுகிறது. இம்மருந்து பெற்று சுகப்பிரசவம் அடைந்தோரை கணக்கிட்டு கூற முடியாத பெருமையை உடையது இத்திருத்தலம்.

**சித்திரமண்டப காட்சி :-**

இறைவனே தாயாக வந்து மருத்துவம் செய்த காட்சி சித்திர மண்டப திருச்சுற்றிலும், சித்திரமாகவும் இங்குள்ள தூண் ஒன்றில் இறைவன் தாயாக வரும் கற்சிற்பம் உள்ளது.

**பிரார்த்தனை செய்ய வேண்டிய முறை :-**

(சுகப்பிரசவ சுலோகம்)

"ஹே˙ சங்கர˙ ஸ்மரஹர˙ பிரமாதிநாத˙
மன்னாத˙ ஸாம்ப˙ சசிசூட˙ ஹர˙ திரிசூலின்˙
சம்போ˙ ஸீகப்ரசவக்ருத்˙ பவமே˙ தயாளோ˙
ஸ்ரீமாத்ருபூத˙ சிவபாலயமாம்˙ நமஸ்தே."

என்ற மந்திரத்தை கர்ப்பிணி பெண்கள் மூன்று முறை தினம் சொல்லி இறைவனை நினைத்து வழிபட்டு வந்தால் அ.மி மட்டுவார் குழலம்மை உடனுறை அ.மி தாயுமானவர் கிருபையால் எளிதான, இனிதான, சுகப்பிரசவம் கிடைக்கும்.

**சுகமான மகப்பேறு நிகழ உதவும் மறைமொழி :-**

"எம்பெருமானே ! நிறைமங்கலப் பொருளே !
மன்மதனை எரித்தவரே !
பிரமன் முதலிய தேவகணங்களின் தலைவரே !
என் உயிர் நாயகனே ! உமையொருபாகனே !
இளம் பிறைச் சந்திரனைத் தலையில் அணிந்தவரே !
தொடர்ந்துவரும் பாவங்களின் வேரை அழிப்பவரே !
ஒளிரும் மூவிலைச் சூலம் ஏந்தியவரே !
சிவபெருமானே ! அருட்கடலே !
சுகமான குழந்தைப் பேறு நிகழ அருள்புரிவாய் !
தாயுமான ஈசரே !
உன் திருக்கோயில் வந்து வழிபடுவேன்
நின் திருவடிகளுக்குப் போற்றி ! போற்றி !"

**சுகப்பிரசவம் அடைந்தோர் செய்யவேண்டியவை :-**

குழந்தைப்பேறு அடைந்து சுகப்பிரசவம் ஆனபிறகு சுவாமிக்கு தாரோடு பழமும் (வாழைப்பழம்) மற்றும் பாலும் அர்ப்பணம் செய்யலாம். நேரில் காணிக்கை செலுத்த இயலாதவர்கள் ரூ.350/- திருக்கோயில் முகவரிக்கு அனுப்பினால் பிரார்த்தனை நிறைவேற்றி பிரசாதம் அனுப்பிவைக்கப்படும் வரமுடிந்தவர்கள் தாயுடன் சேயும் வந்து, இத்திருத்தல இறைவனை வணங்கி நீண்ட ஆயுளை பெறலாம்.

**பிள்ளைவரம் பெற செய்யவேண்டுவன:-**

1. நாளும் இத்திருத்தல இறைவனை நினைத்து வழிபட நல்ல ஆண், பெண் குழந்தைகளை பெறலாம்.
2. திருஞானசம்பந்தர் அருளிய திருச்சிராப்பள்ளித் தலத் திருப்பதிகத்தை நாளும் பாராயணம் செய்ய வேண்டும்.
3. கேடிலியப்பரும், கஜவல்லி அம்மையும் அ.மி தாயுமானஈசனை வேண்டி தவமிருந்து தாயுமான அடிகளை மகவாக பெற்றனர்.
4. பரிசுத்தமான உள்ளத்துடன் இறைவனை நாளும் நாம் நினைத்து வணங்கினால், பிள்ளைவரம் கொடுத்து, இரத்தினாவதிக்கு தாயாக வந்து மருத்துவம் பார்த்ததைப்போல அன்பர்களுக்கும் உதவுவார்.
5. பிள்ளைவரம் கொடுக்கவும், சுகப்பிரசவம் அருளவும், "மூர்த்தி, தலம், தீர்த்தம்" மூன்றிலும் சிறப்பாக விளங்கும் இத்திருத்தலம் போல அவனியில் வேறு எங்கும் இல்லை.

## தாயுமானவர் சன்னதியில் உள்ள மூர்த்தங்களின் சிறப்பு

**தென்முகக் கடவுள் தட்சிணாமூர்த்தி சிறப்பு:-**

இத்திருத்தலத்தில் தென்முகக் கடவுளான தட்சிணாமூர்த்தி எட்டு முனிவர்களுடன் தர்ப்பாசனத்தில் அமர்ந்து அருள்பாலிக்கின்றார். பொதுவாக எல்லா தலங்களிலும்

தட்சிணாமூர்த்தி சனகாதி முனிவர் நால்வருடன் அமர்ந்து அருள்பாலிப்பது போன்று இருக்கும். ஆனால் இங்கு **“சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர், சிவயோகமாமுனி, திருமூலர், பதஞ்சலி, வியாக்ரமர்”** முதலிய எட்டு முனிவர்களுடன் அமர்ந்து அருள்பாலிக்கும் காட்சி வேறு எந்த தலங்களிலும் இல்லாத சிறப்பு ஆகும். இச்சிறப்பை, உணர்ந்த தாயுமான அடிகள்

**“துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்<br>தொழுது அருகில் வீற்றிருப்பச்”**

எனப் போற்றுகின்றார். தர்ப்பாசனத்தில் அமர்ந்து அருள்பாலிக்கும் சிறப்பை அருணகிரிநாதரும் **“தர்ப்ப ஆசன வேதியனே”** எனப் போற்றியுள்ளார். இத்தல தட்சிணாமூர்த்தியின் அருளால் தாயுமானஅடிகள் சிவஞானம் கிடைக்கப்பெற்றார்கள். எனவே இத்தட்சிணாமூர்த்தியின் சிறப்பை “சித்தாந்த முத்திமுதலே சிரகிரி விளங்கவரு தட்சிணாமூர்த்தியே சின்மயானந்தகுருவே” என சிறப்பித்து பலபாடல்களில் பாடியுள்ளார்.

**வழிபடுவதால் ஏற்படும் சிறப்பு:-**

இவரை வழிபடுவதால் கல்வியும், ஞானமும் கிடைக்கும், இவரை வியாழக்கிழமைதோறும் விரதம் இருந்து மஞ்சள் வஸ்திரம் முல்லை மலர், சாத்தி, குத்துக்கடலை மாலை போடலாம்.

**மகிஷாசுர மர்த்தினி சிறப்பு:-**

இராகு காலத்தில் செவ்வரளி மாலை சாத்தி குங்கும அர்ச்சனை செய்து, பாயாஸ நைவேத்தியம் செய்து வழிபட்டால் சத்ரு ஜெயம் கிட்டும். புகழ் ஓங்கும்.

**செவ்வந்தி விநாயகர்:-**

தல விநாயகர் செவ்வந்தி விநாயகர் என்னும் திருப்பெயர் உடையவர். இவரை வணங்க அனைத்து செல்வங்களும் கிடைக்கும். இவர் தாயுமானவர் சன்னதி எதிரே கிழக்கு நோக்கி எழுந்தருளி உள்ளார். இறைவன் செவ்வந்திநாதர் என்று அழைக்கப்பட்ட காரணத்தால், இவர் செவ்வந்தி விநாயகர் என்று அழைக்கப்படுகிறார்.

**அருள்மிகு முத்துக்குமாரசுவாமி:-**

குன்றுதோறும் குமரன் இருப்பான் என்பதைப்போல் இத்திருத்தலத்தில் வள்ளி தேவசேனா சமேதராய் உள்ளார். முருகன் வழிபாடு பழமையான வழிபாடு ஆகும். முருகன் சிவபெமானின் கண்களில் இருந்து தோன்றியவர். அருணகிரிநாதர் தமது திருப்புகழில், திருச்சிராப்பள்ளி திருப்புகழ் என முத்துக்குமாரசுவாமி மீது 20-பாடல்கள் பாடியுள்ளார்.

**வழிபடுபவர் அடையும் சிறப்பு:-**

சூரனையும் ஆட்கொண்ட இவரை சஷ்டி கிருத்திகை நாட்களிலும், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் வழிபட்டால் கொடிய வினைகள் தீரும், மும்மலம் அழியும். சிறந்த குழந்தைப்பேறு கிடைக்கும்.

**துர்க்கை அம்மன்:-**

இச்சா சக்தி (காளி), கிரியா சக்தி (லெஷ்மி), ஞானசக்தி (சரஸ்வதி) ஆகிய முப்பெரும் சக்தியும் சேர்ந்தவர் துர்க்கா தேவி ஆவார்.

**வழிபடுவதால் அடையும் சிறப்பு:-**

சுவாமி சன்னதியில் உள்ள துர்க்கை அம்மனை நல்லெண்ணை, இலுப்பெண்ணை கலந்து எலுமிச்சம்பழத்தில் தீபமிட்டு சர்க்கரை பொங்கல் நைவேத்தியம் செய்து வழிபட்டால் சகல சௌபாக்ய மங்களம், ஜெயம் உண்டாகும், திருமணத்தடை நீங்கும், குழந்தைப்பேறு உண்டாகும், துன்பம் விலகும்.

**அருள்மிகு ஜுரகரேஸ்வரர்:-**

தாயுமானசுவாமி சன்னதியில் மும்மூர்த்திகளின் அம்சமாக மூன்று தலைகள், மூன்று கால்களுடன், மூன்று கைகளுடன் எப்போதும் தவ நிலையில் உள்ள அபூர்வ மூர்த்தியான ஜுரகரேஸ்வரரை பால், இளநீர், சந்தனம் கொண்டு அபிஷேகம் செய்து தயிர்சாதம் நைவேத்யம் செய்து வழிபட்டால் உடலுக்கு ஏற்படும் ஜுரம் நரம்பு வியாதிகள் நீங்கும். தோல் சம்பந்தமான வியாதிகளும் அகலும்.

**அருள்மிகு காலபைரவர்:-**

தேய்பிறை, அஷ்டமி திதியில் பைரவருக்கு, புனுகு சாத்தி, வடைமாலைசாத்தி, தயிர் அன்னம் நைவேத்யம் செய்தால் துயர் நீங்கும் வழக்கு விவகாரங்களில் வெற்றி கிட்டும். களவு போன பொருள் வந்துசேரும்.

**அருள்மிகு சண்டிகேஸ்வரர்:-**

சிவபெருமானின் கோமுகி (அபிஷேகத் தீர்த்தம்) அருகே தெற்கு நோக்கி தனி சன்னதியில் எழுந்தருளி இருக்கிறார். இவருக்கு சிவபெருமான் ஈஸ்வரர் பட்டத்தை வழங்கி இருக்கிறார். தாயான ஈசனிடம் வேண்டும் அனைத்து வேண்டுதல்களும், இவர் மூலம் இறைவனிடம் பெறுகிறோம். ஆதனை இவரை வேண்டி சிவ பிரசாதம் பெறுவதற்குரிய நிலையை அடைகிறோம்.

**தாயுமானவர் சன்னதி சித்திரமண்டபத்தின், சித்திர கருங்கல் வேலைப்பாடு**

**அருணகிரிநாதர் தமது திருச்சிராப்பள்ளி திருப்புகழில்,**
**“மகர தோரண சித்திரமண்டப அப்பர் வணங்கிய பெருமானே” என்று**
**சித்திரமண்டபத்தை வர்ணனை செய்திருக்கிறார்.**

1. சித்திர மண்டபத்தின் மேல் விதானத்தில் சிவபெருமானின் பிரம்மாண்ட விஸ்வரூபக் காட்சி நான்கு திசைகளிலிருந்தும் பார்க்கும்பொழுது நம்மை பார்ப்பது போல் அமைந்துள்ளது. விஸ்வரூபக் காட்சியில் அஷ்டமலைகள், அஷ்டகஜங்கள், அஷ்டசமுத்திரம், உள்ளடங்கிய உலகத்தை ஆதிசேஷன் தாங்கிக்கொண்டு இருப்பது போன்று உள்ளது அற்புத வேலைப்பாடு. விஸ்வரூப பார்வை **“அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்”** என்ற பாடலில் உள்ளதைபோல் பார்வை எங்கும் இருக்கும்.

2. சித்திரமண்டபத்தில் ஒரே கருங்கல்லால் ஆன நான்கு சங்கிலிகளின் வேலைப்பாடுகள் சுமார் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று தொல்பொருள் துறையினர் கூறியுள்ளனர்.

3. தாமரைப்பூவில் உள்ள கிளி, தேன் பருகுவதைப்போல் உள்ளது, கருங்கல் வேலைப்பாட்டின் அற்புதக்காட்சியாக திகழ்கிறது.

4. தலப்பதிகம் என்று அழைக்கப்படும் தலவரலாறு செட்டிப்பெண் இரத்தினாவதிக்கு இறைவனே, அவளது தாயாகவந்து மகப்பேறு மருத்துவம்காட்சியும் அற்புதக் காட்சியாக அமைந்திருக்கின்றது.

6. சிவபெருமான், கங்கை, பார்வதி ஆகியோருடன் மேற்படி பிரசாத மருந்து எடுத்துக்கொண்டு வரும் காட்சியும், இம்மண்டபத்தில் உள்ள கருங்கல் தூணில் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

7. அடுத்துள்ள கருங்கல் தூணில் தமது தாய் தம்முடைய மகப்பேறு மருத்துவத்திற்கு வந்திருப்பதை முன்னிட்டு, தமது தாயாரை வரவேற்று உபசரிக்கும் காட்சி ஒரு அற்புத கலை வேலைப்பாட்டிற்கு சான்றாக விளங்குகிறது.

8. கற்பிணிப்பெண்கள் இன்றும், மேற்படி சிற்பத்தில் உள்ள செட்டிப்பெண்ணின் வயிற்றில் வெண்ணையைத் தடவி, தங்களுக்கும் சுகப்பிரசவம் ஆகவேண்டும் என்று பிரார்த்தனைச் செய்துகொள்வர்.

9. இங்குள்ள ஏழு தூண்களில் நடராஜர் பெருமான், ஊர்த்துவ தாண்டவம் செய்வதும், காளி எதிர் தாண்டவ நடனம் ஆடுவதும் ஒரு தூணில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

10. சிவபெருமான் (அட்டவீரட்டானத்தில்) வழுவூர் வீரட்டானத்தில் யானையை உரித்து போர்த்திக்கொள்ளும் கோலம் ஒரு தூணில் சிற்பமாக வடிவமைத்திருப்பது சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

11. கண்ணப்ப நாயனார், “நில் கண்ணப்பா” (பெரிய புராணத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள) என்ற காட்சி ஒரு தூணில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

12. கர்ணப் பரம்பரை செய்தியில் சித்தரிக்கப்பட்டுள்ள மகாசிவராத்திரியில் வேடன் சிவபெருமானை (சிவலிங்க பூஜை) வில்வம் பறித்துப்போட்டு வழிபடும் காட்சி ஒரு தூணில் சிற்பமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

13. நர்த்தன விநாயகர் நடனம் ஆடும் காட்சி ஒரு தூணில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

14. அருகாமையில் உள்ள கருங்கல் தூணில் மட்டுவார்குழலி உடனார், ரிஷபாரூடர் காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

15. திருச்செங்கோட்டு வேலவர் (முருகப் பெருமான் மற்றும் அர்த்தநாரி) சிற்பங்களும், சிற்பமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

16. சாரமாமுனிவர் இமயமலையில் அமைந்து தவம் புரியும் காட்சியும் கற்தூணில் உள்ளது

17. சித்திர மண்டபத்தைக் கட்டியவர்களான நாயக்க மன்னர்களின் திருவுருவங்களும், 300-ஆண்டுகளுக்கு முன்னர் சித்திர மண்டபத்தைத் திருப்பணிச்செய்த தலவாய் ஜமீன்தார்கள் இங்குள்ள இறைவனை வழிபடும் காட்சி சிற்பமாக உள்ளது.

18. திருச்சிற்றம்பல நடராஜர் நடனக்காட்சி இங்குள்ள கருங்கல் வேலைப்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள அரிய சிற்பமாகும்.

19. இவையனைத்தும் சோழர்கால சிற்பக்கலையின் அருங்காட்சியாகத் திகழ்கிறது.

20. சித்திர மண்டபத்தில் 25-சிவ மூர்த்தங்கள் சித்திரமாக தீட்டப்பட்டுள்ளன.

21. ரிக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களுக்கும் அதிபதிகள் சித்திரங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளது, உலகில் வேறுயெங்கும் காணமுடியாத அதிசயமாகும்.

22. செவ்வந்தி புராணத்தில் உள்ள இத்தலத்தில் நடைபெற்ற அற்புதங்கள், சாரமாமுனிவர் வழிபட்டு சிவபெருமான் மேற்குமுகமாக திரும்பி உறையூரை மண்மாரி பொழிந்த காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

23. செட்டிப்பெண் இரத்தினாவதிக்கு தாயாகவந்து மகப்பேறு மருத்துவம் பார்த்து காட்சிக் கொடுத்த அற்புதக் காட்சியும், இங்கு அரிய ஓவியக்காட்சியாகவும், இந்த ஓவியம் காண்போர்களுக்கு அற்புதக் காட்சியாகும்.

24. சிவபெருமான் மார்கண்டேயரை எமனிடம் இருந்து காப்பாற்றி அருளும் ஓவியம். அருணாசல மூர்த்தம், பஞ்சமுக (சிவலிங்கம்) தோற்றம், நடராஜர் சிவகாமி அம்மன், பிச்சாடனர், காலசம்ஹார மூர்த்தி, காமதகன மூர்த்தி, திரிபுர சம்ஹார மூர்த்தி,யானையை உரித்துப் போர்த்திய வீரட்டானம், அர்த்தநாரீஸ்வரர், பாசுபதம் அருளிய பாசுபாத மூர்த்தி, ஏகபாத மூர்த்தி, மகேஸ்வர மூர்த்தி, உமாமகேஸ்வரன் (முருகன் கிடையாது), சண்டிஹேஸ்வர அனுக்கிரக மூர்த்தி, நால்வர், யானையும் ரிஷபமும் ஒரே உடம்பு இரண்டு தலைகள் உள்ள ஓவியம், எட்டுத்தலை உள்ள நாகங்கள் கோலவடிவமாக இருந்து நடுவில் சிவன் இருக்க பூஜை செய்த ஓவியம், ஒரு குரங்கு தலை எட்டு உடம்பு உள்ள ஓவியம், ஊர்த்தவத் தாண்டவம், காளி தாண்டவம்,

செவ்வந்திநாதரை சாரமாமுனிவர் வழிபாடு செய்த வரலாற்றுக் காட்சி ஓவியம், அம்பிகை தவம் செய்த காட்சி, மூன்றுதலைகள் உள்ள திரிசிரன் என்னும் அரசன் (இத்தலத்திற்கு திருச்சி என்ற பெயர் காரணமாக இருந்த), சுயம்புவடிவாக உள்ள இம்மலையினை தன்னுடைய கையால் பிசைந்து, சிவலிங்கம் செய்து ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து பேறுபெற்றுக் (பதினெட்டு தல அடியார்களில் ஒருவராக) காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது, ரிஷபாரூடர் (சோமாஸ்கந்த மூர்த்தி) அருளும் காட்சி. முதலியவை வேறு எந்தத் தலத்திலும் இல்லாத சித்திரம் மற்றும் கருங்கல் வேலைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

**சித்திரமண்டப கண்ணாடி அறை:-**

சுவாமி எழுந்தருளும்போது ஏழடி உயரம் எட்டடி அகலம் உள்ள ஒரே அளவிலான கண்ணாடி முன்பு தீபாராதனை செய்யப்படுகிறது. சுவாமி தன் அழகைக் கண்ணாடி முன் காணும் நிகழ்ச்சியான இவ்வைபவம் “தட்டி சாத்துதல்” என்று கூறப்படுகிறது

## அருள்மிகு மட்டுவார்குழலம்மை சன்னதி

(இது மலைமேல் முதல் தல அமைப்பு) உமையம்மையார் சிவபெருமானை மணந்துகொள்ள விரும்பி, இத்தலத்தில் அவதரித்தார். அம்மையின் திருப்பெயர் மட்டுவார்குழலம்மை, மட்டு என்பது தேன் நிறைந்த மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையை, அணிந்துள்ள, நீண்ட கூந்தலை உடையவள் என்பது அப்பெயர் விளக்கம் ஆகும். அம்மையை வடமொழியில் **“சுகந்தகுந்தளாம்பிகை”** என்றும் வழங்குவர். பலஅணிமணிகள் பூண்டு, சர்வ அலங்காரத்துடன் அழகே உருவாக அம்மை காட்சிஅளிக்கிறார்.

கர்நாடக இசை அறிஞர் தியாகராஜசுவாமிகள் அம்பாள் பெயரில் **“குந்தள”** என்ற ராகம் அமைத்து கீர்த்தனை பாடியுள்ளார்.

அம்பாள் கருவறை வெளிச்சுவற்றில் ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீ சௌந்தர்யலகரி (அழகுவெள்ளம்) பாடல்கள் கல்லில் பதிக்கப் பெற்றுள்ளன.

**அம்பாளை வழிபடுவதால் அடையும் சிறப்பு:-**

அருள்மிகு மட்டுவார்குழலம்மை, மலரடி போற்றி நாளும் வழிபட்டால், தனம் தருவாள், கல்வி தருவாள், தெய்வ வடிவு தருவாள், நல்லன எல்லாம் தருவாள். தியாகராஜ சுவாமிகளால் அம்மையின் பெயரில் **‘குந்தள’** ராகம் அமைத்துள்ளதால் அம்மையை வணங்க கலைஞானம் கிட்டும்.

**ஸ்ரீ மகாலெஷ்மி சன்னதி சிறப்பு:-**

அருள்மிகு மகாலெஷ்மி மற்ற திருத்தலத்தில் அமா்ந்த நிலையில் எழுந்தருளி இருப்பாள். ஆனால் இத்திருத்தலத்தில் நின்ற திருக்கோலத்தில் மரத்தாலான விக்கிரகமாகக் காட்சியளிக்கிறாா்.

108 முதல் 1008-வரையிலான தெய்வீக மலரான செந்தாமரை மலா்களை மாலையாகத் தொடுத்து, ஸ்ரீசுத்த ஹோமம் செய்தால் சகல செல்வங்களும், ஐஸ்வா்யங்களும் பெற்று பெறுவாழ்வு வாழலாம். நெய்விளக்கேற்றி தாமரை இதழ், குங்குமம் கொண்டு சகஸ்ரநாம அா்ச்சனைசெய்து, பால், தேன்கலந்து நைவேத்யம் செய்தால் அஷ்டலஷ்மி கடாட்ஷம் கிட்டும். வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6-மணி அளவில் ஸ்ரீ சுக்தஹோமம் சிறப்பாக நடைபெறுகிறது.

**அருள்மிகு பாதாள அய்யனாா்:-**

அருள்மிகு மட்டுவாா்குழலம்மை சன்னதி எதிா்புறம் இருப்பவா் அருள்மிகு பாதாள அய்யனாா். **'திரிசிரன்'** என்ற அரக்கனின் அகங்காரத்தை அகற்றி, அவனை திருத்தி இம்மலைமேல் எழுந்தருளி இருப்பவா் ஸ்ரீ பாதாள அய்யனாா்.

அம்மன் சன்னதி எதிா்புறம் பாதாளஅறையில் எழுந்தருளி அருள்பாலிக்கிறாா். மற்ற திருத்தலத்தில் பாதாள அய்யனாா், தனிச் சன்னதி கொண்டு எழுந்தருளுவது மிக மிக அபூா்வம். அய்யனாரை தரிசித்த பின்னரே அம்பாளை தரிசிக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் அம்பாளின் பரிபூரண அருள் கிடைக்கும்.

**வழிபடுவதால் அடையும் சிறப்பு:-**

வற்றிய கிணறு, குளம், புதிய கிணறு ஆகியவற்றில் நீரோட்டம் நன்கு பெருகிட இவரை வழிபடலாம். இவரை வணங்கினால் மழைப்பொழியும், விளைச்சல் பெருகும், பஞ்சம் நீங்கும்.

அம்மன் சன்னதியின் சுற்றுப்பிரகாரத்தில் இத்திருத்தலத்தை வழிபட்ட 18-தல அடியாா்களான பிரம்மன், இந்திரன், உமாதேவி, அகத்தியா், ஜடாயு, திரிசிரன், இராமபிரான், அா்ச்சுனன், அனுமன், விபீடணன், ஐய்யனாா், நாகக்கன்னிகைகள், சாரமாமுனிவா், சோழன், இரத்தினாவதி, ஸ்ரீமௌனகுரு, தாயுமானஅடிகள், சேக்கிழாா் முதலிய 18-தல அடியாா்கள் கற்சிலைகளாக உள்ளாா்கள். அம்மன் சன்னதியின் எதிா்புறம் உள்ள பள்ளியறைக்கு எதிராக, **'சக்திபேதம் - திரிபுரை சக்கரம்** - திருமந்திரத்தில் சக்தியை பற்றி வருகின்ற 30-பாடல்கள் உள்ளன. அம்மன் சன்னதியில் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, துா்க்கை உள்ளது. மகிஷாசுரமா்த்தினியும் உள்ளது. அம்மன் சன்னதியை அடுத்து கொடிமரத்து மண்டபம் உள்ளது.

**கொடிமரத்து மண்டபம்**

**கொடிமரத்து மண்டபமும் சிறப்ப சிறப்பும்:-**

இக்கொடிமரத்து மண்டபத்தில் உள்ள கொடிமரத்தில், தெப்பத்திருவிழாவிற்கும், சித்திரைத்தோ் திருவிழாவிற்கும் கொடியேற்றி உற்சவம் துவங்குவது சிறப்பம்சமாகும். இம்மண்டபத்தின் சுற்றுத் திருப்பணியை "மன்னன் மகாபலி செய்திருக்கிறாா். மலையைச் சுற்றியுள்ள திருமதில்கள் யாவும், சூரராக சோழன் திருப்பணி செய்திருக்கிறாா். கொடிமரத்தின் அருகில் பானுகம்பன் சங்கு ஊதும் நிலையில் உள்ள கற்சிற்பம் உள்ளது. இதை அடுத்து

பெரிய பலி பீடம் உள்ளது. இங்கு **'மகாநந்திதேவர்'** மேற்பார்வையாக இறைவன் மேற்கு நோக்கி இருப்பதால் நந்தியம்பெருமானும் மேற்கு திசையை நோக்கிய நிலையில் ஒரே கல்லால் வடிவமைத்து இருப்பது அற்புதமாகும்.

இங்குள்ள தூணில் ஆமை சிற்பம் உள்ளது. இது ஐம்புலன்களையும் அடக்கினால் இறைவனை அடையலாம் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது. கொடிமரத்திற்கு தென்பகுதியில் அறுபத்து மூவர் கற்சிலைகளும் உள்ளன. பெரிய வடிவில் (கம்பத்தடி விநாயகர்) வடிவமும், மிக அழகிய சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை சன்னதியும், சிறப்புற அமையப்பெற்றுள்ளது.

இந்த கொடிமரத்து மண்டபம், பாண்டிய மன்னரான சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரமாக அவன் வணங்கும் மதுரையில் உள்ள ஆலவாய் பெருமானை, இங்கு எழுந்தருள வைத்து சிறிய சன்னதி அமைப்பில், மீனாட்சி சுந்தரேஸ்வரர் சன்னதியை அமைத்து தினந்தோறும் வழிபாடு செய்தமையை அறியமுடிகிறது. மேலும் இங்குள்ள தூண்களில் இந்திரவிமானமும், ஒரு தூணில் பாண்டிய மன்னனும் அரசியும் இந்திர விமானத்தில் உள்ள சிவலிங்கத்தை பூஜை செய்வதைப்போல் ஒரு தூணில் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. மேலும் சாரமாமுனிவர் தவம் செய்யும் காட்சி, அக்காலத்தில் மலை, வெய்யில் முதலியவற்றிற்கு அணியும் சம்மன்கூடு அணிந்த நிலையில் உள்ள ஒரு சிற்பம், குடுமி வைத்த மந்திரிகள், முருகன் மயில்மீது சண்டையிடும் காட்சி, தடாகைபிராட்டி திக் விஜயம் செய்யும் காட்சி, சிவபெருமானை ஐந்து அடுக்கு தீபம் கொண்டு, சிவாச்சாரியார் வணங்குவதைப்போல உள்ள சிற்பம், ஒவ்வொரு தூண்களையும் பெண்கள் தாங்கிக்கொண்டிருப்பதைப்போல உள்ள சிற்பம், எட்டு பாம்புகள் ஒன்றாக இணைந்து சிவபெருமானை வழிபடுவதைபோல உள்ள சிற்பம், சிவனடியார் சிற்பம், கொடிமரத்துக்கு பக்கத்தில் மடப்பள்ளி வாசலில் உள்ள தூணில் ஏகபாதமூர்த்தி சிற்பம் முதலியவை சிற்பக்கலைச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

**கொடிமரத்து மண்டப சகஸ்ரலிங்கேஸ்வர சன்னதி:-**

மிகவும் வியப்பூட்டும் வகையில் சகஸ்ரலிங்கேஸ்வரர் சன்னதியில் உள்ள லிங்க திருமேனியில் சின்னச் சின்னதாக ஆயிரம் லிங்கங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவரை காதாலாகி கசிந்து கண்ணீர் மல்கி வேண்டினால் சகல தீவினைகளும் நீங்கும். மேலும் இந்த சகஸ்ரலிங்கேஸ்வர சன்னதியில் நேர் எதிரே மேடையில் ஏழு சிவலிங்க வடிவங்களில் ஒன்றான பட்டை வடிவில் உள்ள சிவலிங்கம், நாயகி, நான்முகி, நாராயணி, நளினபஞ்ச சாய்வு, சாம்பவி, சங்கரி, வராகி, வீரபத்திரர், ஜுரகரேஸ்வரர் ஏழு சப்தகன்னிகள் முதலிய கல் திருமேனிகள் உள்ளன.

**கொடிமரத்து மண்டப நவகிரக சன்னதி சிறப்பு:-**

நவகிரகங்கள் அனைத்தும் சூரிய பகவானைப் பார்த்தவாறு (சூரிய பகவான் நடுவில் தன் தேவியரான உஷா, பிரத்யுஷா உடன்) எழுந்தருளி உள்ளதால், இங்குள்ள நவகிரகங்களை வழிபட்டால், நவகிரக தோஷம் நிவர்த்தியாவதுடன் அனைத்து கோள்களையும் வழிபட்ட பலன் கிடைக்கும்.

சூரியன் - உடல்நலம், சந்திரன் - புகழ், அங்காரகன் - செல்வம், புதன் - அறிவு, குரு – நன்மதிப்பு, சுக்கிரன் - அழகு, நாவண்மை, சனி-மகிழ்ச்சி, இராகு-பகைவா் பயம் போக்கும். கேது – கலைவளர்ச்சி.

இவர்களை உள்ளதாலும், உடலாலும் வழிபட்டு நலம் பெறுவோம்.

**கொடிமரத்து மண்டப சட்டநாதர்:-**

மலைப்பாறையில் புடைப்புச் சிற்பமாக மேற்குப்பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளார். இவரை வணங்கினால் சிவபோதம் தித்திக்கும்.

இவரை வணங்குபவர்களுக்கு சிக்கலான தீர்க்க முடியாத வழக்குகளில் இருந்து விடுபட்டு பல நன்மைகளை அடைவார்கள்.

**அடுத்து தளத்தின் மூன்றாவது அடுக்குப்பகுதியாக உள்ள குடைவரை, வசந்தமண்டபம், மணிமண்டபம், உச்சிவிநாயகா் சன்னதி முதலியன உள்ளிட்ட பகுதிகளாகும்.**

**மகேந்திர வர்மன் குடைவரைக்கோயில் :-**

“குணபரன்” என்னும் மகேந்திரவர்மன் திருநாவுக்கரசு சுவாமிகளை கொடுமைப்படுத்தி, பின் அவரது அருளுரையை ஏற்று மனம் திருந்தி சைவ சமயத்தைச் சார்ந்து இத்திருத்தலத்தில் மலையின் கீழும், மலை உச்சியிலும் மலையை குடைந்து இரண்டு குகைக்கோயிலை உருவாக்கினான்.

**கங்காதர மூர்த்தி சிற்பக்கலையழகு :-**

மலையின்மேல் உச்சிவிநாயகர் சன்னதி செல்லும் வழியில், இடதுபுறம் உள்ள குடைவரை சிவன்கோயில் சிறந்த வேலைப்பாடு கொண்டதாகும். இக்குடைவரைக்கோயிலை **‘லலிதாங்குர பல்லவே சுரகிருதம்’** என கல்வெட்டு கூறும். இக்குடைவரையின் பக்கவாட்டில் ஒரு கருவறை உள்ளது. இதற்கு எதிரே உள்ள சுவரில் ஏழடி சதுரம் உள்ள இடத்தில் கண்ணையும், கருத்தையும் ஈர்க்கும் பதுமைகள் செதுக்கப்பட்டுள்ளது. அவற்றின் நடுவே பெரியதான கங்காதர சிற்பம் கலைநுணுக்கத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உடல் அழகும், கணுக்கால் வரை அணிந்துள்ள உடை அழகும், இருகரங்கள் மீது தவழுகின்ற மேலாடை அழகும், பெருமிதமான முகப்பொழிவும், பல்லவர்கால சிற்பக்கலைத்திறனை எடுத்துக்காட்டும் அற்புத சிற்பமாகும்.

மேலும், முக ஒளியும், நிற்கும் நிலையும் காணத்தக்கவை. கங்கையை அணிந்த சிவபெருமானே எதிரில் நிற்பதை போன்ற காட்சியை அச்சிலை அளித்து நிற்றல் வியப்பினும் வியப்பே! அச்சிலை சிவபிரானது சடையிலிருந்து விழும் கங்கையை வலக்கையில் தாங்கியும் பூணூலாகப் போட்டுள்ள பாம்பின் தலையைப் பிறிதொரு வலக்கையால் பிடித்தும், கண்மணிமாலையை இடக்கை ஒன்றில் பிடித்தும், மற்றொரு இடக்கையை இடுப்பில் வைத்தும் நிற்கின்ற காட்சி அற்புதக் காடசியாகும். இச்சிலையின் வலக்காலில் கீழ் முயலகனைக் குறிக்கும், சிறிய கற்சிலை ஒன்று இருக்கின்றது. சிவனைச் சுற்றிலும் அடியார் நால்வர் வணங்குதல் போலவும், மேலே யாழோர் (கந்தர்வர்) இருவரும் சிறிய மனிதன் ஒருவனும் மிதத்தல் போலவும், சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன.

இச்சுற்றுளி வேலைப்பாட்டை கண்டு வியக்காத ஆராய்ச்சி அறிஞரே இல்லை. இக்கோயிலை சத்தியசந்தன், சத்ருமல்லன் குணபரன் என்னும் விருதுகள் பூண்ட அரசன் அமைத்தான் என்று இங்குள்ள கல்வெட்டுக் கூறுகின்றது.

**மலை அடிவார குடைவரைச் சிறப்பு:-**

அருள்மிகு மாணிக்க விநாயகர் சன்னதியை அடுத்து யானையை மண்டபத்திற்கு நடுவில் உள்ள, மீனாட்சி சுந்தரேஸ்வரர் தெருவில், இக்குடைவரை உள்ளது.

இக்குடைவரைக் கோயில் அளவில் பெரிதாய் காட்சியளிக்கிறது. இக்குடை வரையின் கிழக்கிலும், மேற்கிலும் இரு கருவறை முன்மண்டபத்துடன் குடையப்பட்டுள்ளது. இம்மண்டபம் வடக்கு சுவரில் அளவில் பெரியதான **'விநாயகர், முருகன், பிரம்மா, கதிரவன், கொற்றவை'** ஆகியோரின் நின்றகோல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் மேலே பக்கத்திற்கொரு வித்தியாதரராலும், கீழே பூதகணம் அல்லது அடியவர்கள் சிற்பங்களும் காட்சியளிக்கின்றன. தமிழக கலைவரலாற்றில் நின்ற நிலையில் அமையும் முதல் விநாயகர், இக்குகையில் உள்ள விநாயகர் ஆவார். கிழக்குப் பக்கத்தில் அமையும் கருவறையின் பின் சுவற்றில் நின்ற நிலையிலான திருமால், வித்தியாதரர்கள், அடியவர், தேவிசிற்பங்களும், கலையழகுடன் செதுக்கப்பட்டுள்ளன. மண்டபதூண்கள் பல்லவர்கால கலைமுறையை எடுத்துக்காட்டும் வகையில் மிகவும் நுணுக்கமாய் செதுக்கப்பட்டுள்ளன.

**உச்சி விநாயகர் சிறப்புக்கள் (பார்போற்றும் விநாயகர்)**

மலைக்கோட்டை என்றதுமே நம் நினைவுக்கு வருவது உச்சிப்பிள்ளையார் தான். இத்தலத்தில் கிழக்கு நோக்கி கருணையே வடிவமாக காட்சிதருகிறார். கம்பீரமான தோற்றத்துடன் காட்சித் தந்து அருளுகிறார். உலகத்தவரால் **"உச்சிவிநாயகர்"** என்று உவப்போடு அழைக்கப்படுகிறார். திருச்சிராப்பள்ளியின் திசைகளில் எங்கிருந்து நோக்கினாலும், இவர் அமர்ந்துரையும் காட்சி கண்கொள்ளாக்காட்சி ஆகும். நில மட்டத்திலிருந்து 273-அடி உயரத்திலும 417-படிகளை கடந்து சென்றால் இவரை தரிசிக்கலாம். உச்சிவிநாயகர் திருக்கோயிலைச் சுற்றி திருச்சுற்று பிரகாரம் உள்ளது. இங்கிருந்து நகரை பகல், இரவு நேரங்களில் காணும் காட்சி ஒரு விமானத்தில் இருந்து நகரையும், சுற்றுப்புறங்களையும் காண்பதைப்போல் தோன்றும். எங்கும் சோலைகள், வயல்வெளிகள், வாழைத்தோட்டங்கள், தென்னந்தோப்புக்கள், இயற்கை அன்னை கொலுவீற்றிருக்கும் எழில் காட்சியைக் காணலாம். மேலும் திருவரங்கத்தையும், திருச்சிராப்பள்ளியையும் பிரிக்கும் காவிரிநதியும், காவிரிக்கும், கொள்ளிடத்திற்கும் இடையில் குடிகொண்டுள்ள அரங்கநாதபெருமானின் திருக்கோயில் கோபுரமும், ஆனைக்கா அண்ணலின் திருக்கோயில் கோபுரமும், எடுப்பாகவும், மிடுக்காகவும் தோன்றும். உச்சிவிநாயகர் சன்னதியில் இருந்து இரவு நேரத்தில் பார்க்கும்போது நகரின் ஒளி உமிழும், மின்விளக்குகள் நாம் வானவீதியில் இருப்பதைப்போன்ற ஒரு உணர்வையும் தோற்றுவிக்கும்.

**உச்சிபிள்ளையார் வரலாறு:-**

இராமர் பட்டாபிசேகத்திற்கு சென்ற விபீஷணர், இராமர் ஞாபகார்த்தமாக கொடுத்த ஸ்ரீரங்கநாதர் விமானத்தை, அந்தணர் உருவம் கொண்டு நின்ற சிறுவனிடம் கொடுத்துவிட்டு, காவிரிக் கரையில் நீராடச் சென்றார். அந்தணச் சிறுவன் சிறிதுநேரம் கையில் வைத்திருந்து விட்டு, பின் விபீஷணர் வரும் முன்னரே பூமியில் வைத்துவிட்டு மலையின் உச்சியில் ஏறி ஓடினான். திரும்ப வந்து பார்த்த விபீஷணர் அரங்கர் விமானத்தை எடுத்து பார்க்க அதை எடுக்க இயலாமல் நிலைபெற்றுவிட்டது. கோபங்கொண்ட விபீஷணர் அந்தணச் சிறுவனைத் துரத்தி சென்று தலையில் குட்டினார். அந்தணச் சிறுவனே உச்சி விநாயகராக காட்சிக் கொடுக்க அரங்கநாதர் திருச்சிராப்பள்ளியிலேயே இருக்கவேண்டும் என்பது விநாயகப் பெருமான் திருவுளம் என அறிந்தார். இப்புராணம் விநாயகர் புராணத்தில் இடம் பெற்றுள்ளது. தற்போதும் உச்சிவிநாயகர் தலையில் $2^1/_2$ அங்குல அளவிலான குட்டுப்பட்ட பள்ளம் உள்ளது.
மலையின் கீழ்ப்புறம் தற்போதும் விபீஷணர் பாதம் இரண்டு பாறையின் மீது உள்ளது. **உச்சிவிநாயகர் சன்னதியும் படிகளின் தோற்றமும், விநாயகர் துதிக்கைப்போலவே** உள்ளது அரிய சிறப்பாகும்.

மேலும் உச்சிவிநாயகர் சன்னதியின் பின்புறம் இன்றும் சமண முனிவர்களின் கற்படுகைகளைக் காணலாம். அவற்றில் அந்தந்த படுக்கையிலிருந்த சமண முனிவர்களின் பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன. அவைகள் ஐந்தாம் நூற்றாண்டின் நிகழ்ச்சிகள். அவர்களில் ஒருவர் **"சிரா"** என்னும் பெயருடையவர் என்று ஒரு கற்படுக்கை அறிவிக்கிறது.

**உச்சிப்பிள்ளையாரை வழிபடுவதால் அடையும் பயன்கள்:-**

பார்வதி பரமசிவன் மானசீக புத்திரரும் கணபதி, விநாயகர், விக்னேஸ்வரர் என்று அழைக்கப்படுபவரும், வடிவத்தில் உயர்திணையாகவும், அ∴றிணையாகவும், பக்தர்களை 16-வடிவங்களில் காத்தருளுகின்ற விநாயகப் பெருமானை வெள்ளிக்கிழமை, விநாயகர்சதுர்த்தி, சங்கடங்கள் தீர்க்கும் சங்கடஹரசதுர்த்தி ஆகிய நாட்களில், விநாயகரை வழிபடுவதால் சகல தீமைகளும் நிவர்த்தியாகும். வெவ்வினைகள் எல்லாம் வேர் அறும்.

மேலும், குன்றைநாடி வருபவர்களின் குறைகளை நீக்கி சர்வதேச அளவில் பக்தர்களை கொண்டு விளங்குகிறார். உள்ளூர், வெளியூர் அன்பர்கள் மட்டும் அல்லாது மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாட்டு அன்பர்களும் நாள்தோறும் இவரை தரிசித்து செல்கின்றனர். 108, 1008 சிதறுதேங்காய் உடைப்பவர்கள் எண்ணம் கைகூடும். மோதகம் நிவேதனம் செய்பவர்களுக்கும் சந்தனகாப்பு அபிஷேகம் செய்பவர்களுக்கு, உச்சிவிநாயகர் வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் வள்ளலாக இருக்கிறார்.

## இறைவன் மேற்கு முகம் திரும்பிய வரலாறு

திருமூலர் மரபில் வந்த சாரமாமுனிவர் செவ்வந்திமலர் கொண்டு வழிபட்ட காரணத்தினால் செவ்வந்திநாதர் என அழைக்கப்பட்ட தாயுமானசுவாமி, சாரமாமுனிவர் பொருட்டு கிழக்குமுகமாக இருந்த அவர் மேற்முகமாக திரும்பிய வரலாறு பின்வருமாறு.

திருமூலர் மரபில் வந்த சாரமாமுனிவர் சிராமலைப் பெருமானுக்கு நந்தவனம் அமைத்து அதில் செவ்வந்தி மலர் பயிரிட்டு, நாள்தோறும் அம்மலரால் சிராமலைப் பெருமானை வழிபட்டு வந்தார். செவ்வந்தி மலர் கொண்டு வழிபட்ட காரணத்தால் சிராமலை பெருமானுக்கு **“செவ்வந்திநாதர்”** என்ற பெயர் ஏற்பட்டது. பூ வாணிகம் செய்யும் ஒருவன் சாராமாமுனிவர் நந்தவனத்தினுள் புகுந்து செவ்வந்தி மலர்களை எல்லாம் கொய்து அந்நாளில் உறையூரை ஆட்சிசெய்து வந்த பராந்தகச் சோழனுடைய தேவிக்கு கொடுத்து வந்தான். செவ்வந்திமலர் களவுபோவதைச் சாரமாமுனிவர் மறைந்திருந்து கவனித்துக் களவின் காரணம் அறிந்து, அரசனிடம் முறையிட்டார். அரசன் கள்வனை அழைத்து, கண்டித்துத் தண்டிக்கவிலை. சாரமாமுனிவர் இந்தச்செயல் குறித்துச் செவ்வந்தி நாதப்பெருமானிடம் முறையிட்டார்.

**மண்மாரி:-**

சாரமாமுனிவர் முறையிட்டதனால் சிராமலைப் பெருமான், கிழக்கு முகமாக இருந்தவர், மேற்கு முகமாகத் திரும்பி, மேலும் காற்று, மேகங்கள் கொண்டு, உறையூர் மீது மண்மாரி பொழியச் செய்தார். அரசனும், அரசியும் அரண்மனையை விட்டு வெளியேறினர். உறையூர் முழுவதும் மண்மாரியால் அழிந்தது. அந்த மண்மாரி அரசனைப் பின் தொடர்ந்தது. அரசன் இறந்துபோனான். அவன் மனைவி கருவுற்றிருந்தாள்.

பின்பு உறையூரில் எழுந்தருளியிருக்கும் காவல்தெய்வம் வெக்காளிஅம்மன், இறைவனை வேண்டி சாந்தப்படுத்தியதாலும் மண்மாரி பொழிவது நின்று உறையூர் பெரும் அழிவிலிருந்து காக்கப்பட்டது.

மன்னன் மனைவி காவிரியில் விழுந்து உயிர் விடத்துணிந்தாள். அந்தணர் ஒருவர் பாதுகாத்து அடைக்கலம் கொடுத்தார். அவள் ஈன்ற மகவு **‘கரிகாலன்’** ஆவான்.

கள்வன் மலர் திருடிய வேலையில் தேவதத்தன் சங்கு ஊதி தெரிவித்திருக்கிறான். அதன் அடையாளமாக சங்கு ஊதும் தேவதத்தன் கற்சிற்பம் கொடிமரத்து மண்டபத்தில் உள்ளது.

இவ்வாறு இத்தலத்து இறைவன் தவறுகளை தண்டித்தும், அன்புடன் வேண்டுவோர்க்கு வேண்டுவன தந்தும் நிக்கிரக, அனுக்கிரக மூர்த்தியாக விளங்குகின்றார். இறைவன் கிழக்குமுகமாக இருந்த காரணத்தினால் இன்றளவும் மேளவாத்தியம், நாதஸ்வரம், மற்றும் பாரயணம் கிழக்குமுகமாகவே நடைபெற்றுவருகிறது.

எனவே இந்நிகழ்ச்சியை சித்தரிக்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் விழாநாளில் மாலை 6-00 மணி அளவில் தாயுமானவர் சந்நதியிலிருந்து சாரமாமுனிவர் மற்றும் நாககன்னிகைகள் உற்சவர் புறப்பாடு செய்யப்பட்டு அம்மன் சந்நதி வலம்வந்து சுவாமி சந்நதி முன்பு இறைவன் மேற்குமுகம் திரும்பிய ஐதீகம் வாசிக்கப்பட்டு, பாடல்கள் பாடப்பட்டு, செவ்வந்திமலர்களால் அர்ச்சனைசெய்யப்பட்டு தீபாராதனை நடைபெறும்.

இறைவன் கிழக்குமுகம் இருந்ததை தெரிந்துகொள்ளும் வகையில் இன்றும் நிலைக்கதவு மூலஸ்தானத்திற்கு பின்புறம் உள்ளது.

## தான்தோன்றீஸ்வரர் வரலாறு

### கோழியூர்:-

உறையூருக்குக், கோழியூர் என்பது சிறப்புப்பெயர் ஒரு கோழி, செயிர்த்து, யானையுடன் போரிட்டு வென்ற காரணம் பற்றிக் கோழியூர் எனப்பெற்றது.

### சுயம்புநாதர்:-

கருதுவார் கருத்து அறியும் பெருமான், காந்திமதியின் கருத்தறிந்து, அவ்விடத்தில் சுயம்புலிங்கமாகத் தோன்றிக் காந்திமதிக்குக் காட்சியளித்தான். இறைவன், சுயம்புவாகத் தோன்றியதால், 'தான்தோன்றீசுவரர்' என்னும் திருப்பெயர் அடைந்தார். காந்திமதி தான்தோன்றீசுவரரை வழிபட்டுப், போற்றிப் புகழ்ந்து, தன் இருப்பிடம் அடைந்தாள்.

சூரவாதித்த சோழன் இந்த அற்புதச்செயல் கேட்டுத் தான்தோன்றீஸ்வரருக்குத் தனி ஆலயம் அமைத்து, வழிபாடும் நடக்க வேண்டிய எற்பாடுகள் செய்தான்.

### திருத்தான்தோன்றி:-

இக்கோயில் உறையூருக்குச் செல்லும் சாலையின் இடையில் உள்ளது. இதன் பெயரால் 'திருத்தான்தோன்றி' என்னும் சிற்றூர் தோற்றம் பெற்றது.

## மட்டுவார்குழலம்மை மணவிழா

### வளர்ப்பு:-

உமையம்மையார் சிவபெருமானை வழிபடவும், மணந்து கொள்ளவும் விரும்பி, இத்தலத்தில் ஒரு தாமரைமலரில் சிறிய பெண்குழந்தை வடிவம் கொண்டு தோன்றி, கார்த்தியாயன முனிவரால் வளர்க்கப் பெற்றுவந்தார்.

### தவம் இயற்றுதல்:-

அந்தப்பெண்ணின் நீண்ட கூந்தல் இயல்பாகவே நறுமணம் உடையதாக இருந்தமையால், மட்டுவார்குழலம்மை என்னும் திருப்பெயர் பெற்றார். சிவகங்கை என்னும் தீர்த்தத்தில் நீராடி, அருகில் சுயம்புவாகத் தோன்றிய சிவலிங்கப் பெருமானை வழிபட்டுத் தவம் இயற்றி வந்தார். அந்த இடமே தற்போது நாகநாதர் திருக்கோயிலாக விளங்குகிறது. சிவபெருமான் அவருடைய முதல் விருப்பத்தை நிறைவேற்றக் கருதி எழுந்தருளி வந்து, திருக்காட்சி கொடுத்து திருமணம் செய்து கொண்டார்.

### ஆறாம் நாள் விழா:-

சித்திரைப் பெருவிழா நாட்களில், ஆறாம் நாள் விழா மட்டுவார் குழலம்மை, தாயுமானவர் திருமணவிழாவாக ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது. இதனால் சிவமாகிய செம்பொருள், சக்தியுடன் சேராவிடில் உலகில் ஒன்றும் நடைபெறாது என்பதும், இறைவன் சக்தியைக்கொண்டே ஐந்தொழில்களையும் நடத்துகின்றான் என்பதும் புலனாகின்றன.

## வரலாற்றில் மலைக்கோயில்

**மலைக்கோயில்:-**

தமிழக வரலாற்றில் திருச்சிராப்பள்ளிக்கு தனிச் சிறப்புக்கள் பல அமைந்துள்ளன. தமிழகக் கற்கோயில்கள் வரலாற்று நிகழ்வுகளில் மலைக்கோயில் சிறப்பிடம் பெறுகிறது.

சிராப்பள்ளி என்பதன் பெயர்க்காரணம் பற்றி வரலாற்று ஆராய்ச்சியாளர் திரு.தி.வி.சதாசிவ பண்டாரத்தார் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

**மகேந்திரவர்மன்:-**

சிராப்பள்ளிக் குடைவரைக் கோயிலைக் கட்டியவன் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகேந்திரவர்மன் இத்திருத்தலத்தில் செய்த திருப்பணிகள் பல அவற்றில் எட்டு சுலோகங்கள் அடங்கிய கல்வெட்டு ஒன்று அமைத்துள்ளான். அதில் தான் சைவன் ஆனதையும், திருவதிகையில் அமண் பள்ளிகளை இடித்துக் குணபரேச்சரம் கட்டியதையும் குறிப்பிடுகின்றான். குணபரன் என்பது மகேந்திரவர்மனைக் குறிக்கும் பட்டப்பெயர். இதனைச் சிராப்பள்ளியிலும், செங்கற்பட்டு வல்லத்திலும் உள்ள குகைக்கோயில் கல்வெட்டுக்கள் வலியுறுத்துகின்றன.

அதைப்போலவே சிராப்பள்ளியாகிய இவ்விடத்தும் அமணப்பள்ளி ஒன்று பெரியதாக இருந்தது. அதனை இடித்து, இந்தக்கோயிலைச் சைவனான மகேந்திரவர்மன் கட்டினான். உச்சிப்பிள்ளையார் சன்னதி பின்புறம் உள்ள சமணமுனிவர்கள் கற்படுக்கைகளில் ஒருவர் சிரா என்னும் பெயருடையவர் என்று ஒரு கற்படுக்கை அறிவிக்கிறது. ஆதலால் பள்ளி கோயிலாயினும் பெயர் போகாமல் சிராப்பள்ளி எனவே வழங்குகிறது என்பன அவ்வறிஞர் குறிப்புரையாகும்.

**சிராப்பள்ளி:-**

ஊர்ப்பெயர் சிற்றம்பர் கோயில் பெயர் சிராப்பள்ளி இதனை நன்கு விளக்குவது, முதல் இராசராசன் 16-ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பெற்ற, விக்ரமசிங்க மூவேந்த வேளாண் விளத்தூர் நாட்டில் நிலம் வாங்கி, அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரில் உள்ள சிராப்பள்ளி கோயிலுக்கு அளித்தான் என்ற கல்வெட்டுப் பகுதியாகும்.

முதல் வரகுண பாண்டியன் கல்வெட்டும் இதனையே குறிக்கிறது. இன்னும் சில பகுதிகளில் சிற்றம்பர், சிற்றம்பர் நகர், சிற்றம்பர்பதி என இத்தலம் வழங்கப்பெறுகிறது. ஆதலால் ஊர் சிற்றம்பர் எனவும், கோயில் சிராப்பள்ளி எனவும் வழங்கி வந்தமை தெளிவு.

**மாகேசுவர பூஜை:-**

இராசகேசரிவர்மன் தன் 16-ஆம் ஆட்சி ஆண்டில் சாகுபடிக்குக் கொண்டுவரப்படாத நிலங்களை குறைந்த விலையில் ஐந்து கழஞ்சுக்கு விற்று, நிலம் விளைச்சலுக்கு வந்த பிறகு, நிலம் வாங்கியவர்கள் திருவிழாக் காலங்களில் சித்திரைத் திருநாளில் ஒன்பது நாட்களுக்குப் பன்மாகேசுவரர்களுக்கும் உணவு இடும்படி உத்தரவிட்டான்.

**நிலக்கொடை:-**

மாறவர்மன் சுந்தரபாண்டியன், தன் நான்காம் ஆட்சியாண்டில் நிலம் அளித்திருக்கிறான். அதில், இறைவன் திருமலைப்பெருமான் என்று அழைக்கப்படுகின்றான். வேங்கட தேவ மகாராயர் சகம் 1351 விரப்ப நாயக்கருடைய மேன்மைக்காக நிலம் அளித்துள்ளார்.

மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கருடைய காலத்தில் நரசபந்தலு என்னும் தன்வந்தரி வைத்தியருக்கு இறையிலியாக நிலம் அளிக்கப்பெற்றுள்ளது.

**அறச்சாலை:-**

திருமலையப்பராயத் தொண்டைமான் மகனும், திருமலைராயத் தொண்டைமான் பெயரனுமான, இராஜா விஜயரகுநாத தொண்டைமான் சகம் 1772-ல் கி.பி.1805-இல் ஓராண்டிக் கோடி கிராமத்தைக் தேனாம்பட்டனம் இருளப்ப முதலியாரிடம் அளித்து, திருச்சிராப்பள்ளியில் அறச்சாலை நடத்த ஏற்பாடு செய்தான்.

நல்லப்ப காலட்க தோழராலும், ரங்கப்ப காலட்க தோழராலும் அளிக்கப்பட்ட தேவதானங்களை அறிவிக்கும், செப்புப்பட்டயங்கள் உள்ளன.

## கல்வெட்டுகளில் மலைக்கோயில்

**கல்வெட்டுக்கள்:-**

மலைக்கோயில் குடைவரைக்கோயில்களிலும், தூண்களிலும், சுவர்களிலும், பாறைகளிலும், திருச்சுற்றுகளிலும், பதினெட்டிற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களும், பல சிறிய தொடர்களும் உள்ளன.

**குணதரன்:-**

மலைமேல் உள்ள குகைக்கோயிலில் உள்ள அடையாளங்களால் 6-ஆம் நூற்றாண்டில் பல்லவநாட்டை ஆண்ட குணதரன் என்னும் மகேந்திரவர்ம பல்லவன் அமைத்தது என்று அறியமுடிகிறது. அந்தக் குடைவரைகோயிலில் வடமொழியிலும், தமிழிலுமாகப் பல கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டு தூண்களில் உள்ள வடமொழிக் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள்.

1. காவிரி என்பாள் இனிய நீர்ப்பெருக்கினை உடையவள், சோலைகளை மாலையெனச் சூடியவள், அவளைக் கண்டு நதிப்பிரியனான இந்ததேவன் காதலிப்பான் என்று எண்ணி மலை மகள் தான் பிறந்த குலத்தைவிட்டு, இந்த மலையில் எப்போதும் நிலைத்திருந்து “இந்நதி பல்லவனுடைய காதலி” என்று சொல்லிக்கொண்டிருக்கிறாள்.
2. குணபரன் என்ற அரசன் இந்த இலிங்கத்தினால் பெற்ற விபட்ச விருத்தியிலிருந்து (ஜைன மதத்திலிருந்து) திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலைத்திருப்பதாக.
3. சோழநாட்டின் சிகரமலையான இந்தச் சிவன்கோயில் அழியாத ஆபரணம் போன்றது. இதன் ஜோதி சங்கரனுடைய ஜோதி போன்றது.
4. சத்ய சந்தனுடைய பூத உடல் புகழ்பெற இது கல் தச்சனால் அமைக்கப்பட்டது.
5. மலை உச்சியில் அமைக்கப்பட்ட இந்த விசித்திரமான கற்கோயிலில் தாணுவை (சிவனை) அசையாமல் இருக்கும்படி பிரதிஷ்டை செய்து தான் அழியாப்பதவியை அடைந்தான்.

6. சத்துருமல்ல அரசன் அர்த்தபதியாதலின். மலையரசன் மகளை மணந்த கிரீசனுடைய பெயரின் பொருளை விளக்க இம்மலையில் ஈசனாகப் பிரதிஷ்டை செய்தான்.
7. “சோழர்களின் பெருஞ்செல்வத்தையும், அகன்ற காவிரி நதியையும், பூமியிலிருந்துகொண்டு நான் எவ்வாறு காண்பேன்” என்று வினவிய இறைவருக்கு குணபரன், வானளாவிய உன்னதமான இக்கோயிலை அமைத்தான்.
8. நிகரற்ற புருஷோத்தமனால் பார்வதிக்கும், பரமசிவனுக்கும் அமைக்கப்பட்ட இக்கோயில் (உச்சை சிரபர்வதம்) தான் தோன்றியதின் பயனை அடைந்தது. (உச்சை சிரபர்வதம்) உயர்ந்த தலையை உடையது.)

இம் மகேந்திர பல்லவனே சிவனடியாரான திருநாவுக்கரசரைப் பலவாறு துன்புறுத்திப்பின் சைவனாகி உபதேசம் பெற்றுத் தன் பெயரால் ‘குணதரவீச்சரம்’ என்னும் சிவன்கோயிலைத் திருவதிகையில் கட்டுவித்தான் என்று பெரியபுராணம் தெரிவிக்கிறது.

## தமிழ்க் கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயில் பற்றிய கல்வெட்டுக்கள் தென்னிந்திய கல்வெட்டுப்பகுதிகளில் 1904 ஆம் ஆண்டில் 770 முதல் 790-வரை உள்ள எண்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**சிற்றம்பர்:-**

1) மேல்குகைக்கோயிலில் வெளித்தூண் வரிசையில் மூன்றாவது தூணில் 10-வது நூற்றாண்டில் ஆண்ட சோழர் குலத்து இராஜராஜகேசரி வர்மன் தன் பட்டத்தின் 16-வது ஆண்டில், விக்கிரமசிங்க மூவேந்த வேளாண் என்பவன், விளத்தூர் நாட்டு ஆலங்குடியில் நிலம் வாங்கி அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பர் என்னும் திருச்சிராப்பள்ளியில் உள்ள கோயிலுக்கு நிலத்தானம் செய்த சாசனம். அது கூறும் விளக்கம்.

**கல்வெட்டு:-**

“திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கோள் காந்தளுர்சாலை கலமறுத்தருளிய வேங்கைநாடும், கங்கபாடியும், நுளம்பபாடியும், தடிகைப்பாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் திண்டிறல் வென்று, தண்டால் கொண்ட தன்னெழில் வளரூழியுள் எல்லாயாண்டும் தொழுதகை விளங்கும் யாண்டைச் செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோப்பரகேசரி ராஜராஜபன்மற்கு யாண்டு 16-வது உறையூர்க் கூற்றத்து சிற்றம்பர்த் திருச்சிராப்பள்ளியினிதி திருத்தருளிய திரிபுவனபதிக்கு மூலப் பிரதான சண்டேசுவரப் பெருமான் அருளால் பதிபாத மூலப் பட்டுடைப் பஞ்ச சாற்றிய தேவகன்மிகளோமும், சிற்றம்பல ஊரோமும் இத்தேவர் தேவன் விளத்தூர் நாட்டு, ஆலங்குடி உத்தம சோழப்பன் மராற்றுக் கீழக்கரை மணவீடும், களரும், திடலுமாய்க் கிடந்த நிலம் 21/2 இந்நிலம் இரண்டரையும், சூரலூர் கூற்றத்து சூரலூர் கிழவன் கம்பன் மணியநாத, விக்ரமசிங்க மூவேந்த வேளாண் இத்தேவர் சித்திரைத் திருநாள் ஒன்பது நாளும் பிராமணரும், சிவயோகியரும், தபஸ்யரும், உண்ண இவன் இந்நிலன் பூத்திவச்சிக் கொள்ளப் பெறுவானாக.

விற்றக்கொடுத்து நிலத்துக் கிசைந்த கீழ்பாற்கெல்லை, திருவரங்கத் தேவதானம், (கோட்டிடையும்) பஞ்சகத்து நிலத்துக்கு மேற்கும், தென்பாற்கெல்லை நக்கன் மூங்குல

முள்ளிட்டாரும், மேம்மட்டியும், நக்கன் கொற்ற விராடியுள்ளிட்ட நிலங்களுக்கு கிழக்கும், வடபாற்கெல்லை திருவரங்கத் தேவதானம் சாத்தரங்குடிக்குத் தெற்கும், இவ்விசைத்த பெருநான்கெல்லை யுளகப்பட்ட நிலம் இரண்டரையும், விற்றுக்கொடுத்த நிலத்துக்கு விலை 37 கழஞ்சா கரும்பொன் 85 கழஞ்சுக்கும், இந்நிலம் 21/2 வேலியும் விற்றுக்கொடுத்து, இப்பொன் எண்பத்தைந்து கழஞ்சும் பண்டாரத்து வைப்பித்துக்கொண்டு, இந்நிலம் சித்திரைத்திருநாள் ஒன்பது நாளும் பிராமணரும், சிவயோகிகளும் தபஸ்யரும் உண்ண இந்நிலம் இப்பரிசு கல்மேல் கொள்ளப் பெறுவாராக.

சூரலூர் கிழவன் கம்பன் மணியநாக விக்ரமசிங்க மூவேந்த வேளாணுக்கு விற்றுக் கொடுத்தோம்”

2) அதே வரிசையில் கடைசித் தூணில் 9-வது நூற்றாண்டில் ஆண்ட பாண்டியாதிபதி மாறன் சடையன் என்னும் வரகுணனையும், திருமலைப்பெருமான் அடிகளில் கோவிலையும் பற்றிய கல்வெட்டு இது அரசனுடைய பட்டத்தின் 4-வது ஆண்டில் ஏற்பட்டது.

3) குகையின் கிழக்குச் சுவரில் வாயிலுக்கு வலப்புறம் மேற்சொல்லிய வரகுண பாண்டியன் பொன் காசு தானம் செய்த சாசனம்.

4) மாதுர் பூதேஸ்வரர் கோயிலில் ஓர் பாறையில் விஜயநகர வம்சத்தைச் சேர்ந்த வெங்கட தேவமகாராயர் சகம் 1539 ஆம் ஆண்டில் வீரப்ப நாயக்கர் நற்கதியடையும் பொருட்டுச் செய்த சாசனம்,

இவற்றுள் மூன்றாவதைத் தவிர மற்றவை சிதைந்துள்ளன.

5) மேல் குடைவரைக் கோயில் சுவரில், 104 பாடல்களையுடைய, வேம்பையர்கோன் நாராயணன் என்னும் பெரும் வணிகர் இயற்றிய ‘சிராமலை யந்தாதி’ என்னும் நூல் முழுவதும் கல்வெட்டாக உள்ளது.

## அருளாளர் தாயுமானஅடிகள் வரலாறு

இத்தல இறைவன் தாயுமான தயாபர மூர்த்தியின் அருளால் தோன்றியவர்தான் அருளாளர் தாயுமான அடிகள். அவருடைய வரலாறு பின்வருமாறு.

தமிழகம் கி.பி 1529-ல் தமிழ் வேந்தர்களின் ஆட்சியை இழந்தது. சந்திரவம்ச அரசர்களில் சந்திரசேகர பாண்டியனும் சூரியகுல மன்னர்களில் வீரசேகர சோழனும் மாறுபாடு கொண்டு விஜயநகர வேந்தரான கிருஷ்ணதேவராயரிடம் நாட்டை இழந்தனர். தமிழகத்தில் நாயக்க மன்னர்களின் ஆட்சி தோன்றியது அவர்களில் விஸ்வநாத நாயக்கர் முதல் நாயக்கர் ஆவார். மதுரையை தலைநகராகக் கொண்டு நாயக்க மன்னர்கள் ஆட்சிசெலுத்தினர். அதில் 11-வது பட்டமாக அரங்ககிருஷ்ணப்ப நாயக்கர் கி.பி 1682-ல் அரியணை ஏறினார். இவரே இராணி மங்கம்மாளின் அருந்தவ புதல்வராவார். இராணி மங்கம்மாள் தனது குமாரனுக்கு தமிழ்நாட்டு தலங்களை பற்றியும், தவசீலர்களைப் பற்றியும் நன்கு போதித்திருந்தார். வேதாரண்யத்தில் உள்ள திருமறைக்காட்டில் வேதங்கள் அடைத்த கதவை தேவாரம் மொழிந்து அப்பர் திறக்கப்பாடினார். சம்மந்தர் அடைக்கப்பாடினார். இதைப்பற்றி கேள்வியுற்று இருந்த அரங்க கிருஷ்ணப்ப நாயக்கர் அத்திருக்கோயில் வழிபாட்டிற்காக பரிவாரத்தோடு சென்றார். கேடிலியப்பர் அப்போது அத்திருக்கோயிலில் கங்காணியாக பணியிலிருந்தார்.

கேடிலியப்பர் அரசரை அன்போடு வரவேற்று உபசரித்தார். கேடிலியப்பரின் மதிநுட்பமும் வினைதிட்பமும் கிருஷ்ணப்பநாயக்கரை மிகவும் கவர்ந்தது.

ஆகவே அவரை அரசாங்க கணக்கராக (சம்பிரதி) அரண்மனையிலிருக்க அழைத்தார். கேடிலியப்பர் தம்பதியினருக்கு அப்போது சிவசிதம்பரம் என்ற 3-வயது செல்வக்குமாரன் இருந்தான். கேடிலியப்பரின் அண்ணன் குழந்தை பேறின்றி இருந்ததால் சிவசிதம்பரத்தை கேடிலியப்பர் அவரிடமே தத்தாக கொடுத்துவிட்டு திருச்சிராப்பள்ளிக்கு வந்தார்.

புத்திரர் இன்றி இருந்த கேடிலியப்பர் தம்பதியினர் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலுக்கு சென்று பிள்ளை வரம் வேண்டி கடுந்தவம் புரிந்தனர். அதன்பயனாக கஜவல்லி அம்மையார் 15-5-1692-ம்ஆண்டு உலகெல்லாம் உய்ய வந்த திருக்குமாரரைப் பெற்றார். அவருக்கு மலைக்கோட்டை ஈசரின் பெயரான ‘தாயுமானவர்’ என்ற திருப்பெயரை இட்டனர். பிறவிப் பெருஞ்செல்வமான அத்திருக்குழந்தை அழகும் அறிவும் பெற்று வளர்ந்தது. தாயுமானவர் தமிழ், வடமொழி, தெலுங்கு ஆகிய மும்மொழிகளையும் ஐயம் திரிபரக் கற்றுத் தேர்ந்தார். திருமுறை நூல்களையும், மெய்கண்ட சாஸ்திரங்களையும் கற்றார். திருச்சிராப்பள்ளியில் அப்போது வடமொழி தென்மொழியில் சிறந்திருந்த சிற்றம்பல தேசிகர் என்பவரிடம் முறையாகப் பயின்றார். திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை தாயுமானசுவாமி திருக்கோயிலுக்கும் பஞ்சபூதத்தலங்களுள் நீர்த்தலமான திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலுக்கும் சென்று வழிபடுவது அவரது நித்திய கர்மங்களுள் ஒன்றாய் அமைந்திருந்தது. கி.பி 1689-ல் அரங்க கிருஷ்ணப்பர் மரணம் அடைந்தார். அப்போது அவரது மனைவி முத்தம்மாள் கருவுற்றிருந்தாள் இராணி மங்கம்மாள் கருவிலிருந்து சிசுவை இளவரசராக மதித்து அரியணை ஏறி ஆட்சிபுரிந்தாள். இவள் அரசுசெலுத்திய நாயக்க மன்னர்களின் வரிசையில் 12-வது ஆவாள். இவள் 15-ஆண்டுகள் அரசாண்டபின் இவளது பேரனும் அரங்ககிருஷ்ணப்ப நாயக்கர் மகனுமான விஜயரங்க சொக்கநாத நாயக்கர் தமது 15-வது வயதில் அரியணை ஏறி திருச்சிராப்பள்ளியை தலைநகராகக் கொண்டு 1704-முதல் ஆளத் தொடங்கினார். இந்நிலையில் சம்பிரதி கேடிலியப்ப பிள்ளை மரணம் அடைந்தார். அப்போது தாயுமானவர்க்கு அகவை 18-ஆகும். காலியாக இருந்த சம்பிரதி பதவிக்கு தாயுமானவரே தகுதியானவர் என முடிவு செய்து விஜயரங்க சொக்கநாத நாயக்கர் தாயுமானவரை சம்பிரதியாக நியமித்தார். தாயுமானவர் அரசவைக் கணக்கர் பணியில் தமது தந்தையாரையும் விஞ்சுமளவிற்கு இருந்தார். தாயுமானவர் அரசபதவி வகித்தாலும் மனம் இறைவனை நோக்கியே இருந்தது.

திருச்சிராப்பள்ளியில் அப்போது சைவதிருமடங்கள் பல இருந்தன. அவற்றில் ஒன்று மௌனத்தம்பிரான் சுவாமிகள் மடம் இது ஆதியில் சாரமாமுனிவர் மடம் என்ற திருப்பெயரால் வளர்ந்தோங்கி பின்னர் மௌனத்தம்பிரான் சுவாமிகள் செல்வாக்கால் மௌனத்தம்பிரான் மடம் என வழங்கலாயிற்று அம்மடத்தை சேர்ந்த தம்பிரான்களோடு தாயுமானசுவாமி திருக்கோயிலுக்கு அடிக்கடிச் சென்று வந்த தாயுமானவர் பழகும் வாய்ப்பு கிட்டியது.

தாயுமானவர் மலைக்கோட்டை தாயுமானசுவாமியை வழிபட்டு திரும்பும் போது மௌனகுருவை கண்டு காந்தம் போல் அவரால் ஈர்க்கப்பெற்றார். தாயுமானவர் மௌனமடத்தின் முன்பாக உள்ள குமார கடவுள் சன்னதி முன்பாக மௌன குருவை வீழ்ந்து

வணங்கியதாகவும் அப்போது அவர்தம் கையிலே சிவஞான சித்தியார் வைத்திருந்ததாகவும் அதன் எட்டாம் சூத்திரம் முப்பதாவது பாட்டின் முதல் பாதியை ஓதி தாயுமானவருக்கு மெய்நூல் தெளிவினை அறிவுறுத்தினார் என்பர். மௌனகுரு தாயுமானவரை “சும்மா இரு” என்று மட்டும் உபதேசித்துச் சென்றுவிட்டார். இந்த மௌனகுரு சிதம்பரநாத தம்பிரான் என்ற பெயரில் 1707-முதல் 1727-வரை இருபது ஆண்டுகள் மௌனமடத்தில் திருமடத் தலைவராக இருந்தார் என அறிகிறோம். இவர் திருமூலர் மரபில் வந்தவர். மௌனகுருவை தாயுமானவர் தமது பாடல்களில் “மந்த்ரகுருவே! யோக தந்திர குருவே! மூலன் மரபில் வரு மௌனகுருவே!” எனத் தமது 10-பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

தாயுமானவர் மலைக்கோட்டையில் உள்ள தட்சிணாமூர்த்தி முன்பாக நிஷ்டைப் பயிற்சியில் ஈடுபடலானார். சின்மயானந்தகுரு’ என இந்த தட்சிணாமூர்த்தி மீது தாயுமானவர் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். இக்காலத்தில் தான் திருவருள் விலாசப் பரசிவ வணக்கமும், பொருள் வணக்கமும் பரிபூரணானந்தமும் பாடினார். மௌனகுருவின் பெருமைகளை வியந்து பாடிய ‘மௌனகுரு வணக்கம்’ என்ற திருப்பதிகமும் இக்கால கட்டத்தில் பாடப்பெற்றதேயாகும்.

கி.பி 1731-ல் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் வாரிசின்றி இறந்தார். அவரது தத்து புத்திரனான விஜயகுமாரனுக்கு அப்போது 12-வயதாக இருந்தது. அவனுக்கு அரசு அன்னையாக இருந்து இராணி மீனாட்சிதேவி ஆட்சிசெய்தாள். தாயுமானவர் இராமேஸ்வரத்திற்கு யாத்திரை செல்ல விரும்பி நிதிக் கணக்குகள் ஒப்படைத்துவிட்டு அவரது சிறிய தாயாரின் குமாரரான தம்பி அருளையாவுடன் திருச்சிராப்பள்ளியை விட்டு வெளியேறினார். வழியில் விராலிமலையில் சித்தர்களைக் கண்ணுற்றதாகவும் இங்கு தான் சித்தர்கணம் என்ற தலைப்பில் பத்துப் பாடல்களில் சித்தர்களின் இயல்பைப் பாடியுள்ளார். விராலிமலையில் தங்கியிருந்த போதுதான் அடிகள் ‘கருணாகரக் கடவுள்’ பதிகத்தைப் பாடினாரென்பர்’ ‘சித்தர் கணம்’ ‘ஆனந்தமான பரம்’ பதிகங்களும் விராலிமலையில் பாடப்பெற்றவை. அங்கிருந்து இராமநாதபுரம் செல்லும் வழியில் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள திருக்கோகர்ணம் பிரகதாம்பாளை வழிபட்டு ‘பெரிநாயகி மாலையைப் பாடினார். தேவி பட்டினம், பாம்பன் தீவு, தனுஷ்கோடி சென்று இராமேஸ்வரத்தை அடைந்து இராமனாதக் கடவுளையும் பர்வதவர்த்தினி அம்பாளையும் தரிசித்தார். இராமேசுரத்தில் தான் பர்வதவர்த்தினி அம்பாள் மீது ‘மலைவளர் காதலி’ என்ற பெயரில் பாடல்களைத் தாயுமானவர் பாடினார். அங்கிருந்து திருப்பல்லாணி உத்திரகோச மங்கை சென்று வழிபட்டு மீண்டும் இராமநாதபுரம் வந்தடைந்தார்.

இராமநாதபுரத்திலிருந்து 5-கி.மீ தொலைவில் உள்ள காட்டூரணி என்ற இடத்தில் ஒரு புளியமரத்தடியில் தாயுமானவர் யோக நிஷ்டையிலிருக்க ஆரம்பித்தார். அருளையாவை திருமறைக்காட்டுக்கு அனுப்பி வைத்தார். தாயுமானவரை திருமறைக்காட்டுக்கு வரும்படி தாயார் அழைக்கவும் தாயுமானவர் திருமறைக்காடு சென்றார். தாயுமானவர்க்கு மணம் முடிக்க வேண்டுமென்றே ‘மட்டுவார் குழலி’ என மலைக்கோட்டை அம்பாளின் திருப்பெயரிட்டு வளர்த்த பெண் மணப் பருவம் எய்தி விட்டதால் மணமுடித்துக் கொள்ள வேண்டுமென தாயுமானவரது

தாயாரும், தமயனாரும் வற்புறுத்தவே மட்டுவார் குழலியை மணந்து கொண்டார். இனிதே இல்லறத்திலிருந்த போதும் தாயுமானவர் இறைவழிபாடு, நிஷ்டை முதலியவற்றில் தொடர்ந்து ஈடுபட்டார். சிலகாலம் கழித்து தாயுமானவரின் தாயார் இறந்தார். அவரது மனைவியும் 'கனகசபாபதி' என்ற ஆண்மகவை ஈன்று சிறிது காலத்திலேயே இறந்து விட்டார். தனது குழந்தையை அண்ணன் சிவ சிதம்பரத்திடம் ஒப்படைத்து விட்டு அடிகளார் மீண்டும் திருச்சிராப்பள்ளிக்கு வந்து மௌன மடத்தை அடைந்து மௌனகுருவுடன் சிலகாலம் தங்கினார். மௌன குருவிற்குப் பிறகு சிலகாலம் தாயுமானவர் மௌனமடத்துத் தலைவராய் இருந்ததாகவும், அதன் பின்னர் மீண்டும் இராமநாதபுரம், காட்டூரணிக்கு சென்றதாகவும் அறியப்படுகிறது. அங்கு உள்ள புளியமரத்தின் கீழ் அடிக்கடி நிஷ்டையில் ஆழ்ந்தார்.

இராமனாதபுரத்திற்கு அருகில் உள்ள இலஷ்மி புரத்தில் அவர் நிஷ்டையிலிருந்து 15-01-1742-ல் சமாதி அடைந்தார். அவர் நிஷ்டையில் இருப்பதை அறியாமல் தீயிட்டுக் கொளுத்தியதாகவும், நிஷ்டையிலிருந்து விழித்த தாயுமானவர் விழித்தெழுந்து தீயெறிவதைக் கண்டும் வெளிவராமல் அவ்வாறே சமாதியானார் என்றும் சிலர் கூறுவதுண்டு.

இத்தலத்தில் தாயுமானஅடிகள் இறைவனடி சேர்ந்த தை மாத விசாக நட்சத்திரத்தில், இவரது முக்திப்பெருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

விழா தினத்தில் மௌனமடத்தில் நண்பகல் 12-00 மணியளவில் மௌனகுரு மற்றும் தாயுமானவர் உற்சவ திருமேனிக்கு, அபிஷேக ஆராதனை வழிபாடுகள் நடைபெறுகின்றன. இரவு 8-00 மணியளவில் மௌனகுரு மற்றும் தாயுமானஅடிகள் உற்சவ திருமேனி திருவீதி உலா, ஓதுவார் மற்றும் நாதஸ்வர இன்னிசையுடன் நடைபெறுகின்றன. மேலும் விழா நடைபெறும் இரண்டு நாட்களிலும், ஆலய நூற்றுக்கால் மண்டபத்தில், ஆன்மீகச் சொற்பொழிவு, மங்கள திருமுறை இன்னிசையும் நடைபெறுகின்றன.

## திருக்கோயில் எழில் மண்டபங்கள்

**பல மண்டபங்கள்:-**

திருக்கோயிலின் அடிவாரத்திலிருந்து, தாயுமானவர் சன்னதி வரையுள்ள படிகளின் மேல்கூரை கருங்கற்களால் இயன்றவை.

திருக்கோயிலில், 1).வாகன மண்டபம், 2).நூற்றுக்கால் மண்டபம், 3).மீனாட்சி சுந்தரேஸ்வரர் மண்டபம் 4).சகஸ்ரலிங்கேஸ்வரர் மண்டபம், 5).சித்திர மண்டபம், 6).கொடிமரத்து மண்டபம் 7).பதினாறுகால் மண்டபம், 8).மணி மண்டபம் முதலிய பல அழகிய மண்டபங்கள் உள்ளன.

**வாகன மண்டபம்:-**

திருக்கோயிலின் நுழைவு வாயிலில் உள்ளது. இதற்கு ஆத்தான மண்டபம் என்று பெயர்.

**"அன்றியும் தென்கயிலை எனும் திருச்சிராப்பள்ளி யிடையாக சாலை**
**முன்றயங்கு மண்டபத்தில் ஆத்தான மண்டபமென் முதற்பேர் பூண்டு**
**மின்றயங்கு மரகத்தாலியற்றிய தென்றே யெவரும் விரும்பச் செய்தான்**
**பொன்றயங்கு மணிபுனைந்த தியாகராசப் பெயர் கொள்புல வரேறே"**

இம்மண்டபத்தில் கற்பகத்தரு, பூதம், கைலாசபர்வதம், ரிஷபம், யானை, நந்திகேசர், தங்கக்குதிரை, கமலம் முதலிய பல வாகனங்கள் உள்ளன. இது அலங்கார மண்டபமும் ஆகம். இங்கிருந்து உற்சவ மூர்த்திகள் புறப்படும் திருக்காட்சி காண்பார் கருத்தைக் கவர்ந்து ஈர்க்கும்.

**2) நூற்றுக்கால் மண்டபம்:-**

மலைப்பாதையில் இடப்பக்கத்தில் உள்ளது. நூறு வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களை உடையது. இம்மண்டப திருப்பணி பெரிய வீரப்ப நாயக்கர் செய்த திருப்பணி ஆகும். இதன் உள்ளிடத்தில் இம்மண்டபத்தில், சித்திரை மாதப் பெருவிழாவின்போது 5-ஆம் நாள் செட்டிப்பெண் மருத்துவ விழாவும், 6-ஆம் நாள் தாயுமானஈசர், மட்டுவார் குழலம்மைத் திருமண விழாவும், தை விசாகத்தில் தாயுமானஅடிகள் வழிபாட்டு விழாவும் நடைபெறுகின்றன. பங்குனி மாதத்தில் வள்ளித்திருமண விழாவும் சில ஆண்டுகளாக மார்கழித் திருவாதிரை நடராசப் பெருமான் தரிசன விழா நடந்து வருகிறது.

இம்மண்டபத்தில் சைவ சமய மாநாடுகள், சைவ சமயப்பயிற்சி வகுப்புகள், கிழமைச் சொற்பொழிவுகள், பல அறிஞர்களின் தொடர் விரிவுரைகள் நடந்து வருகின்றன.

**மீனாட்சி சுந்தரேஸ்வரர் மண்டபம்:-**

மலைப்பாதையின் நூற்றுக்கால் மண்டபத்திற்கு எதிரே வலப்பக்கத்தில், மீனாட்சி சுந்தரேஸ்வரர் தனித் தனி சன்னதியில் எழுந்தருளி உள்ளனர். இம்மண்டபத்தில் உள்ள ஒவ்வொரு கற்தூண்களிலும், மன்மதன், ரதி, அகத்தியர், வீரபத்திரர், காளி, பல்லவ மன்னர் முதலிய கற்சிற்பங்களும், மீனாட்சி சுந்தரேஸ்வரர் வர்ண கல்யாணகோலச் சுதை சிற்பமும் நின்றகோலத்தில் உள்ளன. தற்பொழுது இம்மண்டபத்தில் திருக்கோயில் நூலகம் உள்ளது.

**கொடிமரத்து மண்டபம்:-**

இம்மண்டபத்தின் சிறப்பு கொடிமரத்து மண்டப தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**சித்திர மண்டபம்:-**

இம்மண்டபத்தின் சிறப்பு சித்திர மண்டப தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன

**பதினாறுகால் மண்டபம்:-**

உச்சிமலைக்குச் செல்லும் பாதையில் வலப்புறத்தில் பதினாறுகால் மண்டபம் தெற்குநோக்கி உள்ளது. இது தளவாய் முதலியார் என்பவரால் 1630 ஆம் ஆண்டு அளவில் கட்டப்பெற்றது.

இதில் வசந்தவிழா நடைபெறும். கோடைவிழா உற்சவத்தில் அருள்மிகு தாயுமானவர் உடனுறை அருள்மிகு மட்டுவார்குழலம்மை இனிய தென்றல் காற்று வீச ஊஞ்சலில் அமர்ந்து விழா நடைபெறும்.

**மணி மண்டபம்:-**

மலைப்பாதையில் பதினாறுகால் மண்டபத்தை அடுத்து இது உள்ளது. உறையூரில் வாழ்ந்த வணிகர் உலகநாதச் செட்டியார் அவர்கள் முயற்சியாலும் நகர மக்களின் உதவியாலும் 1918-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது ஆகும். இதில் உள்ள மணி, முழுவதும்

பித்தளை வெண்கலத்தால் ஆனது 21.ஃ.2 டன் எடையுடையது. 4 அடி 8 அங்குல நீளமும், 4 அடி 6 அங்குல குறுக்களவும் உடையது. இது அந்நாளில் நாகப்பட்டினம் இரயில்வே தொழிற்சாலையில் வார்க்கப்பட்டு, இங்கு எடுத்து வரப்பெற்று, உயர்ந்த இடத்தில் நிறுவப்பெற்றது.

நாள்தோறும் காலை 6 மணி, காலை 10, மதியம் 12 மணி, மாலை 6 மணி, இரவு 10 மணி நேரங்களில் இம்மணி பல மைல் தூரம்வரை கேட்க ஒலிக்கப்படும்.

**சிவ சிவ மண்டபம்:-**

மலைப்பாதையில் நடுவிடத்தில் இடப்புறத்து உள்ளது. இங்கு நாள்தோறும் காலை, மாலை நேரங்களில் திருமுறை ஓதுதல், ஒலிபெருக்கி வசதியுடன் நடந்து வருகின்றது.

**வழிபட்டுப் பேறு பெற்றோர்**

**(தல அடியார்கள்)**

| | | |
|---|---|---|
| 1. | பிரமன் | படைத்தல் தொழில்புரியும் கடவுள் |
| 2. | இந்திரன் | தேவர்களின் அமராவதித்தலைவன். |
| 3. | உமாதேவி | மலையரசன் மகள், சிவசக்தி |
| 4. | அகத்தியர் | கயிலைமலையிலிருந்துவந்து பொதிகைமலையில் வாழ்ந்தவர். |
| 5. | ஜடாயு | புறவைகளின் அரசன் |
| 6. | சப்தரிஷிகள் | தவம் முயன்ற ஏழு முனிவர்கள் |
| 7. | திரிசிரன் | திருச்சிராப்பள்ளிப் பகுதியை ஆண்ட அசுரன் |
| 8. | இராமபிரான் | குணங்களால் உயர்ந்த செம்மல், |
| 9. | அர்ச்சுணன் | பாண்டவர்களில் ஒருவன், வில்லாற்றல் உடையவன். |
| 10. | அனுமன் | திருக்கோயில் அனும முத்திரையிடல். |
| 11. | விபீடணன் | இலங்கையரசன்இராவணன் இளையதம்பி. |
| 12. | ஐயனார் | காடுறை காவல் தெய்வம். |
| 13. | நாகக்கன்னிகைகள் | தவம் முயன்ற பெண்கள் |
| 14. | சாரமாமுனிவர் | திருமூலர் மரபில் வந்த பெருமுனிவர். |
| 15. | வண்டு | அ.ஃறிணை உயர் வழிபாடு செய்தல். |
| 16. | சோழன் | சூரவாதித்த சோழன் வழிபடல். |
| 17. | இரத்தினாவதி | இறைவன் தாயாகவந்து உதவும் பேறு பெற்றவள். |
| 18. | ஸ்ரீமௌனகுரு | மூலன் மரபில் வந்த மௌன உபதேச குருநாதர். |
| 19. | ஸ்ரீ தாயுமானஅடிகள் | வேதாந்த சித்தாந்த சமரசம் கண்டவர். |
| 20 | அத்திரி | பெருமுனிவர் |
| 21. | துமகேது | ஒருவிண்மீன் |

22. சேக்கிழார் பெரியபுராணம் இயற்றியவர்.

## தினசரி பூஜை மற்றும் சிறப்பு பூஜை:-

**நடைத்திறப்பு:-**

| | |
|---|---|
| உச்சிவிநாயகர் சன்னதி | காலை 6-00மணி முதல் இரவு 8-00 வரை |
| சுவாமி அம்மன் சன்னதி | காலை 6-00மணி முதல் பகல் 12-30 மணி வரை<br>மாலை 4-00மணி முதல் இரவு 8-30 மணி வரை |
| மாணிக்கவிநாயகர் சன்னதி | காலை 5-30மணி முதல் பகல் 12-30 மணி வரை<br>மாலை 4-00மணி முதல் இரவு 9-00 மணி வரை<br>(பிரதி வெள்ளி இரவு 10-மணி வரை) |

**நாள் வழிபாடு (ஆறுகால வழிபாடுகள்)**

| | |
|---|---|
| 1. அதிகாலை வழிபாடு (உஷக்காலம்) | 6-00மணி முதல் காலை 6-30மணி வரை |
| 2. காலை வழிபாடு (காலசந்தி) | 8-30மணி முதல் காலை 10-30மணி வரை |
| 3. நண்பகல் வழிபாடு (உச்சிகாலம்) | 11-00மணி முதல் பகல் 12-00மணி வரை |
| 4. மாலை வழிபாடு (சாயரட்சை) | 5-00மணி முதல் மலை 6-00மணி வரை |
| 5. மாலைக் காலவழிபாடு (இரண்டாம் காலம்) | 6-30மணி முதல் இரவு 7-00மணி வரை |
| 6. இடையாம வழிபாடு (அர்த்தசாமம்) | 7-30மணி முதல் இரவு 8-30மணி வரை |

**சிறப்பு பூஜை:-**

விஷேச நாட்கள் நீங்கலாக ஏனைய மாதந்தோறும் மாதப்பிறப்பு, அமாவாசை தோறும் சந்திரசேகரரும், வாரந்தோறும் வெள்ளிக்கிழமை திரிபுரசுந்தரி அம்பாளும், பிரதோஷந்தோறும் பிரதோஷ நாயகரும், கார்த்திகைதோறும் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியருக்கு புறப்பாடு நடைபெறும். வெள்ளிக்கிழமை தோறும் மகாலெஷ்மி சன்னதியில் மகாலெஷ்மி ஹோமம் நடைபெறும். பௌர்ணமி தோறும் கிரிவலம் நடைபெறும்

## தல திருவிழாக்கள்

திருக்கோயில் திருவிழாக்கள் இறைவன் உலக உயரிர்கள் நலங்கருதி, இயற்றும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களுடன் தொடர்புடையவை.

அருளல் என்ற நிலையில் தாயுமானசுவாமி தெப்பத்தின்மீது பவனி வந்து, ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் நிகழ்ச்சி காண்போர்க்கு கண்கொள்ளாக்காட்சி ஆகும்.

**விழா மற்றும் நடைபெறும் நாட்கள்:-**

| | |
|---|---|
| ஆடி மாதம் ஆடிப்பூரம் | (11 நாட்கள்) |
| ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தி விழா- | (14-நாட்கள்) |
| புரட்டாசி மாதம் நவராத்திரி விழா | (10-நாட்கள்) |
| கந்தசஷ்டி விழா | (7-நாட்கள்) |
| பங்குனி மாதம் தெப்பத்திருவிழா | (10-நாட்கள்) |
| சித்திரை மாதம் தேர்த்திருவிழா | (14-நாட்கள்) |
| கோடை வசந்த உற்சவவிழா | (10-நாட்கள்) |

**கருணை இல்லம்:-**

இல்லை

**பள்ளி,கல்லூரி:-**

இல்லை

**நாதஸ்வரம், ஓதுவார் பள்ளி:-**

இல்லை

**கோசாலை:-**

இல்லை

**திருக்கோயில் நிலங்கள் :**

**நஞ்சை ஏ. 36.05 செண்ட்**

**புஞ்சை ஏ.435.30 செண்ட்**

**திருக்கோயில் மனைகள்**

**வணிகம் 3**

**குடியிருப்பு 51**

**திருக்கோயில் கட்டிடங்கள் 78**

**யானை:-**

இத்திருக்கோயிலில் யானை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. திருவிழா நடைபெறும் சமயத்தில் யானை சுவாமி புறப்பாட்டிற்கு முன் செல்கிறது. வருடந்தோறும் யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம் சென்று வருகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | லெட்சுமி – பெண் யானை |
| வயது | - | 22 |
| எடை | - | 4325 கிலோ |

கழுத்து சுற்றளவு 248 செ.மீ

உடல் சுற்றளவு 418 செ.மீ

உணவு - நாள் ஒன்றுக்கு 150 கிலோ நாணல்புல், பசுந்தீவணங்கள் மற்றும் சாதம் வழங்கப்படுகிறது.

**கட்டணச்சீட்டுக்கள் விவரம்:-**

| | | |
|---|---|---|
| 1. உச்சி மலை சீட்டு | - ரூ. | 3.00 |
| 2. கேமரா சீட்டு | - ரூ. | 20.00 |
| 3. வீடியோ கேமரா சீட்டு | - ரூ. | 100.00 |
| 4. அர்ச்சனை சீட்டு | - ரூ. | 5.00 |
| 5. அபிஷேக கட்டணச் சீட்டு | - ரூ. | 350.00 |
| 6. அ.மி உச்சி விநாயகர் சந்தனகாப்பு | - ரூ. | 750.00 |
| 7. அ.மி மாணிக்க விநாயகர் சந்தனகாப்பு | - ரூ. | 750.00 |
| 8. அபிஷேக காணிக்கை சீட்டு | - ரூ. | 5.00 |
| 9. பாதுகாப்பு பெட்டக சீட்டு | - ரூ. | 5.00 |
| 10. வாழை பழத்தார் கட்ட | - ரூ. | 20.00 |
| 11. மாலை அணிவிக்க கட்டண சீட்டு | - ரூ. | 10.00 |
| 12. அ.மி மாணிக்க விநாயகர் சிறப்பு விரைவு தரிசன கட்டணம் | - ரூ. | 25.00 |
| 13. அ.மி மாணிக்க விநாயகர் தங்க கவசம் | - ரூ. | 100.00 |
| 14. இருமுடி கட்ட கட்டணச் சீட்டு | - ரூ. | 100.00 |
| 15. நந்திகோயில் ஆஞ்சநேயர் வடைமாலை | - ரூ. | 10.00 |
| 16. எரிதுரும்பு சீட்டு | - ரூ. | 10.00 |

**ஆடிப்பூரம்:-**

இவ்விழாவின்போது தினசரி காலை 8-00 மணிக்கும், இரவு 7-00 மணிக்கும், திரிபுரசுந்தரி அம்மன், விநாயகர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தில் வீதிஉலா வரும். ஆடி அமாவாசை அன்று பஞ்சமூர்த்தி வீதி உலா நடைபெறும்.

**புரட்டாசி மாத நவராத்திரி விழா:-**

தினசரி காலை 11-00 மணிக்கு அருள்மிகு மட்டுவார்குழலம்மைக்கும், உற்சவர் அம்மனுக்கும், சிறப்பு அபிஷேகமும், மாலை 6-00 மணிக்கு சிறப்பு அலங்காரமும் நடைபெறும். இரவு 8-00 மணிக்கு அம்மன் கொலுமண்டபம் எழுந்தருளும்.

**பங்குனி மாத தெப்பத்திருவிழா:-**

இவ்விழா இறைவன் பிரளய கால பெருநீரில் அருளாகிய தெப்பத்தில் இருந்து, தன்னை அடைந்து வழிபடும் உயிர்கட்கு திருவருட்பேறு வழங்கி அருள்புரிதலை குறிப்பதாகும். "தீயினும் வெய்யன் புனலினும் தன்னியன்" என்ற திருமந்திரத்திற்கு ஏற்ப தாயுமானவர் இத்திருத்தலத்தில் அருள்செய்யும் பொருட்டாக குளத்தில் அருள்வடிவமாக நீரில் இருந்து அனுகிரகம் செய்யும் காட்சியே தெப்பத்திருவிழா வைபவம் ஆகும். இதனை ஒட்டியே பங்குனி உத்திரத்திற்கு முதல்நாள் தெப்ப நிகழ்ச்சி நடைபெறுவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். தெப்ப உற்சவம் கரிகால் பெருவளத்தானால் வெட்டப்பட்ட "பிரம்ம தீர்த்தம்" (சோமரோகிணி) என்ற தெப்பக்குளத்தில நடைபெறும்.

மிகுந்த பொருட்செலவில், மட்டுவார் குழலம்மை உடனுறை தாயுமானஈசர் (சோமாஸ் கந்தர்) விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் வண்ண வண்ண

நறுமணம் மிக்க மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டும், தெப்பம் மற்றும் நீராழி மண்டபம் வண்ண வண்ண நிறங்களில் மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டும், மங்கள வாத்திய முழக்கத்துடன் தமிழ்திருமுறை ஓதியும், சிவாகம முறைப்படி வீதி வலம் வந்து திருத்தெப்பத்தில் எழுந்தருளி, இறைவன் பிரம்மன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவனாக இருந்து ஐந்தொழில் இயற்றுதலை உணர்த்தும் வகையில் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதமாக இருந்து அருள்புரிதலை உணர்த்தும் நிலையில் நாத தூப தீப வழிபாடுகளை ஏற்று ஐந்து சுற்றுகள் தெப்பக்குளத்தில் வலம்வருவது காண்பதற்கு கண்கொள்ளாக் காட்சி ஆகும். மைய மண்டபத்தில் சிவபெருமான் உலகை அசையாது இயங்குகின்ற நிலையும், அவனருள் கொண்டு உமையொருபாகனாக தெப்பக்கரையோரத்தில் வந்து அனைவருக்கும் அருளும் நிகழ்ச்சி கண்டு மகிழ தக்கதாகும்.

**சித்திரைத் தேர்த் திருவிழா:-**

இவ்விழா மேன்மைக்கொள் சைவ நீதியை உலகுக்கு உணர்த்தும் விழாவாக திகழ்கிறது. ஒருமைப்பாட்டு உணர்வுடன் தேர்வடம் பிடிக்கும் அன்பர்களின் குலம் காக்கும் தாயானஈசரின் இன்னருள் பெற்று உய்வடைய, இச்சித்திரைத் திருவிழாவின் ஐந்தாம்நாள் விழாவான “செட்டிப்பெண்மருத்துவம்” வைபவத்தில், கலந்து கொண்டு விழாவின்போது வழங்கப்பெறும் சுகப்பிரசவமருந்தினைப் பெற்று குழந்தைபாக்கியம், மற்றும் சுகப்பிரசவத்தைப்பெறவும், ஆறாம்நாள் விழாவின்போது வாகன மண்டபத்தின் முன் நடைபெறும், இறைவன் மாலை மாற்றும் விழாவில் திருமணமாகாத கன்னிப்பெண்கள் கலந்துகொண்டு மட்டுவார்குழலம்மை உடனுறை தாயுமானஈசருக்கு மாலை வாங்கி சாத்தி மீண்டும் வாங்கி தான் அணிந்து கொள்வதன் மூலம் ராகு,கேது இவற்றால் ஏற்படும் திருமணத்தடைகள் நீங்கப்பெற்றும், கன்னிப்பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறவும், நூற்றுக்கால் மண்டபத்தில் நடைபெறும் திருக்கல்யாண வைபவத்தில் கலந்துகொண்டு தீர்க்கசுமங்கலி வரத்தைப் பெற்றும் மற்றும் வேண்டும் அன்பர்கள் வேண்டிய வரங்களை பெற்றும் இன்புறுகின்றனர். குழந்தை பிறந்தவுடன் மாத்ருபூதேஸ்வரர் என்று அழைக்கப்படும், தாயுமானஈசர் சன்னதியில் வாழைப்பழத்தார் கட்டியும், பால் அபிஷேகம் செய்தும் வருகின்றனர். இந்நிகழ்ச்சி இந்தியாவிலேயே வேறு எந்தஒரு சிவாலயத்திலும் அல்லது எந்த பிரார்த்தனைத் தலத்திலும் காணமுடியாத ஒரு அரிய நிகழ்ச்சியாகும். அதனடிப்படையில் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில், **“குழந்தைப்பேறு மற்றும் சுகப்பிரசவ பிரார்த்தனைத்தலமாக”** தென்னகத்தில் புகழ்பெற்று விளங்குகிறது.

விழா நாட்களில் காலை உற்சவர் விநாயகர் புறப்பாடு செய்து, திருக்கோயில் நந்தவனத்தில் உள்ள தல விருட்சமான வில்வமரத்தடியில் மண் எடுத்து முலைப்பாரி இட்டு சுவாமி, அம்மன், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை, நடராஜர் ஆகிய உற்சவ மூர்த்திகளுக்கு ரக்ஷாபந்தனம் (காப்புகட்டுதல்) செய்து, பஞ்சமூர்த்திகளுடன் கம்பத்தடி மண்டபம் எழுந்தருளச்செய்து, கம்பத்தடிக்கு அபிஷேகம் செய்யப்பட்டு பின்னர் ரிஷபகொடி படத்தினை பல்லக்கில் வைத்து வீதி சுற்றிவந்து பிரதான கொடிமரத்தில் கொடியேற்றத்துடன் தேர்த்திருவிழா துவங்கப்படுகிறது.

மாலை 7-00-மணிக்கு சோமாஸ்கந்தர்-பிரியாவிடை அம்மன், மட்டுவார்குழலிஅம்மன், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் திருவீதி உலாவருவர்.

2-ஆம்நாள் காலை திருவிழாவில் சோமாஸ்கந்தர்-பிரியாவிடை அம்மன், மட்டுவார்குழலிஅம்மன், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் உள்வீதி உலாவருவர்.

மாலை 7-00-மணிக்கு கற்பகத்தரு வாகனத்தில் சோமாஸ்கந்தர்-பிரியாவிடை மற்றும் காமதேனு வாகனத்தில் மட்டுவார்குழலிஅம்மன், கேடயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகியோர் உள்வீதி, வெளிவீதி உலாவருவர்.

3-ஆம்நாள் காலைதிருவிழாவில் சோமாஸ்கந்தர்-பிரியாவிடை அம்மன், மட்டுவார்குழலிஅம்மன், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் உள்வீதி உலாவருவர்.

மாலை 7-00-மணிக்கு பூதவாகனத்தில் சந்திரசேகரர்சுவாமியும், கமல வாகனத்தில் ஆனந்தவள்ளியும், கேடயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் உள்வீதி, வெளிவீதி உலாவருவர்.

4-ஆம்நாள் காலை திருவிழாவில் சோமாஸ்கந்தர்-பிரியாவிடை அம்மன், மட்டுவார்குழலிஅம்மன், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் உள்வீதி உலாவருவர்.

மாலை 7-00-மணிக்கு கைலாச பர்வதம் வாகனத்தில் சோமாஸ்கந்தர் பிரியாவிடையும், அன்ன வாகனத்தில் மட்டுவார்குழலி அம்மன், மற்றும் கேடயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் உள்வீதி, வெளிவீதி உலாவருவர்.

5-ஆம் நாள் காலை திருவிழாவில், 10-45மணிக்கு மேல் சிவபக்தியில் சிறந்த செட்டிப்பெண் இரத்தினாவதிக்கு சிவபெருமான், தாயுமானவராய் வந்து சுகப்பிரசவ மருத்துவம் செய்த ஐதீகம் நூற்றுக்கால் மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெறும்.

மாலை 7-00-மணிக்கு அறுபத்து மூவர் ஆயிரக்கணக்கான பக்தகோடிகள் புடைசூழ, இரத்தினாவதி அம்மையாருடன் காட்சி கொடுத்தல், ரிஷப வாகனத்தில் சோமாஸ்கந்தர்-பிரியாவிடையும், மற்றும் ரிஷபவாகனத்தில் மட்டுவார்குழலிஅம்மன், கேடயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் உள்வீதி, வெளிவீதி உலாவருவர்.

6-ஆம்நாள் காலை திருவிழாவில், 9-00மணிக்கு மேல் 10-00 மணிக்குள் மிதுன லக்னத்தில், சுவாமி, அம்மன் திருக்கல்யாண வைபவம் நூற்றுக்கால் மண்டபத்தில் மிகவும் விமரிசையாக நடைபெறும்.

மாலை 7-00-மணிக்கு யானை வாகனத்தில் சோமாஸ்கந்தர்-பிரியாவிடையும், பல்லக்கில் மட்டுவார்குழலிஅம்மன், கேடயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் உள்வீதி, வெளிவீதி உலாவருவர்.

7-ஆம்நாள் காலை திருவிழாவில் சோமாஸ்கந்தர்-பிரியாவிடை அம்மன், மட்டுவார்குழலிஅம்மன், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் உள்வீதி உலாவருவர்.

மாலை 7-00-மணிக்கு நந்திகேசர் வாகனத்தில் சந்திரசேகரசுவாமியும், யாளி வாகனத்தில் ஆனந்தவள்ளி அம்மனும், கேடயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் உள்வீதி, வெளிவீதி உலாவருவர்.

8-ஆம்நாள் காலை திருவிழாவில் சோமாஸ்கந்தர்-பிரியாவிடை அம்மன், மட்டுவார்குழலிஅம்மன், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் உள்வீதி உலாவருவர்.

மாலை 7-00-மணிக்கு தங்கதுதிரை வாகனத்தில் சந்திரசேகரரும், பல்லக்கில் ஆனந்தவள்ளி அம்மனும், கேடயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் வேடுபறி ஐதீகத்துடன் திருவீதி உலாவருவர்.

9-ஆம்நாள் திருவிழாவில் அதிகாலை 5-45-மணிக்குமேல், 6-45 மணிக்குள் மேஷ லக்னத்தில், சுவாமி அம்பாள் புறப்பாடு ஆகிய தேர்நிலைக்கு, விநாயகர், வள்ளிதெய்வானை, சுப்பிரமணியர் ஒரு தேரிலும், சுவாமிஅம்பாள், சோமாஸ்கந்தர்-பிரியாவிடை சுவாமி தேரிலும், மட்டுவார்குழலிஅம்மன், அம்மன்தேரிலும் எழுந்தருளி சகலவாத்தியங்களுடன் திருவீதி உலாவருவர். அன்று மாலை 6-00 மணிக்கு தேரிலிருந்து இறங்கி திருக்கோயில் வந்தடைவர்.

10-ஆம்நாள் காலைதிருவிழாவில் நடராஜர் திருவீதி உலா வருதல். பிரம்மதீர்த்தம் ஆகிய தெப்பகுளத்தில், சோமாஸ்கந்தர்-பிரியாவிடை அம்மன், மட்டுவார்குழலிஅம்மன், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கு அபிஷேகம் மற்றும் தீர்த்தவாரி நடைபெறும். இரவு தெப்பக்குளம் கூடப்பள்ளி மண்டபத்தில் எழுந்தருளி தீர்த்தவாரி உற்சவம் நடத்தப்படுகிறது. மாலையில் பஞ்சமூர்த்திகளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டு, இரவு ரிஷபாரூடர் காட்சி அன்பர்களுக்கு கண்கொள்ளாக்காட்சியாக தாயானஈசரால் அருளப்படுகிறது. பின்னர் கொடியிறக்கம் திசைக்கட்டு பூசை செய்யப்படுகிறது. அன்று இரவு ஆச்சாரியார் உற்சவம் (குருக்கள்) நடைபெறுகிறது.

11-ஆம்நாள் திருவிழாவில் காலையில் திருக்குறிப்புத்தொண்டர் ஐதீகம் சுவாமி சன்னதியில் உள்புறப்பாடு மட்டும் நடைபெறும்.

மாலை7-00-மணிக்கு தங்ககுதிரை வாகனத்தில் சந்திரசேகரரும், பல்லக்கில் ஆனந்தவள்ளி அம்மனும், கேடயத்தில் விநாயகர், சுப்பிரமணியர் வள்ளிதெய்வானை, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் திருவீதி உலாவருவர்.

12-ஆம்நாள் திருவிழாவில் மாலை 5-00-மணிக்கு தாயுமான அடிகளாருக்கும், தட்சிணாமூர்த்தி உற்சவ மூர்த்திக்கும் சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெறும். இரவு திருமுறை பாராயணத்துடன் உள்புறப்பாடு யதாஸ்தானம் சேர்த்தல் வைபவம் நடைபெறும்.

13-ஆம்நாள் திருவிழாவில் இரவு 7-00-மணிக்கு பிச்சாடனார் திருவீதி உலா நடைபெறும்.

14-ஆம்நாள் திருவிழாவில் இரவு 7-00-மணிக்கு சண்டிகேஸ்வரர் கேடயத்தில் திருவீதி உலாவருவார். 15-ம் நாள் பிராயசித்த அபிஷேகம் செய்து தேர்த்திருவிழா மகாவைபவம் பூர்த்தி அடைகிறது.

**விநாயகர் சதுர்த்தி விழா:-**

ஆண்டுதோறும் ஆவணி மாதம் அமாவாசை கழித்து நான்காம் நாள் அன்று சதுர்த்தி திதி வருகிறது. இதை விநாயகருக்கு உகந்த நாளாக விநாயகசதுர்த்தியாக கொண்டாடுகிறோம்.

முற்காலத்தில் கஜமுகாசுரன் என்ற பெயரினை கொண்ட அசுரன் ஒருவன் கடுந்தவமியற்றி சிவப்பெருமானிடம் தன்னை மனிதர். விலங்கு, தேவர் ஆண், பெண், ஆயதங்களால் கொல்லமுடியாத வரத்தை பெற்றான். வரத்தைப் பெற்றதும் அமரர் அனைவரையும் துன்புறுத்தலானான். சிவபெருமான் ஆவணி மாத அமாவாசை கழிந்த நான்காம் நாள் சதுர்த்தியன்று யானை முகத்தோடும் மனித உடலோடும் விநாயகரை தோற்றுவித்தார். விநாயகர் தன்கொம்புகளில் ஒன்றை ஒடித்து மூஷிக வடிவந்தாங்கி தன்னை எதிர்த்து போரிட்ட கஜமுகாசுரனை வென்று மூஷிகத்தின் மீதேறி அமர்ந்து அதனைத் தன் வாகனமாகவும் ஆக்கி அருள்புரிந்தார்.

இவ்வாறாக விநாயகபெருமான் கஜமுகாசுரனைக் கொல்லும் பொருட்டு திருஅவதாரம் செய்த தினமான ஆவணிமாத சதுர்த்தி தினமே விநாயகசதுர்த்தி நாளாகும். விநாயக சதுர்த்தியன்று அருள்மிகு உச்சிபிள்ளையார்க்கும். அருள்மிகு மாணிக்கவிநாயகருக்கும் 18-படி அரிசியால் ஆன இரண்டு பெரிய கொழுக்கட்டைகள் (மொத்த எடை 108-கிலோ) நைவேத்யம் செய்து (காலை 6.00-மணிக்கு மேல் 7.30-மணிக்குள்) பக்தர்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

விழா நாட்களில் மூலவர் மற்றும் உற்சவருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்படும். மேலும் மூலவருக்கு மாலை நேரத்தில் ஒவ்வொரு நாளும் பாலகணபதி, நாகாபரண கணபதி, லஷ்மி

கணபதி, தர்பார் கணபதி, பஞ்சமுக கணபதி, மூஷிக கணபதி, ராஜ அலங்காரம், மயூர கணபதி, குமார கணபதி, வல்லப கணபதி, ரிஷபாரூடர், சித்தி புத்தி, நடன கணபதி, ஆகிய வடிவத்தில் பதிமூன்று நாட்களும் சந்தன அலங்காரத்தில் காட்சி தருவார்.

மேலும் தினசரி மாலை 6-00 மணியளவில் மாணிக்கவிநாயகர் உற்சவர் மண்டபத்தில் இன்னிசைக் கச்சேரிகள் மற்றும் பக்திச்சொற்பொழிவுகள் நடக்கும். பதிமூன்றாம் நாளன்று உற்சவருக்கு 28-வகையான மகா வாகனம் நடைபெறும்.

**வைகாசி வசந்த விழா:-**

சந்திரசேகரர் ஆனந்தவள்ளி, சண்டிகேஸ்வரர், விநாயகர், முருகர், சித்திரமண்டபத்தில், 1-ம் நாள்முதல் 9-ம் நாள்முதல் எழுந்தருளுவர். முதலில் தேவஸ்தான தீபாராதனை நடைபெறும். பின் மௌனமட தீபாராதனையுடன் (ஏகாசனம்) சன்னதி எழுந்தருளுவர். 10-ம் நாளன்று சந்திரசேகரர் ஆனந்தவள்ளி, வீதி உலா எழுந்தருளுவர்.

**வைகாசி வசந்த விழா:-**

சுப்பிரமணியர் வள்ளி தேவசேனா முத்துக்குமாரசுவாமி சன்னதியில் 1-ம் நாள் முதல் 3-ம் நாள்வரை அபிஷேகம் நடைபெறும். நான்காம் நாள் கஜமுகம், (யானைமுகம்) 5-ம் நாள் சிங்கமுகம், 6-ம் நாள் சூரபத்மன் வதம் செய்தல் நடைபெறும். ஏழாம் நாள் தெய்வானை திருக்கல்யாணம் நூற்றுக்கால் மண்டபத்தில் நடைபெறும். 4-ம் நாள்முதல் 7-ம் நாள் வரை உள்வீதி, வெளிவீதி புறப்பாடு நடைபெறும்.

**கார்த்திகை சோமவார சங்காபிஷேக விழா:-**

இத்திருக்கோயில் தாயுமானசுவாமி சன்னதியில் உள்ள சித்திர மண்டபத்திலும், மாணிக்கவிநாயகர் உற்சவர் மண்டபத்திலும் சங்காபிஷேகம் நடைபெறும். (முதல் மூன்றுவார 108-சங்கு பூஜை நடைபெறும்) கடைசி வாரம் 1008 சங்கு பூஜை நடைபெறும்.

**திருக்கார்த்திகை தீப தரிசனம்:-**

கார்த்திகை தீபத் திருவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சியாக கார்த்திகை தீபத் திருவிழாவிற்கு முந்தைய தினத்தில் **‘இள விளக்கு’** எனும் பெரிய மண் அகல் மாலை 6-மணிக்கு தட்சிணாமூர்த்திக்கு முன்பாக ஏற்றிவைக்கப்படும்.

கார்த்திகை தீபத்தன்று சரியாக மாலை 6-மணிக்கு உச்சிப்பிள்ளையார் சன்னதிக்கு முன்பாக உள்ள செப்புக் கொப்பரையில் 1000-லிட்டர் இலுப்பை எண்ணை, நல்லெண்ணை, நெய் ஊற்றி 6000-மீட்டர் அளவுள்ள துணி மற்றும் 800-கிலோ பருத்தித் துணிகளையும் கொண்டு பெரிய தீபம் ஏற்றப்படும். இதன் ஜோதி மூன்று தினங்களுக்கு தொடர்ந்து எரியக் கூடியது. தீபவிழாவை முன்னிட்டு பஞ்சமூர்த்தி புறப்பாடு செய்யப்பட்டு மலைக்கோட்டை உள்வீதிவழியாக சின்னகடைவீதி, என்.எஸ்.பி.ரோடு, நந்திகோயில் தெரு, கீழ் ஆண்டார்கோயில் வழியாக வலம் வந்து திருக்கோயில் வந்தடையும்.

இத்தீப தரிசனத்தை திருச்சி நகரின் அனைத்து பகுதிகளிலிருந்தும் கண்டு களிக்கலாம். தீப தரிசனத்தை பார்த்தவர்கள் **"திருவண்ணாமலை"** தீப தரிசனத்தை கண்ட பலன் பெறுவார்கள்.

**அன்னாபிஷேகம் :-**

ஒவ்வொரு வருடமும் ஐப்பசியில் அன்னாபிஷேகம் சிறப்பாக நடைபெறும். அன்னாபிஷேகத்தில் பயன்படுத்தப்படும் **"அன்னத்தின் ஒவ்வொரு பருக்கையும் சிவலிங்கத்தின் உருபெறும் அன்னாபிஷேகத்தில் பங்குபெற்று அன்று அன்னாபிஷேக லிங்கத்தை தரிசிக்கும் பக்தர்கள் சகல வளங்களும் பெற்று இன்புறுவதோடு பிறவிப் பிணியிலிருந்து விடுப்பட்டு சிவலோகம் சேர்வர். சிவன் அபிஷேகப் பிரியன், அன்னத்தால் அவனுக்கு அபிஷேகம் செய்வது உச்சநிலை சிறப்புடையதாகும்.**

அன்னாபிஷேகத்தின்போது சிவலிங்கத்திருமேனி முழுவதும் அடங்கும்படியாக அன்னத்தை ஒரு பட்டுப்போர்வையில் சாத்துவதைப்போல் சாத்துவர்.

அப்பொழுது **கரிய சிவலிங்க திருமேனி அன்னப் போர்வையால் தூய வெள்ளை திருமேனியாக திருக்காட்சி அளிப்பது ஒரு புதிய, அரிய, சிறப்பான வேறுபட்ட தரிசனமாகும்.** சுவாமிக்கு அன்னாபிஷேகம் நடந்தவுடன் சுவாமி மீது சாத்தப்பட்ட அன்னம், பக்தர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு சிரசில்வைக்கப்பட்ட அன்னம் காவிரியில் இடப்படும். இத்திருத்தலத்தில் இறைவனை அன்னாபிஷேகத்தில் பார்க்கும்போது இம்மை, மறுமை பேறுகள் கிடைக்கும்.

சிவராத்திரி அன்று இத்திருத்தலத்தில் இரவு 10-00 மணி முதல் மறுநாள் காலை 6-00 வரை அபிஷேகம் நடைபெறும். சிவராத்திரி அன்று இத்திருத்தலத்தில் சிவனை தரிசித்தவர்களின் துன்பம் சூரியனைக் கண்டு பனி விலகுவதைப்போன்றும், நெருப்பில் விழுந்த பஞ்சு உருத்தெரியாமல் ஆவதைப்போலவும் நீங்கும்.

இந்நாளில் உள்ளூர் மற்றும் வெளியூர் அன்பர்கள் கூட்டம். அலைமோதும். இப்புனித நாளில் சிவபூஜை செய்தாலும், சிவாலய வழிபாடு செய்தாலும், பஞ்சாட்சர ஜபம் செய்தாலும், தேவார திருமுறைகளை ஓதுதலும் பெறும் பயனளிக்கும்.

## மாத விழாக்கள்

**பிரதோஷம்:-**

**திருக்கயிலை மலையின் ஒரு துண்டு விழுந்த காரணத்தால், தென்கயிலாயம் என்று அழைக்கப்படுவதாலும், திருக்கயிலையில் இருப்பதைப்போன்று சிவனும், பார்வதியும் மலைமீது இருப்பதாலும், இங்கு பிரதோஷ தரிசனத்தை பெற்றவர்கள் திருக்கயிலை மலையில் சிவனையும், உமையம்மையையும் தரிசித்த பலனைப் பெறுவார்கள்.**

பிரதோஷ தினத்தன்று பிரதோஷ வேலையாகிய மாலை 4-30 மணி முதல், 6-00 மணி வரை சிவாலயத்தில் ஆலய வழிபாடு செய்தால், ஒருவருடம் ஆலயம் சென்று இறைவழிபாடு செய்த பலனும், சனிப்பிரதோஷத்தன்று சிவாலயத்தில் இறைவழிபாடு செய்தால் ஐந்துவருடம் தினமும் ஆலய வழிபாடு செய்த பலனும் கிடைக்கும்.

பிரதோஷ தினத்தில் நாகாபரண கட்டண சாத்துப்படி உண்டு.

கிரிவலம்:-

**இம்மலையைச் சுற்றி கிரிவலம் வந்தால் இயற்கையின் திருக்கோயிலாகிய திருக்கயிலையை வழிபட்ட நற்பேறுகளும் பலன்களும் கிடைக்கும்.**

**இம்மலையை அகத்திய முனிவர், சப்தமாதவர்கள் வலம் வந்து வணங்கி பேறு பெற்றுள்ளனர். சாரமாமுனிவர், ஸ்ரீமௌனகுரு, தாயுமானஅடிகள் போன்ற அருளாளர்களும், சைவ சமயக்குரவர்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள், ஐயடிகள் காடவர்கோன் போன்ற திருமுறை ஆசிரியர்களும். அருணகிரிநாதர், தண்டபாணிசுவாமிகள், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சைவ எல்லப்பநாவலர் போன்ற அருட்கவிகளும், பல்லவ, பாண்டிய போன்ற** மன்னர்களும் இம்மலையை வலம் வந்து வழிபட்டு பெறும் பேறு பெற்றுள்ளனர்.

எனவே தாயுமானவர் மலை எல்லைக்கடந்த இமயத்தில் உள்ள கயிலை மலையை வழிபடும் பேற்றினை வழங்கும் தென்கயிலாயத் திருமலையாகும்.

**"இட்டமாம் திருவினை இணங்க வேண்டிடில்**
**அட்டமா சித்தியும் அடைய வேண்டிடில்**
**திட்டமாப் பரகதி சேரவேண்டிடில்**
**மட்டு உலாம் திருமலை வலம் செய்வார்களே"**

**- செவ்வந்திபுராணம்**

அதாவது உள்ளம் விரும்பும் அளவு சகல செல்வங்களையும், பெற விரும்பினாலும், அட்டமாசித்திகளை அடைய விரும்பினாலும், உயர்ந்த பரகதியை சேரவிரும்பினாலும், மணம் வீசுகின்ற இத்திருமலையை வலம் வர வேண்டும் என கூறுகிறது.

கிரிவலப் பாதையில் கண்ணுக்கு புலப்படாத யோகியர்கள், முனிவர்கள், சித்தர்கள், மகான்கள், எப்பொழுதும் அரும் திருமேனியுடன் வலம் வந்துகொண்டிருப்பார்கள்.

எனவே இச்சிறப்பான மலையை வலம் வந்து இம்மை, மறுமை, பேறு சங்கநிதி, பதுமநிதி, மன நிறைவான நல்ல குடும்ப வாழ்வு நல்ல உடல் நலம் பெறுவோமாக.

அன்புடையீர்,

**அபிஷேக கட்டளை**

திருக்கோயில் மலையின் அடிவாரத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு **மாணிக்கவிநாயகர்** வேண்டுவோருக்கு வேண்டியதை தரும் வள்ளல். இவருக்கு மலையின் மேல் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு **மட்டுவார் குழலம்மை** சமேத கல்யாண அருள்மிகு **தாயுமானசுவாமி**க்கும் உச்சிமலையில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு **உச்சிவிநாயகருக்கும்** ஆறுகால பூஜை நடைபெற்றுவருகிறது. மேற்படி இந்த பூஜைக்கு குறிப்பிட்ட தொகையை செலுத்தினால் அத்தொகையை வங்கியில் முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டிலும் நன்கொடையாளர்

குறிப்பிடும் நாளில் அபிஷேக ஆராதனைசெய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டுகிறோம். கீழ்க்கண்ட விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்யபட்டுள்ளது.

| வ. எ ண் | தலைப்பு | கட்டண ம் ரூ. | முதலீட்டு த் தொகை (நிரந்தரம் ) ரூ. |
|---|---|---|---|
| 1 | அர்ச்சனை 1-க்கு | 50.00 | -------- |
| 2. | வாழைபழத்தார் கட்ட | 350.00 | -------- |
| 3 | அருள்மிகு மாணிக்க விநாயகர் அபிஷேகம் | 350.00 | 7,000.00 |
| 4 | அருள்மிகு மாணிக்க விநாயகர் சந்தனகாப்பு | 750.00 | 15,000.00 |
| 5 | அருள்மிகு உச்சிவிநாயகர் சந்தனகாப்பு | 750.00 | 15,000.00 |
| 6. | அருள்மிகு உச்சிவிநாயகர், அருள்மிகு தாயுமானசுவாமி மற்றும் அருள்மிகு மட்டுவார் குழலம்மை அபிஷேகம் (தலா) | 350.00 | 7,000.00 |
| 7 | கணபதிஹோமம் | 1,500.00 | -------- |
| 8 | மஹாலெஷ்மி ஹோமம் | 1,500.00 | -------- |
| 9 | ருத்ரஜபம் | 1,000.00 | -------- |
| 10 | சங்காபிஷேகம் | 5,000.00 | -------- |
| 11 | மாணிக்கவிநாயகர் தங்க கவசம் சாத்த | 100.00 | -------- |
| 12 | புதுகணக்கு போடுதல் | 250.00 | -------- |
| 13 | தாயுமானசுவாமிக்கு நாகாபரணம் சாத்துப்படி செய்ய | 100.00 | -------- |

(அபிஷேகம், சந்தனக்காப்பு, அன்னதானம், செய்ய விரும்புவோர் குறிப்பிட்ட தினத்திற்கு மூன்று தினங்களுக்குள் பணம் செலுத்தலாம்.)

**உதவிஆணையர்/செயல்அலுவலர்**
**அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்,**
**மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி-620 002, 0431-2704621**

**அன்னதான திட்டம்**

**திருக்கோயில் அன்னதான திட்டத்தில் அன்பர்கள் நன்கொடைவழங்கி**

**பங்கேற்க அன்பான வேண்டுகோள்**

காப்பியங்களிலும், இலக்கியங்களிலும், புராணங்களிலும் அன்னதானம் மிகவும் சிறப்பிக்க பெற்றுள்ளது. தானம் பெறக்கூடியவருக்கு திருப்தி அளிப்பது அன்னதானம் ஒன்றே. பொருள் பெற்ற ஒருவன் அதனை வைக்கக்கூடிய மிகச்சிறந்த இடம் பசித்தவர்களுக்கு “பசி தீர்த்தலே” ஆகும். இவ்வுலகில் பிற உயிர்களுக்கு உணவு வழங்கியவர்களே உயிர் கொடுத்தவர்களுக்குச் சமமாவர். “தானத்தில் சிறந்தது அன்னதானம்” தமிழகஅரசு அன்னதான திட்டம் இத்திருக்கோயிலில் 23-3-2002 முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தினந்தோறும் 200 நபர்களுக்கு நூற்றுக்கால் மண்டபத்தில் மதிய உணவு அளிக்கப்படுகிறது.

தாங்களும் இந்த அன்னதானதிட்டத்தில் கீழ்க்கண்ட விபரப்படி தொகை செலுத்தி பங்குபெறலாம்.

1-நாள் அன்னதானம் வழங்கும் திட்டம் ரூ. 4,000.00

நிரந்தர முதலீட்டுத் தொகை மூலம் ஆண்டுக்கு குறிப்பிட்ட ஒரு நாளில் அன்னதானம் வழங்கும் ஆயுள் திட்டம் ரூ. 50,000.00

சாதாரண பொதுமக்களும், சேவார்த்திகளும் அன்னதான திட்டத்தில் பங்குகொள்ள ஏற்றவாறு அன்னதான நன்கொடை சீட்டுகள் அச்சிடப்பட்டு **50/-, 100/-, 500/-, 1000/-**க்கானது விற்பனையில் உள்ளது. தாங்கள் விரும்பும் தொகையைச்

செலுத்தி நன்கொடை சீட்டுகள் பெற்றுக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். விபரங்களுக்கு திருக்கோயில் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அன்னதான நன்கொடை வழங்கும் அன்பர்களுக்கு 80-(ஜி)-ன்கீழ் வருமானவரி விலக்கு அளிக்கப்படுகறிது.

தொகை அனுப்பவேண்டிய திருக்கோயில் முகவரி

உதவிஆணையர்/செயல்அலுவலர்
அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்,
மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி – 620 002. போன்: 0431 – 2704621

**Web Site (இணையதளம்): www.trichyrockfort.tnhrce.in**

**E.mail : thiruchyrockforttemple@gmail.com**

**E.Pooja Booking – www.tnhrce.org**

**E.Pooja Ac No (ICICI Bank Trichy main): 613201206027**

<u>அன்னதான திட்டம்</u>

1. தினசரி 200 நபர்களுக்கும் உணவு வழங்கப்படுகிறது.
2. மார்ச் 2014 நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ஒரு இலைக்குஆகும் செலவு ரூ. 17.36 பைசா
3. மார்ச் 2014 வரவினம் ரூ. 99,710.00
4. மார்ச் 2014 செலவினம் ரூ.1,10,025.00

நன்கொடை மற்றும் காணிக்கை

திருக்கோயிலுக்கு நன்கொடை மற்றும் காணிக்கை செலுத்த விரும்புவோர் உதவி ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்,
மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி – 2.

என்ற விவரத்தில் வரைவோலை அல்லது காசோலை, மணியார்டர் மூலம் அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொலைபேசி எண்கள்

| | | |
|---|---|---|
| 1. உதவிஆணையர்/செயல்அலுவலர் | : | 9171878305 |
| 2. கண்காணிப்பாளர் | : | 9865150460 |
| 3. மேலாளர் | : | 9677967021 |
| 4. அலுவலகம் | : | 0431-270621 |
| 5. மேல்கோயில் பேஷ்கார் அ.மி தாயுமானசுவாமி திருக்கோயில் | : | 39942163041 |

6. அ.மி மாணிக்க விநாயகர் சன்னதி பேஷ்கார் : 9442114606

7. திருச்சிராப்பள்ளி கோட்டை காவல் நிலையம், : 0431-2704355

8. தீயணைப்புத் துறை நிலையம் : 0431-2462101

9. பொது மருத்துவ மனை : 0431-2771465
0431-2771466

## மார்க்கம் (வழித்தடம்)

**விமானதடம்:-**

திருக்கோயிலில் இருந்து 10-கி.மீ தொலைவில் உள்ளது செம்பட்டு என்ற விமான நிலையம். இவ்விடத்தில் இருந்து திருக்கோயிலுக்கு வர பேருந்து மற்றும் எண்ணற்ற ஊர்தி வசதிகள் உண்டு.

**புகைவண்டி தடம்:-**

1. திருச்சிராப்பள்ளி சந்திப்பு (ஜங்ஷன்) திருக்கோயிலில் இருந்து 5 கி.மீ தொலைவு.)
2. திருச்சி டவுன் புகைவண்டி நிலையம் (திருக்கோயிலில் இருந்து (1 கி.மீ) தொலைவு).
3. திருச்சிராப்பள்ளிகோட்டை புகைவண்டி நிலையம் (திருக்கோயிலில் இருந்து (1. கி.மீ) தொலைவு).

மேற்கண்ட இவ்விடங்களில் இருந்து திருக்கோயிலுக்கு வர பேருந்து மற்றும் பிற ஊர்தி வசதிகளும் உண்டு.

**பேருந்து தடம்:-**

1. மத்திய பேருந்து நிலையம் (திருக்கோயிலில் இருந்து 5. கி.மீ தொலைவு)
2. சத்திரம் பேருந்து நிலையம் (திருக்கோயிலில் இருந்து (1. கி.மீ தொலைவு).

2. மெயின்காட்கேட் (தெப்பகுளம்) இவ்விடத்தில் இருந்து ½ கி.மீ தொலைவு)

## பழைய திருப்பணிகள் வரலாறு

1). கொடும்பாளுர் என்னும் இடத்திலிருந்து கற்களும், பிற பொருட்களும் கொண்டு வரப்பட்டு மலைக்கோயில் கட்டப் பெற்றதாக அறிய முடிகிறது.

2). இயல்பாகவே திருமலைக் கொழுந்தாக முளைத்திருக்கும் மூலவரான சிவலிங்கப்பெருமான் அமைந்துள்ள கருவறைத் திருப்பணி திரிசிரன் செய்து இயற்றியதாகும்.

3). தாயுமானவர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள திருமதில் கண்டியன் தேவ மகாராஜா திருப்பணியாகும்.

4). அதைச் சுற்றியுள்ள கொடிமரத்துச் சுற்றுத்திருப்பணி, மன்னன் மகாபலி செய்ததாகும்.

5). மூலலிங்க மூர்த்திக்கு முன் உள்ள முன்மண்டபம் யாவும் சூரராக்க சோழமன்னன் செய்து இயற்றியது ஆகும்.

6). உச்சிவிநாயகர் திருக்கோயில், சகஸ்ரலிங்கர் திருக்கோயில், மட்டுவார்குழலம்மை திருக்கோயில் முன்மண்டபம், திருச்சுற்று மண்டபம் யாவும் சோழன் கரிகாலன் செய்து இயற்றியது ஆகும்.

7). மலையைச் சுற்றியுள்ள திருமதில்கள் யாவும் சூரராக்க சோழன் செய்த திருப்பணியாகும்.

8). வன்னியடிக்குத் தெற்கில் உள்ள நுழைவுவாயில் பிரவுட தேவமாராயர் செய்த திருப்பணி ஆகும்.

9). கி.பி.ஆறாம் நூற்றாண்டில், மகேந்திரவர்ம பல்லவன் மலைமேலும், மலையடிவாரத்திலுமாக இரண்டு குடைவரைக்கோயில்களைச் செய்த அமைத்துள்ளான். இவைகளுக்குத் தூபி விமானங்கள் இல்லை. அற்புதச் சிற்பங்கள் உள்ளன. வரலாற்றிற்கு உதவும் கல்வெட்டுக்கள் உள்ளன.

10). சாலிவாகன சகாப்தம் 1444 (கி.பி1522) இல் திருமலை நாயக்கர் கொடிமரத்து மண்டபத்திருப்பணியை மிகவும் விரிவாக செய்துள்ளார்.

11). சாலிவாகனம் 1487(கி.பி.1565)இல், திருக்கல்யாண நூற்றுக்கால் மண்டபம் பெரிய வீரப்பநாயக்கர் செய்த திருப்பணி ஆகும்.

12). பெரிய வீரப்ப நாயக்கர் காலத்தில் இருந்த தீப்பய்யர், கோடைத்திருநாள் மண்டபமும். கொலுமண்டபமும், திருப்பணி செய்துள்ளார்.

13). சாலிவாகனம் 1541 (கி.பி.1619) இல் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் கொட்டாரம், வன்னியடி மண்டபம் திருப்பணி செய்துள்ளார்.

14). சாலிவாகனம் 1630 (கி.பி.1708) இல் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில், செவந்தியாண்டி சேர்வைக்காரன் முன்னிலையில் அநுப்பி என்னும் தேவர் அடியார் வன்னியடிக்குக்கீழ் ஐந்நூற்றுக்கால் மண்டபம் திருப்பணி செய்துள்ளார். இப்பகுதிகள் அடைக்கப்பெற்றுக் கடைகள் ஆக்கப்பட்டுள்ளன. மலைவாசல் இராசகோபுரம் கிழுக்குத்தூணில் அநுப்பி அம்மாள் திருவுருவம் இருப்பதை இன்றும் காணலாம். முகலாயர் படையெடுப்பிற்கு முன், இங்கிருந்துதான், சுவாமி, திருவீதி உலாவிற்கு எழுந்தருளுவார்.

15). சாலிவாகனம் 1462 முதல் 1474 வரை (கி.பி.1540-1552) அரசு புரிந்த விசுவநாதநாயக்கர் காலத்தில் தெப்பக்குளம் நடுநீராழி மண்டபம் திருப்பணி செய்யப்பெற்றது.

16). திருநெல்வேலி தளவாய் முதலியார் அவர்களால், வசந்தவிழா கொண்டாடுவதற்காக உச்சிமலை வழியில் பதினாறுகால் மண்டபத்திருப்பணி நிறைவேற்றப்பட்டது.

## பிற்காலத் திருப்பணிகள்

1). 1888-ஆம் ஆண்டில் உச்சிமலைக்குப் போகும் வழியில் இருந்த பெரிய பள்ளம் தூர்க்கப்பட்டது. மேல்தளங்களில் தட்டோடுபோடப்பெற்றது. சித்திரமண்டபம் வண்ணம் வைக்கப்பெற்றது. அறுபத்துமூவர், தல அடியார்கட்குக் குறடுகள் கட்டப்பெற்றன. கொடிமரத்திற்குச் செப்புத்தகடு பொருத்தப்பெற்றது.

2). 1899-ஆம் ஆண்டு திருக்குடநீராட்டுச் செய்யப்பெற்றது.

3). 1907-ஆம் ஆண்டு, களவுபோய்ப் பழுதுபட்ட சுவாமி கோயில் விமானம் புதுப்பிக்கப்பட்டு திருக்குட நீராட்டுச் செய்யப்பெற்றது.

4). 1918-இல் மணிமண்டபத் திருப்பணி உறையூர் அன்பர் முயற்சியால் நிறைவேற்றப்பட்டது.

5). 1923- டிசம்பரில் அமைக்கப்பட்ட மின் இணைப்புகள் பழுதுபட்டதால், 1973, 74 இல் கல்கத்தா பிர்லா ஜான்ஹிட் அறநிறுவனத்தார் செலவில் முழுவதும் புதிய முறையில் மின் திருப்பணி செய்யப்பெற்றது. இது மிகப்பெரிய திட்டம் ஆகும்.

6). நாட்டரசன்கோட்டை அ.ச.வே.காசிவிசுவநாதன் செட்டியார் முயற்சியால், பதிய சித்திரத்திருப்பணிகள் செய்யப்பெற்றன. மலைவாசலில் புதிய கோபுரம் அமைக்கப்பெற்று 13-ஆம் 1927-இல் குட நன்னீராட்டு விழா வெகுவிமரிசையாக நடந்தது.

7). 1941 இல் கீழிருந்து மேல்வரையில் படியேறும் அடியார்கள் உதவிக்காக இரும்புக் கைப்பிடிக் குழாய்கள் சுவரில் பொருத்தப்பெற்றன.

8). 1944 - இல் திருப்பணிக்கு மேற்பார்வையில் கோபுரங்கள், விமானங்கள் பதிய வண்ணம் வைக்கப்பெற்றன. உச்சிமலைப்பாதை கல்திருப்பணி செய்யப் பெற்றது. தங்கக் கலசங்களில் சிதைந்த பகுதிகள் புதுப்பிக்கப்பெற்றன. மூல மூர்த்திகட்கு சாத்தப்பெற்றது. முன் வாகன மண்டபத்தில் பஞ்ச மூர்த்திகளின் உருவங்கள் சுதை வேலையில் புதியதாக அமைக்கப்பெற்றன. மாணிக்க விநாயகர் கோயில் திருச்சுற்று விரிவு செய்யப்பெற்று, மேல் தளமும் புதுப்பிக்கப்பெற்றது.

9). 1944 ஆண்டு ஜனவரி 31-ஆம் நாள் (தை-18) திங்கட்கிழமை அ்டபந்தன திருக்குட நீராட்டுச் செய்யப்பெற்றது.

10). 28-09-1966-இல் பொதுமக்கள் நன்கொடையாலும், உபயங்களாலும், திருப்பணிக்குழுவினர் முயற்சியாலும், பராபவ ஆண்டு ஆவணிமாதம் 13-ஆம் நாள், திங்கட்கிழமை குட நீராட்டு நடந்தது.

11). 7.7.77 அன்று (நள-பங்குனி-23) வியாழக்கிழமையில் மாணிக்க விநாயகர் திருக்கோயில் திருப்பணிக்குப் பின் குடநீராட்டுச் செய்யப்பெற்றது.

12). 17.111958 இல், மாணிக்க விநாயகர் சன்னதி எதிர் தியான மண்டபம் விரிவு செய்யப்பெற்று, தளவரிசைக்கற்கள் புதுக்கப்பிக்கப்பட்டு குட நீராட்டுச் செய்யப்பெற்றது.

13). 1966 ஆம் ஆண்டு, படிகளைத் திருத்தியும், இரும்புக் கைப்பிடிகள் அமைத்தும், சிற்பங்கள், ஒவியங்கள், விமானங்களுக்கு வண்ணங்கள் வைத்தும், மிகச்சிறந்த குட நீராட்டுப் பெருமக்கள் பலர் சூழ நடைபெற்று முடிந்தது.

14). 1983-ஆம் ஆண்டு பல பதிய திருப்பணிகள் செய்யப்பெற்றநிலையில், அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில், அருள்மிகு மட்டுவர் குழலம்மைத் திருக்கோயில், உச்சிவிநாயகர், மாணிக்கவிநாயகர் திருக்கோயில்கள், பிறபரிவாரக் கோயில்கள் குடநீராட்டு விழாச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

தருமையாதீனக் குருமகாசன்னிதானம், திருவாடுதுறை குருமகாசந்நிதானம், குன்றக்குடி, திருப்பனந்தாள் ஆதினத்துச் சந்நிதானங்கள் கலந்துகொண்டு பெருமை சேர்த்தனர். காஞ்சி காமகோடிபீடம், (புதுபெரியவர்) சங்கராச்சாரிய சுவாமிகளும் கலந்துகொண்டார்கள்.

## திருக்கோயிலைச் சார்ந்த சுற்றுக்கோயில்கள்

**1) தேசுமிக்க ஐயனார் (நயினார்) திருக்கோயில்:-**

இது வடக்கு உள்வீதிகளில் உள்ளது. கருங்கல், சுதைத்திருப்பணிகளை உடையது. நாள் வழிபாடுகள் நடைபெறகின்றன. பாதுகாப்புடன் பராமரிக்கப்பெற்றுவருகிறது.

**2) பிடாரி திருக்கோயில்**

இது வடக்கு ஆண்டார் தெருவில் இருந்து கிழப்புலிவார்டு சாலைக்குச் செல்லும் சந்தில் உள்ளது. இது எல்லைத் தெய்வம் ஆகும். நாள் வழிபாடு உண்டு. ஆண்டு உற்சவம் நடக்கிறது.

**3) ஆஞ்சநேயர் திருக்கோயில்:-**

இது நந்திகோயில் தெருவில் உள்ளது. திருப்பணி செய்யப்பெற்றுள்ளது. நாள்வழிபாடு நடைபெறுகிறது.

**4) நந்திகோயில்**

இது நந்திகோயில் தெருவில் உள்ளது. இதில் மலையை நோக்கிய வண்ணம் பெரிய நந்தி உள்ளது. நாள் வழிபாடு நடக்கிறது. அண்மையில் திருப்பணியுடன் குடநீராட்டு நடைபெற்றது.

**5) நன்றுடையான் திருக்கோயில்:-**

இது கீழப்புலிவார்டு சாலையில் உள்ளது. விநாயகர் மூலவர் பரிவார தெய்வங்களும் உள்ளன. நாள் வழிபாடு நடக்கிறது. இதையடுத்து நன்றுடையான் தீர்த்தம் உள்ளது.

**6) மூலைப்பிள்ளையார் திருக்கோயில்:-**

இது கீழ ஆண்டார், வடக்கு ஆண்டார் சந்திப்பில் கிழக்கு நோக்கி உள்ளது. நாள்வழிபாடு நடக்கிறது.

7) **தெப்பக்குளத்து மூலைக்கோயில்:-**

இது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில் தெப்பக்குளம் அருகில் உள்ளது. நாள்வழிபாடு நடக்கிறது.

8) **வன்னியடிக்கோயில்:-**

இது மலைவசல் அருகில் உள்வீதியில் மேற்குப்பகுதியில் வடக்கு நோக்கி உள்ளது. இது காவல் தெய்வம் ஆகும். நாள்வழிபாடு நடக்கிறது. சிறப்பு விழாக்களும் நடக்கின்றன.

9) **பிற கோயில்கள்:-**

சிறியனவும் பெரியனவுமானச் சுற்றுக் கோயில்கள் திருக்கோயிலைச் சார்ந்து உள்ளன. அவையாவும் நன்குப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## திருக்கோயில் நிர்வாகம்

**பழங்காலம்:-**

திருக்கோயில், முற்காலச்சோழர்கள் பாதுகாப்பில் இருந்து வந்துள்ளது. பல்லவ மன்னர்கள் திருப்பணிகள் செய்ததுடன் திருக்கோயிலையும் பராமரித்து வந்துள்ளனர். அவர்களுக்குப் பின் இடைக்காலத்து சோழர்கள் பாதுகாப்பில் இருந்துள்ளது.

**துறவிகள்:-**

பாண்டியர்கள் படையெடுப்பு நடந்தபோது, அவர்கள் அலுவலர்களை நியமனம் செய்து பாதுகாத்துள்ளனர். மீண்டும் சோழர்கள் பராமரிப்பிற்கு வந்துள்ளது. அவர்களை அடுத்து நாயக்க மன்னர்கள் திருப்பணி செய்தும் நிருவகித்தும் காத்துள்ளனர். ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில், திருக்கோயில், துறவிகள் பொறுப்பில் விடப்பெற்றுள்ளது.

**இந்துசமய அறநிலையத்துறை:-**

அக்காலத்தில் இருந்த, ஆலயப்பாதுகாப்புக்குழு **(Temple Committee)** நிர்வாகத்திலும், அதைத் தொடர்ந்து சென்னை மாகாண இந்துசமய அறநிலைய த்துறைப் பொறுப்பிற்கு வந்துள்ளது. முதலில் அறங்காவலர்கள் நியமிக்கப்பெற்று, அவர்களாலும், பின்னர் சிறந்த நிர்வாகத்திற்காகச் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பெற்று அவர்கள் பொறுப்பிலும் விடப்பெற்றுள்ளது.

அறங்காவலர், செயல் அலுவலர்களின் வேறுபட்ட பொறுப்புகளை நிர்ணயிக்கும் பொருட்டு ஒரு திட்டம்

(SCHEME) இந்துமசய அறநிலையத் துறையினரால் உத்தவு எண். 2601∴29-09-1938, 3343∴2-10-1946 இவைகளின்படிச் செயற்படுத்தப் பெற்று வருகிறது.

**காலங்கள்:-**

மலைக்கோயிலில் நடைபெறும் ஆறுகால வழிபாடுகளில் இரண்டுகால வழிபாடுகள் தருமபுர ஆதினத்திற்குச் சொந்தமான ஸ்ரீ மௌனமடம் கட்டளையால் நடத்தப்பெற்று வருகின்றன. அதற்கெனத் தனிச் சொத்துக்கள் உள்ளன. எஞ்சிய நான்குகால வழிபாடுகள் திருக்கோயில் நேரடி நிர்வாகத்தில் நடந்துவருகின்றன.

பழங்காலத்தில் ஒரு நிர்வாகத்தில் இருந்துள்ளது. பிற்காலத்தில் அறநிலையத்துறை ஆணைப்படி, இரண்டு நிர்வாகம் ஆக்கப்பட்டிருக்கலாம். ஸ்ரீ மௌனமடத்திற்குச் சொத்துக்களின் மூலம் பல இலட்சம் ஆண்டு வருமானம் வருகிறது. திருக்கோயிலுக்கு, நிலம், கடை, உண்டியல் மனைகள் மூலம் பல இலட்சம் ஆண்டு வருமானம் வருகின்றது.

அரசு ஆணையின்படி 1935 ஆம் ஆண்டு முதல் பலர் அறங்காவலர்களாக இருந்துள்ளனர். 1939-ஆம் ஆண்டு முதல் பலர் செயல் அலுவலர்களாக இருந்துள்ளனர்.

**தலமரம்:-**

வில்வமரம் தலமரம் ஆகும். இது பாராவாசல் நந்தவனத்தில் உள்ளது. தலவரலாறு, தலபுராணங்கள் உள்ளன.

**குடமுழுக்கு திருவிழா-**

முழுமையான பல திருப்பணிகளுக்குப்பின் மங்கலம் நிறைந்த விக்கிரம ஆண்டு ஆவணித் திங்கள் 25-ம் நாள் (10-09-2000) ஞாயிறு காலை 7-00 மணிக்குமேல் பரிவார மூர்த்திகளுக்கும், விமானங்களுக்கும் குடமுழுக்கு நடைபெற்றது.

**தலத்திருப்பதிகங்கள்**

**1). திருஞானசமபந்த சுவாமிகள் அருளியது.**

திருச்சிராப்பள்ளி பண். குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1. நன்றுடையானைத் தீயதில்லானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானை
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என் உள்ளம் குளிரும்மே

2. கைமகவேந்திக் கடுவனோடு ஊடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவறை ஏறும் சிராப்பள்ளி
வெம்முக வேழத்து ஈருரிபோர்த்த விகிர்தா நீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே

3. மந்தம் முழவம் மழலை ததும்ப வரை நீழல்
செந்தண் புனமும் சுனையும் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேல் உடையார் விடையூரும்
எந்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே.

4. துறைமல்கு சாரல் சுனைமல்கு நீலத்து இடைவைகிச்
சிறைமல்கு வண்டும் தும்பியும் பாடும் சிராப்பள்ளிக்
கறைமல்கு கண்டன் கனல்எரியாடும் கடவுள்எம்
பிறைமல்கு சென்னி உடையவன் எங்கள் பெருமானே.

5. கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலை வரையாகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவரல்லாமை உரைப்பீர்கள்
நிலவரை நீலம் உண்டதும் வெள்ளை நிறமாமே.

6. வெய்ய தண்சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செய்ய பொன்சேரும் சிராப்பள்ளி மேவிய செல்வனார்
தையலோர் பாகம் மகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமும் கொள்வர் யாரிவர் செய்கை அறிவாரே

7. வேயுயர் சாரல் கருவிரல் ஊகம் விளையாடும்
சேயுயர் கோயில் சிராப்பள்ளி மேவிய செல்வனார்
பேயுயர் கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்.
தீயுகந்து ஆடல் திருக்குறிப்பு ஆயிற்று ஆகாதே.

8. மலைமல்கு தோளான் வலிகெட ஊன்றி மலரோன்தன்
தலைகலனாகப் பலிதிரிந்து உண்பர் பழியோரார்
சொலவல வேதம் சொலவல கீதம் சொல்லுங்கால்
சிலவல போலும் சிராப்பள்ளிச் சேடர் செய்கையே.

9. அரப்பள்ளியானும் மலருறைவானும் அறியாமைக்
கரப்புள்ளி நாடிக் கண்டிலரேனும் கல்சூழ்ந்த
சிராப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீர் உம்மை ஏதிலர் கண்டால் இகழாரே

10. நாணாது உடைநீத்தோர்களும் கஞ்சிநாட்காலே
ஊணாப் பகல்உண்டு ஓதுவோர்களும் உரைக்கும்சொல்
பேணாதுறு சீர்பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே.

11. தேனயம்பாடும் சிராப்பள்ளி யானைத் திரை சூழ்ந்த
கானல்சங்கு ஏறும் கழுமல ஊரில் கவுணியன்
ஞான சம்பந்தன் நலமிகுபாடல் இவைவல்லார்
வான சம்பந்தத் தவரொடு மன்னி வாழ்வாரே.

**2). திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது.**

திருச்சிராப்பள்ளி திருக்குறுந்தொகை

1. மட்டுவார் குழலா ளொடு மால்விடை
இட்ட மாவுகந்து ஏறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க்கு இன்னருளே செய்யும்
சிட்டர் போலும் சிராப்பள்ளிச் செல்வரே.

2. அரியயன் தலைவெட்டி வட்டாடினார்
அரியயன் தொழுது ஏத்தும் அரும்பொருள்
பெரியவன் சிராப்பள்ளிப் பேணுவார்
அரியயன் தொழ அங்கிருப் பார்களே

3. அரிச்சி ராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு
சுரிச்சிராது நெஞ்சே ஒன்று சொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளி என்றலும் தீவினை
நரிச்சிராது நடக்கும் நடக்குமே.

4. தாயுமாய் எனக்கே தலைக் கண்ணுமாய்
பேயனேன் எனையும் ஆண்ட பெருந்தகை
தேயநாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனார் எனநம் வினை நாசமே

**3) ஐயடிகள் காடவர்கோன் இயற்றிய திருத்தலவெண்பா**

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடலிரா வண்ணம் - அழிந்த
திராமலையா கொண்டுபோ வென்னாமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.

4) **திருவாசகப்பாடல்**

1) “சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி”

2) நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனதுள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றுதாய் கோத்தும்பீ!

5) **பொய்யாமொழிப் புலவர் பாடல்கள்**

1) கோட்டாற் பொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுத்துக் - காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் சுரந்தான் மலை.

2) அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட்டி யானையைத் தேடி
விதம்விதமாய்ச்
சிங்கமிருந்து தனித்தனிந் நோக்கும் சிராமலையே.

6) **தனிப்பாடல்**

முலையும் குழலும் முளைப்பதற்கு முன்னே
கலையும் வளையும் கழன்றாள் - மலையில்
சிராப்பள்ளியா னேறிவரும் சேவின்மணி யோசைக்
சிராப் பளியுங் கொள்ளா ளிவள்.

7) **மூவரம்மானைப்பாடல்**

சிரிபுர மாவீரர் செட்டிமகட் காவேடம்
தரித்து மருத்துவம்செய் தாயானா ரம்மானை
தரித்து மருத்துவம்செய் தாயானா ராமாயின்
மருத்தெண்ணெய்ச் சிக்கின்றி மணமிவர்க்கே தம்மானை
மட்டுவார் குழலிருக்க மணமரிதோ வம்மானை.

8) **தாயுமான அடிகள் திருப்பாடல்கள்**

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்த தெது தன்னருள் வெளிக்குள்ளே
அகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்த தெது மன வாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய் எந்தெய்வம் மென

றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவ ழக்காய்
யாதினும் வல்ல வொரு சித்தாகியின் பமாய்
என்றைக்கு முள்ள தெது மேல்
கங்குல் பகலற நின்ற எல்லையுள தெது அது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலா மோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ்சலி செய்வோம்.

2. எடுத்ததேகம் பொருளாவி மூன்று நீ
யெனக்கொன் றில்லையென மோன நன்னெறி
கொடுத்தபோது கொடுத்தன் றோயினும்
குளறி நானென்று கூத்தாட மாயையை
விடுத்த வாறுங்கண்ணீரொடு கம்பலை
விலகு மாறுமென் வேட்கை ப்ரவாகத்தை
தடுத்த வாறும் புகலாய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே

3. நோயும் வெங்கலிப் பேயுந் தொடரநின்
நூலிற் சொன்ன முறையிய மாதிநான்
தோயும் வண்ண மெனைக்காக்குங் காவலும்
தொழும்பு கொள்ளுஞ் சுவாமியு நீ கண்டாய்
ஓயுஞ்சன்ம மினியஞ்ச லஞ்சலென்று
உலகங் கண்டு தொழவோ ருருவிலே
தாயுந் தந்தையுமானோய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே

4. தந்தை தாயுநீ யென்னுயிர்த் துணையுநீ
சஞ்சல மது தீர்க்க
வந்த தேசிக வடிவுநீ யுனையலால்
மற்றொரு துணை காணேன்
அந்த மாதியு மளப்பருஞ் சோதியே
ஆதியே யடியார்தம்
சிந்தை மேவிய தாயுமான வனெனும்
சிரகிரிப் பெருமானே.

5. ஐவகையெனும் பூதமாதியை வகுத்ததனு
ளசரசர பேதமான
யாவையும் வகுத்து நல்லறிவையும் வகுத்துமறை
யாதி நூலையும வகுத்துச்
சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ யுன்னை நானணுகவும்
தண்ணருள் வகுக்க விலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யறிவிற்
போதபரிபூரண வயண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே
தெய்வமறை வடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தஷிணா மூர்த்தியே
சின்மயானந்த குருவே.

6. ஐந்துவகை யாகின்ற பூதமுதல் நாதமும்
அடங்க வெளியாக வெளி செய்
தறியாமை யறிவாதி பிரிவாக அறுவார்கள்
அறிவாக நின்ற நிலையில்

சிந்தை யற நில்லென்று சும்மா இருத்தி மேல்
சின்மயா னந்த வெள்ளந்
தேக்கித் திளைத்து நான் அது வாயிருக்கநீ
செய்சித்ர மிகநன் றுகாண்
எந்தைவட வாற்பரம் குரு வாழ்க வாழ அரு
ளியநந்தி மரபு வாழ்க
என்றடியா் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுரு வேவீறு சிஞான சித்தி நெறி
மௌ னோப தேச குருவே
மந்த்ர குரு வேயோக தந்ரகுரு வேமூலன்
மரபில் வரு மௌன குருவே.

9) **அருணகிரிநாதா் திருப்புகழ்கள்**

பகலவன் ஒக்கும் கனவிய ரத்நம்
பவள வெண்முத்தம் - திரமாகப்
பயில முலைக்குன்றுடையவா் சுற்றம்
பரிவென வைக்கும் - பண ஆசை
அகமகிழ் துட்டன் பகிடி மருள் கொண்டு
அழியும் அவத்தன்-குண ஈனன்
அறிவிலி சற்றும் பொறையிலி பெற்றுண்டு
அலைதல் ஒழித்து என்று-அருள்வாயே

சகலரும் மெச்சும் பரிமள பத்மம்
தருண பதத்திண்-சுரலோகத்
தலைவா் மகட்கும் தகுறவா் மகட்கும்
தழுவ அணைக்கும்-திருமாா்பா
செகதலம் மெச்சும் புகழ் வயலிக்கும்
திகுதிகெனப் பொங்-கியவோசை
திமிலைதவில் துந்துமிகள் முழக்கும்
சிரகிரி யிற்கும் - பெருமாளே.

ஒருவரோடு கண்கள் ஒருவரோடு கொங்கை
ஒருவரோடு செங்கை-உறவாடி
ஒருவரொடு சிந்தை ஒருவரொடு நிந்தை
ஒருவரொடு இரண்டும்-உரையாரை

மருவ மிக அன்பு பெருக உளதென்று
மனை நினையும் இந்த – மருள்தீர

வனசம் என வண்டு தனன என்று
　　மருவு சரணங்கள் - அருளாயோ
அரவம் எதிர்கண்டு நடு நடு நடுங்க
　　அடல் இடு ப்ரசண்ட்-மயில் வீரா
அமரர் முதல் அன்பர் முனிவர்கள் வணங்கி
　　அடிதொழ விளங்க-வயலூரா

திருவை ஒருபங்கர் கமலமலர்வந்த
　　திசைமுகன் மகிழ்ந்த-பெருமானார்
திகுதகுதி என்ற நடமிடமுழங்கு
　　த்ரசிரிகிரி வந்த – பெருமாளே.
குமுத வாய்க்கனி அமுத வாக்கினர்
　　கோலே வேலே சேலே போலே – அழகான
குழைகள் தாக்கிய விழிகளால் களி
　　கூரா வீறா தீரா மாலாய்-அவரோடே

உமது தோட்களில் எமது வேட்கையை
　　ஒரீர் பாரீர் வாரீர் சேரீர்-எனவே நன்று
உடைதொடாப் பணம் இடை பொறாத் தனம்
　　ஊடே வீழ்வேன் ஈடேறாதே-உழல்வேனோ

தமர வாக்கிய அமரர் வாழ்த்திய
　　தாதாவே மாஞாதாவே-தோகையில் ஏறீ
சயில நாட்டு இறை வயலி நாட்டு இறை
　　சாவா மூவா மேவா நீவா-இளையோனே

திமிர ராக்கதர் சமர வேற்கர
　　தீரா வீரா நேரா தோர-உமைபாலா
திருச்சிராப்பள்ளி மலையின் மேல் திகழ்
　　தேவே கோவே வேளே வானோர்-பெருமானே

10) **செவ்வந்திப் புராணப்பாடல்கள் (தலபுராணங்கள்)**

சொற்கொண்ட கிளி அனையார் அனங்கனுக்குத்
　　துணையாக துணைப் புரூர
வில்கொண்டு விளையாடும் திரிசிராமலையில்
　　உரை விமலன் தன்னைப்
பென்கொண்ட நிறத்தானும் கரியமுகில்
　　நிகர்வானும் புலரா வண்ணம்

மல்கொண்ட மிற்றானைச் செவ்வந்திப்
பெருமானை அகத்தில சேர்ப்பாம்.

பனிக்கொள் வரையில் பிறந்தபிடி பரனார் இடத்தில்
படர்ந்தகொடி
முனிவர் இமையோர் மகிழ அறம் முப்பத்திரண்டும்
வளர்த்தருளும்
வனிதை வடிவேலனைப் பயந்த மடந்தை
மட்டுவார்குழலாள்
இனிய பதமாம் இருபோதும் தலைமேல் தரிப்பாம்
இருபோதும்.

**எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்**

இக்கதை பலவும் முனிவர்தம் செவியில்
இனிய வார் அமிர்தம் என இசைத்த
மெய்க் கவுதமனை வணங்கி மாதவர்கள்
வினவு வார் அனக மாதவனே
தெக்கண கயிலை மலை சிராமலையாம்
திருப்பெயர் படைத்திடு சிறப்பை
முக்கணன் அருளால் மொழிக என்று உரைத்தார்
முனிவனும் அவர்க்கு இவை மொழிவான்.

முற்பிறப்பின் இயல்பு அறிந்த முனிவில் சாரமுனிவனும்
தெற்கு இடத்தின் மேவி மிக்க திரிசிரா மலைக்குள் வாழ்
பார்ப்பதக் கொழுந்தரான பரமர் பாத மலரின் மேல்
அற்புதத்தின் அரிய போது சொரியும் வண்ணம்.
அணுகினான்.

குழவி ஈன்றவட்கு அருமருந்து எண்ணெயும் கொடுத்தே
எழு தினத்து அளவு இழைத்திடும் செயல் எலாம் இயற்றி
அழகு தொட்டிலுள் துயிற்றி அங்கு ஒரு மதி அளவாம்
மழ களிற்றினை முருகவேள் எனும் படி வளர்த்தாள்.

**(11-சுருக்கம், 550 பாடல்களையுடையது சைவ எல்லப்ப நாவலர் இயற்றியது)**

11) **சிராமலை அந்தாதிப்பாடல்கள்**

மெல்லிய செந்தமிழ் மாலைக்கு மெய்ப்பொருள்
வேண்டும் எனச்
சொல்லிய கோவிற்கு அருள் செய்தவன் சுழலும் முகிலை
வல்லிய மால் களிறு என்று தன் வாள் உகிரால் கதுவச்
செல்இழி சாரற் சிராமலை மேய திருவடியே.

உறைவாய் சிராமலை உள்ளும் என் சிந்தையின்
உள்ளும் என்றும்
பிறைவாய் மழுவாள் பெரியவனே நுன் பியற்கு அணிந்த
கறைவாய் அரவம் கடியா வகை அடியேன் அறியேன்
அறைவாய் அழல் உமிழும் புரிந்தாடி அலமருமே.

இனிச் செல்வர் முன்கடைக்கு என் செயச் சேறும்
இனைய நெஞ்சே
கனிச் செல்வமாம் பொழில் காவிரித்
தென்கரைப் பூவிரிக்கும்
முனிச் செல்வர் சேரும் சிராப்பள்ளி
மேய முக்கண் சுடரைத்
தனிச் செல்வனைப் பணிந்து உள் அமிர்து
ஊறித் தடித்தனமே.

ஈன்றாள் வருந்த இம்மைப் பிறந்து அம்மைக்கு
இரங்கி நையும்
ஊன்தாய் மடிக்கொண்டு ஒளிப்போம் வெளிப்பட்டு
ஒருங்கி நின்றோம்.
தேன் தாழ் சிராமலை வாரியின் மூரித் தெய்வக் களிறே.
தோன்றய் எமக்கு ஒருநாள் வினைப்பாசத்
தொடர் அறவே.
மாடமதுரை மணலூர் மதில் வேம்பை
கோடமர் சேய்ஞ்ஞலூழ் குண்டூரிந்-நீடிய
நற்பதிக் கோன் நாராயணன் சம் சிராமலைமேல்
கல் பதித்தான் சொன்ன கவி.

(வேம்பையர்கோன் நாராயணன் இயற்றியது 104 பாடல்களையுடையது. குகைக்கோயில் கல்வெட்டுக்களாக உள்ளது.)

## திருத்தல இலக்கியங்கள்

1. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் -1
2. திருநாவுக்கரசர் திருப்பதிகம் -1
3. ஐயடிகள் காடவர்கோன் பாடல் -1
4. பொய்யாமொழிப்புலவர் பாடல்கள் -2
5. தனிப்பாடல் -1
6. மூவரம்மானைப்பாடல் -1
7. திருவாசகப்பாடல் -1
8. தாயுமானஅடிகள் பாடல்கள் பல
9. செவ்வந்திப்புராணம் -11-சுருக்கம் 550 பாடல்கள்
10. சிராமலை அந்தாதி – 104 பாடல்கள்
    (வேம்பையர் கோன் நாராயணன்)
11. சிராமலைக்கோவை – 480 பாடல்கள்
12. சிராமலைக்கோவை – 458 பாடல்கள்
    (முத்துக்குமாரசுவாமி கவிராயர் மாணவர்)
13. சிரகிரி உலா – ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
14. திருச்சிராமலை பதிற்றுப்பத்தந்தாதி (ஆ.பெ.தெ.) (52 பாடல்கள்)
15. திருச்சிராமலைசைவ திரிபந்தாதி 102 பாடல்கள் தண்டபாணிசுவாமிகள்.
16. சிராமலை அந்தாதி (மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)
17. திருச்சிராமலை ஆறெழுத்துத் திருப்புகழ்-8 பாடல்கள்
    (தண்டபாணிசுவாமிகள்)
18. திருச்சி சக்தி தாழிசைமாலை (34-பாடல்கள்)
    (தண்டபாணிசுவாமிகள்)
19. உச்சிவிநாயகர் பதிகம் (12 பாடல்கள்)
    (தண்டபாணிசுவாமிகள்)
20. திருச்சிராமலைப் பதிகம்(சிவன்)12-பாடல்கள் (தண்டபாணிசுவாமிகள்)
21. தியாகராஜசுவாமிகள் கீர்த்தனைகள்
22. முத்துசாமி தீட்சிதர் கிருதிகள்
23. மாணிக்கவிநாயகர் மாலை – 32 பாடல்கள்